நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 152 ஓகஸ்ட் 06 - 19, 1998 விலை ரூபா 10.00

## தொடரும் தணிக்கை: 63வது நாள்






# நாடு பூராவும் அவசர காலச் சட்டம் !

வடக்கு முஸ்லிம்கள் :
**புலிகளிடம் சில கோரிக்கைகள் !**

வவுனியா :
**புளொட்டின் மிரட்டல் !**

பத்திரிகையாளர் கைது :
**நழுவும் வீரகேசரி !**

திருமலை :
**கெரில்லாக் குடியேற்றம் !**

## இன்னொரு "17 ஆண்டு காட்டாட்சி"யின் ஆரம்பம் ?

எதிர்பார்த்தபடி நாடு முழுவதும் அவரசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு விட்டது. அரசாங்கத்தினதும் ஆளுங்கட்சியினதும் நலன்களைப் பேணுவதற்காக இவ்வாறு அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படுவது இது முதற்தடவையல்ல. முன்னை அரசாங்கங்களின் ஆட்சியின் போதும் ஏன் இதே பொ.ஐ.மு ஆட்சியின் போதும் கூட இவ்வாறு அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் பிரகடனம் செய்யப்பட்டு வந்திருக்கிறது.

கடந்த இரு தசாப்தங்களில் பெரும்பாலான வருடங்கள் அவசரகால சட்டத்தின் கீழான ஆட்சியையே இந்த நாடு கண்டு வந்துள்ளது.

அவசரகாலச் சட்டம் என்பது இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலையுள்ளதென ஜனாதிபதி கருதும் பட்சத்தில் அவரால் பிரகடனப்படுத்தப்படும் ஒரு சட்டமாகும். தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு பிரகடனப்படுத்தப்படும் இச்சட்டம் சாதாரண சட்டங்களின் கீழான நடைமுறைகளை ஒதுக்கி விட்டு துரிதகதியில் நடைமுறையில் இயங்க பாதுகாப்பு படைகளுக்கு அதிகாரம் வழங்குகிறது. தவிரவும் பாதுகாப்பு நலனை அடிப்டையாகக் கொண்டு வேண்டிய சட்டங்களில் வேண்டிய மாற்றங்களை செய்ய ஜனாதிபதிக்கு இதன் மூலம் அதிகாரம் வழங்கப்படுகிறது.

கடந்த கால ஜனாதிபதிகள் இச்சட்டத்தைப் பயன்படுத்தி இந்த நாட்டில் ஒரு காட்டாட்சியையே நடத்தியிருக்கிறார்கள்.

(➔ 2ஆம் பக்கம்)

நன்றி - நூலகத்திட்டம்



# மாற்று 'சார்க்' மாநாடு!

சார்க் அமைப்புக்கு எதிரான மாற்று அமைப்பாகத் தெற்காசிய மக்கள் ஒத்துழைப்பு என்ற அமைப்பொன்று உருவாகியுள்ளது. அதில் பல்வேறு உள்ளூர் மற்றும் தென் ஆசிய வலைப்பின்னல் அமைப்புகளும் அங்கம் வகிக்கின்றன. அவை மனித உரிமைகள், தொழிலாளர்கள், பிள்ளைகள், பெண்கள் உரிமைகள், விவசாயம், சூழலியல் பற்றியவை மற்றும் மாற்றுத் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் சம்பந்தமான விடயங்களில் ஈடுபடுபவையாகும். அதன் மாநாடு ஜுலை 26 ஞாயிறு அன்று நவரங்கஹல மண்டபத்தில் நடைபெற்றது.

சார்க் அமைப்பின் மக்களுக்கு எதிரான நிலைப் பாடுகளுக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், அவை பற்றி விரிவான மகஜர் ஒன்றையும் பத்தாவது சார்க் மாநாட்டிற்குச் சமர்ப்பித்துள்ளது. இம் மாற்று மாநாட்டில் பல தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர். இலங்கையச் சேர்ந்தவர்களுள் வாசுதேவ நாணயக்கார பா.உ.வும் கலாநிதி சுனில் விஜேசிறிவர்தனவும் அடங்குவர். இருந்தாலும், மேலும் பலருக்கு "விஸா" அனுமதி இலங்கை அரசினால் நிராகரிக்கப்பட்டு வழங்கப் படாமையினால் அவர்கள் அனைவராலும் வந்து கலந்து கொள்ள முடியவில்லை.

இந்தியாவின் மத்திய பிரதேசத்திலிருந்தே நர்மதா நதி ஆரம்பிக்கிறது. அது, இந்தியாவின் மேற்குப் பகுதியிலுள்ள அரபிக் கடல் வரை 1312 கிலோ மீற்றர் வரை நீண்டு செல்கிறது. உலக வங்கியின் ஆலோசனையின் மீது, இந் நதிப் பகுதியை அபிவிருத்தி செய்யும் தீவிர அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது.

அந்த அமைப்புக் காரணமாக குஜராத், மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய பிராந்தியங்களின் 245 கிராமங்களும், காடுகளும் மற்றும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் தமது வாழ்விடங்களை இழக்கவிருந்தனர். இதற்கு முகங்கொடுத்த மக்கள், ஸ்தாபன மயப்பட்டு, அமைப்பாகி இந்திய அரசுக்கும், உலக வங்கிக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் செய்யத் தழைலமை வகித்தவர் *மே(த்)தா ப்ட்கர்* ஆவார். *"நர்மதா ப(ச்)சோ ஆந்தோலன்"* என்ற அத் தீவிர ஆர்ப்பாட்ட இயக்கம் காரணமாக இறுதியில் இந்திய அரசுக்கு அதனைக் கைவிட வேண்டி ஏற்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இலங்கையில் நடை பெற்ற இம் மாநாட்டிற்காக வந்திருந்த போது மே(த்)தா ப்ட்கர் *"யுக்திய"*வுக்கு அளித்த நேர்காணலில், கொழும்பில் நடைபெறும் சார்க் அரச தலைவர்களின் மாநாடு தொடர்பாக இவ்வாறு தெரிவித்தார்:

"உண்மையிலேயே, தென்னாசிய நாடுகளிடையே பிராந்திய ஒத்துழைப்பு அத்தியாவசியத் தேவையாகும். அவர்களுக்கு அம் மாநாட்டினுள் தென்னாசியப் பிராந்தியமாக ஒன்றுபட்டிருக்க ஒரு பலமான அடிக்கல்லை வைக்க முடியுமானால் அதனூடாக, உலக வங்கியினூடாகச் செயற்படும் சக்திகளுக்கு சவால்கள் விடுக்கக் கூடியதாக இருக்கும். ஆனாலும், முன்னைய சார்க் மாநாடுகளின் இறுதி அனுபவங்கள் மீது பார்த்தால், அது கனவொன்று மட்டுமே. மாநாட்டினுள் கலந்துரையாடப்பட்டு, எடுக்கப்படும் முடிவுகளுக்கு முழுமையாகவே எதிர்மாறானவைகளே செயற்படுத்தப் படுகின்றன. உதாரணமாக, பிராந்தியத்தில் வறுமையை இல்லாது ஒழிக்கத் தீர்மானம் எடுத்த சார்க் தலைவர்கள், அவர்களின் அடுத்த மாநாட்டினை மிகுந்த ஆடம்பரத்துடனேயே கொண்டாடினர். இவ்வாறான ஒன்று இப் பிராந்தியத்துக்கு ஒவ்வாததனாலேயே

நாம் "தென் ஆசிய மக்கள் ஒத்துழைப்பு" என்ற அமைப்பு ஒன்றைக் கட்டி எழுப்பி சார்க் அரச தலைவர்களிடம் வற்புறுத்தத் தீர்மானித்தோம். எமது முக்கிய கோரிக்கையானது சார்க் நாடுகள், மக்களைப் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதில், மக்கள் ஒத்துழைப்பு வெளித் தெரியும் விதத்தில் பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரப் பரவலாக்கம் செய்யுமாறு கோருவது ஆகும்."

தொலைத் தொடர்பு சாதனங்களின் அண்மைக் கால வளர்ச்சி காரணமாக உலகம் தற்போது உலகமயமாகியுள்ள நிலைமையொன்றினுள் உலகமயமாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அர்த்தமற்ற விடயமொன்று என்ற தர்க்கம் ஒன்று எழுந்துள்ளது. நீங்கள் அதனுடன் உடன்படுகிறீர்களா? என்ற யுக்தியவின் கேள்விக்குப் பதிலளித்த அவர் "இந்தத் தர்க்கத்துக்கு, ஏதாவது அர்த்தம் இருக்கின்றதென்றால் அது, உலகெங்குமுள்ள வறியவர்களின் நம்பிக்கையீனம், உலகமயமாதலுக்கு உள்ளாகியுள்ளதாலேயே ஆகும். ஆனாலும் தொலைத் தொடர்புத் தொழிநுட்பத்தில், உலகமயமாதலின் பிரதிபலன், சிவில் சமூகத்தின் பெரும்பான்மைக்குக் கிடைக்க மாட்டாது. சமூகத்தின் உபரி உரித்துடையதாக உள்ள பிரபுக்கள் வர்க்கமொன்றின் குரலும், பொருளாதாரத் தேவைகளும் மட்டுமே உலகமயமாக்கப்பட்டுள்ளது. உலகுக்கு உழைப்பை வழங்கும், சேவையை வழங்கும் ஏழைகளின் பிரச்சினைகள், தேவைகள் உலகமயமாக்கப்படவில்லை. ஆனால் இவ் வறியவர்களுக்கும் உபரி உரித்துடையது என்பதை மறக்கக் கூடாது. அது இயல்பான வளங்களும், உழைப்பும் ஆகும். இவ் உபரி, உலகமயப்படுத்தலினுள் பிரச்சாரப்படுத்தப் படவில்லை. சமூகத்தினுள் உள்ளக முரண்பாடு, உள்ளக அரசியல் உலகமயமாக்கப்படவில்லை. சில இடங்களில் மிகச் சிறு மட்டத்தில் அம் மக்களின் குரல்கள் எழுந்து வந்தாலும் அவை போதியனவாக இல்லை. முழுமையாக எடுத்துக் கொண்டால் தொலைத் தொடர்புப் பிரச்சாரங்களின் ஊடாக மனித இனத்துவத்தைக் கரைத்து இல்லாதொழித்து, முழுமையாகவே உலகமயமாக்கப்பட்ட பாவனையாளர் சமூகமொன்றை உருவாக்குவதேயாகும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**தொகுப்பு: சி.செ.ராஜா.**

# மறுக்கப்படும் நியாயங்களிற்காக

என் ஞாபகம் சற்று பின்நோக்கி போகின்றது. லலித் அத்துலத் முதலி 1993இல் சுடப்பட்ட சம்பவம். அவரைச் சுட்டது புலிகள் தான் என்று நிரூபிக்க அன்றைய அரசும், இனவாத இயந்திரங்களும் பட்ட பாடு நினைவிற்கு வருகின்றது. ரகுநாதன் எனும் அப்பாவித் தமிழ் மகனை புலியாக்கினர். அருகில் இருந்து சயனைட் குப்பியை மீட்டதாகக் கதையளந்தனர். தமிழர் தான் காரணம் என்றனர். பின் வரலாறு ரகுநாதனை விடுவித்தது. பிரேமதாச தான் காரணம் என்றது. ரகுநாதனை வைத்து இட்டுக் கட்டிய கதை அம்பலமானது. அவனை பயங்கரவாதியாகப் பறை சாற்றிய பத்திரிகைகள் ஒரு சிறு மன்னிப்பையாவது கேட்கவில்லை. அரசு மாறுகிறது. நாரஹேன்பிட்டிய பௌத்த விகாரைக்குள் குண்டு முளைக்கிறது. தர்மலிங்கம் எனும் அரசாங்க உத்தியோகத்தரை பயங்கரவாதியாக்கினர். தமிழ் மக்களின் உரிமைக்காகவே தாம் குரல் கொடுப்பதாக கூறும் தினமுரசில் இருந்து சகல பத்திரிகைகளும் அவரை புலியாக்குகின்றன. மீண்டும் தமிழர் சமூகத்தைப் பயங்கரவாதியாகக் காட்டும் கதைசோடிப்பு நடைபெறுகிறது. பின் சில மாதங்களில் அவை பொய்யானவை என நிரூபிக்கப்பட எந்த சத்தமும் இல்லாமல் இனவாதப் பத்திரிகைகள் அடங்குகின்றன. இன்று மீண்டும் எந்தவிதமான நிரூபணமும் இல்லாமல், வெறும் சந்தேகம் ஒன்றை மட்டுமே ஆதாரம் எனக் கொண்டு தமிழ்ப் பத்திரிகையாளர்களை பயங்கரவாதிகளாக காட்டுகின்றனர். இதில் பாதுகாப்பு அமைச்சகமே ''சந்தேகம்; குற்றவாளியா என விசாரிக்கின்றோம்'' என உறுதியாகத் தெரிவிக்காமல் இருக்கும்போது மிட்வீக் மிரர் அவர்களை பயங்கரவாதிகளாகவே ஆக்கி ஆசிரியர் தலையங்கம் எழுதுகிறது. (Midweek Mirror - July 29th) பத்திரிகைச் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி விட்டார்கள் என ஒலமிடுகிறது. ஏனைய இனவாதப் பத்திரிகைகளும் அதையே செய்ய விளைகின்றன. இதுவும் இன்னொரு இட்டுக் கட்டிய கதையாக இருக்குமோ என ஏன் இவர்கள் எண்ணவில்லை? நிரூபிக்கப்படாதவரை குற்றம் சுமத்தப்பட்டவரை குற்றவாளி எனக் கூறுவது கூட குற்றச் செயல் என இவர்கள் ஏன் அறியவில்லை. அல்லது அறிந்தும் அக்கறை கொள்ளவில்லை. நாளை இன்னும் பலரை அவர்கள் பத்திரிகையாளர்களாக இருந்தாலும் சரி வேறு யாராக இருந்தாலும் சரி, அரசு சந்தேகப்படும்போது அவர்களையும் இவர்கள் நிச்சயமாகப் பயங்கரவாதிகளாகவே முத்திரை குத்திக் காட்டுவர். இவர்களிற்கும் உள்ளூரத் தெரியும், இது மற்றுமொரு சோடிப்பு கதை என. ஆயினும், அவர்களின் இனவாத வெறிச் சிந்தனையில் தமிழர் சமூகத்தை ஒட்டுமொத்தமாக அழிக்க இந்த தத்துவார்த்தம் (Ideology) பேருதவி செய்யும் என அவர்களிற்கு நன்கு தெரியும். இது வேதனையான விடயம்தான். மக்களிற்கு உண்மைகளைக் கூறவேண்டிய பத்திரிகைகள் இன அழிப்பிற்கு உதவி செய்வதாக கூறவேண்டிய நிலை வருவது வேதனையான விடயம்தான். ஆனால் உண்மை அதை ஆயிரம் மடங்கு அழுத்திச் சொல்லும்போது எவ்வாறு உணரமால் இருக்க முடியும். உணர்ந்து வெளிப்படையாக எழுதாமல் இருக்க முடியும்? இங்கு பத்திரிகைச் சுதந்திரம், மனித உரிமை, ஜனநாயக முறை என்பன எல்லாம் சிங்கள மக்களிற்கு மட்டுமே உரித்தானது என அவற்றை பாதுகாப்பதாக அறைகூவும் இயக்கங்களே எமக்கு சொல்லாமல் செயலால் உணர்த்தும் போது தமிழ் மக்கள் யாரிடம் போய் நியாயம் கேட்க முடியும்? - தன் எழுச்சி கொள்வதை தவிர.

# அவசர...

இப்போது சந்திரிகாவும் அதே சட்டத்தைப் பயன்படுத்த முனைந்துள்ளார்.

சார்க் முடிந்த களை மாறுமுன்னரே அது முடியும் வரையில்லாத தேசிய பாதுகாப்பு நிலைமை திடீரென அவசரகாலச் சட்டம் பிரகனடப்படுத்தப்படும் அளவுக்கு அப்படி என்னதான் பாதுகாப்பு பிரச்சினை வந்துவிட்டது.

உண்மையில் பாதுகாப்புப் பிரச்சினையென்பது வெறும் சாக்குத் தான். அரசாங்கமும் ஜனாதிபதியும் தாம் நினைத்தபடி சர்வாதிகாரமாக செயற்படவே இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யூலை 4ஆம் திகதி முதல் நாடு முழுவதுக்குமான அவசரகாலச் சட்டத்தை பிரகடனம் செய்யும் வர்த்தமானி ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபந்தி அவர்களது கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைக்க அரசு உள்ளூரத் தீர்மானித்து விட்டதையும் மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதாயின் அரசியலமைப்பின்படி அவசரகாலச் சட்டத்தின் கீழேயே செய்ய முடியும் என்பதையும் கூடியவிரைவில் நாடு முழுவதும் அவசர கால சட்டம் பிறப்பிக்கப்படவிருக்கிறது என்பதையும் சரிநிகர் ஒரு மாதத்துக்கு முன்னரே தெரிவித்திருந்தது.

ஆளுங்கட்சி மட்டுமின்றி வேட்பு மனுத்தாக்கல் செய்து விட்டிருக்கிற ஏனைய கட்சிகளும் கூட இதனை எதிர்பார்த்திருந்தன.

உண்மையில் இந்தத் தேர்தலை பின்போடும் நோக்கத்துக்காகவே அரசாங்கத்திற்கு இப்போது திடீரென தேசியப் பாதுகாப்பு பிரச்சினை எழுந்து விட்டிருக்கிறது. இவ்வாறு தான் கடந்த 1996 ஏப்ரலிலும் இதே போன்று உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதற்காக இதே ஜனாதிபதியால் அப்போது அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பின்னர் ஏப்ரல் 10ஆம் திகதியன்று உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

ஆனால் இச்சட்டம் வெறுமனே தேர்தலை பின்போடுவதோடு நின்று விடுவதில்லை. அது அதற்கு மேலேயும் போய் மக்களுடைய அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் அனைத்தையுமே நெருக்கடிக்குள்ளாக்குவதுடன் அச்சத்துக்குள்ளாக்கவும் செய்கிறது.

அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வருவதென்பது சாதாரண சட்டங்களுக்கு அதிகாரம் இல்லாது போவதேயாகும். சாதாரண சட்டங்களை முறியடிக்கும் அதிகாரம் அவசரகாலச் சட்டத்துக்கு இருப்பதால், சாதாரண சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் பாதுகாப்பின் பேரால் பறித்தெடுப்பது என்பது இனி சட்டபூர்வமாகவே மேற்கொள்ளப்பட முடியும்.

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வருவதற்காக அளித்த முக்கிய வாக்குறுதிகளில் ஒன்று இந்த அவசரகால சட்டத்தை தான் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக நீக்கி விடுவது [illegible] இது அவரது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் சகல வாக்குறுதிகளையும் போல இந்த வாக்குறுதியும் குறிப்பிட்ட சில மாதங்களில் மீறப்பட்டது.

டி.பி.விஜயதுங்கா ஜனாதிபதியாக இருக்கும் போது ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்ததாலும் சந்திரிகா ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதியாக இதனை பயன்படுத்தத் தொடங்கியிருந்ததாலும் டி.பி.விஜயதுங்கா 94 நவம்பரில் நாடு முழுவதும் அமுலில் இருந்த அவசரகால சட்டத்தை நீக்கினார்.

ஆனால் பொ.ஐ.மு. பதவிக்கு வந்ததும் காமினி படுகொலையைக் காரணம் காட்டி முதற்தடவையாக அவசரகால சட்டத்தைப் பிறப்பித்தது. கொழும்பிலும் இன்னும் சில நகரங்களிலும் மாத்திரம் இந்த அவசரகால சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தது.

இதனைப் பயன்படுத்தித் தான் பதவிக்கு வந்த அடுத்தடுத்த மாதங்களில் நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்களை அது வேட்டையாடிக் கைது செய்தது. பியகம தொழிலாளர் போராட்டத்தை நசுக்கியதும், இரணவில அமெரிக்காவின் குரலுக்கு எதிரான ஊர்வலத்தை அடக்கி அதில் கலந்து கொண்டவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் (இதில் ஒருவர் கொல்லப்பட்டார்.) நடந்தது.

பின்னர் 1996 ஏப்ரல் 8ஆம் திகதி அவரகால சட்டம் மீண்டும் நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டது. அதுவும் நான்கு நாட்களுக்கு முன்பாக அதாவது 4ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகக் கூடிய வகையில் இது பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக 1996 ஏப்ரல் 19 ரிவிரெச-2 இராணுவ நடவடிக்கை தொடக்கப்பட்டதோடு சேர்த்து பத்திரிகைத் தணிக்கையும் அமுல் படுத்தப்பட்டது.

1996 மே தின ஊர்வலத்தையும் இந்த அவசரகாலச் சட்டத்தினைப் பயன்படுத்தியே அது தடை செய்தது. அதனையும் மீறி ஊர்வலம் நடாத்திய நவ சமசமாஜக் கட்சியின் ஊர்வலத்தை படையினரைக் கொண்டு கண்ணீர் புகை எறிந்தும் கொடுரமாகத் தாக்கியும் கலைத்தது.

பின்னர் இது சில பிரதேசங்களில் நீக்கப்பட்டாலும் கூட முழுமையாக நீக்கப்படவில்லை. தொடர்ந்து ஆயுதப் படையினரால் செய்யப்பட்ட பல மனித உரிமை மீறல்கள் இந்த அவசரகாலச் சட்டத்தால் மூடப்பட்டன.

இன்று வடக்கில் நடக்கும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை மேற்கொள்வதற்கும், அவை வெளித் தெரியாதவாறு மூடப்படுவதற்கும், வகைதொகையின்றி தமிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்படுவதற்கும் கூட இந்த அவசரகால சட்டம் சட்ட அங்கீகாரம் வழங்கி வந்துள்ளது.

ஆக, இன்று நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த அவசரகாலச் சட்டமானது ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டு கால காட்டாட்சியின் மறுபிறப்புக்கு கூறப்படுகின்ற கட்டியம் என்பதில் சந்தேகம் இல்லை!

# அழிப்பின் பெயரால் செய்வீர்!

ஆஹா... என்ன அற்புதமான விடுதலையை அள்ளிக் கொடுத்திருக்கின்றனர் கழகத்தினர்! இப்போது தான் அவர்கள் தமது கட்சியின், அதன் உருவாக்கத்தின் ஒட்டுமொத்த காரணத்தை மக்கள் மீதான அற்புதசெயலால் நிறைவேற்றுகின்றனர். 1990இற்கு பின்வந்து தம் முகாம் இருக்கும் பிரதேசத்தில் குடியேறி வாழும் தமிழ் மக்களை வெளியேற உத்தரவு இடுகின்றனர். மக்களை விரட்டி அடிக்கத் தொடங்குகின்றனர். எந்த மக்களின் விடுதலைக்காக முதலில் ஆயுதத்தையும், பின் பாராளுமன்றத்தையும் தம் வழியாகத் தேர்ந்தெடுத்தார்களோ அந்த மக்களை ஓட ஓட விரட்டுகின்றனர். எந்த மக்களின் நலனிற்காக கட்சி வளர்க்கின்றனரோ அம்மக்களை இருப்பிடம் விட்டுத் துரத்தி அடிக்கின்றனர். எத் தேசியத்திற்காக குரல் கொடுப்பதாக கூறுகின்றனரோ அவர்களின் அடிப்படை உரிமையையே இல்லாதொழிக்கின்றனர். வாழ்க கழகத்தின் அரசியல். எந்த தோலை மூஞ்சியில் அணிந்து கொண்டாலும் ஈற்றில் அதன் சுயநல முகம் தெரிந்து தான் போகும். திருமலையிலும், தமிழ்ப் பிரதேசங்களிலும் இராணுவம் எந்தக் காரணத்தைக் கூறி தமிழ் மக்களை விரட்டுகின்றதோ அதே பாதுகாப்பு எனும் காரணத்தை கூறியே புளொட்டும் விரட்டுகிறது. அவர்களிற்கும், அவர்களிடம் இருந்து பாதுகாக்கும் வீரர்களாக தம்மைச் சொல்லித் திரியும் இவர்களிற்கும் என்ன வித்தியாசம் என்று தான் மக்கள் அங்கலாய்க்கின்றனர். பேரினவாத அரசியல் ஒரு பக்கம் தமிழ் மக்களை விரட்ட இவர்கள் ஆட்சி அரசியல் இன்னொரு பக்கமாக விரட்டுகிறது. தம் கட்சியின், தம் பதவிகளின் பாதுகாப்பிற்காக யாரை வேண்டுமானாலும் எதுவும் செய்துவிடும் பழக்கம் கொண்டதே அது. அதனுடன் முரண்டுபிடிக்கும் அக்கட்சியைச் சேர்ந்தவர்களைக்கூட அது விட்டு வைப்பது இல்லை. தமிழ் மக்கள் இவர்களிடம் கேட்பதெல்லாம் ''ஏன் வீணாக விடுதலை, அது, இது மயிர், மட்டை என்றெல்லாம் சொல்லிக் கொண்டு... பேசாமல் இராணுவத்தின் சீருடையையே அணிந்து கொண்டு பௌத்த பேரினவாதம் பேசிக் கொண்டு தமிழ் மக்களை அழித்தொழிக்கலாமே'' என்பது தான். ஏனெனில், தம் மனதுள் நினைக்கும் செயலை வெளிப்படையாகவே செய்யும் துணிவாவது புளொட்டிற்கு வந்துவிட்டதே என அவர்கள் பெருமைப்பட!

சா.சூ.நீரஜ்

நன்றி - நூலகத்திட்டம்

# இலங்கை அரசின் போர்க் காலக் குற்றங்கள் !



ஜூலை 25ம்திகதி சனியன்று இரவு. தமிழ்நாடு இராமேஸ்வரம் நோக்கி விரைந்து கொண்டிருந்த அந்தப்படகுக்குள் திடீரென தண்ணீர் புக ஆரம்பித்தது. மட்டுமீறிய அளவுக்கு ஆட்களை ஏற்றிக் கொண்டு வந்ததால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. படகிலே இருந்தவர்கள் அவசர அவசரமாக தண்ணீரை அள்ளி வெளியிலே கொட்டிப் பார்த்தனர். ஆனால், ஆடிமாதத்து பெரும் அலைவேகத்துக்கு அந்தப் படகால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அது பிளந்து கவிழ்ந்தது.

வன்னி யுத்தத்தின் உக்கிரம், அரசாங்கத்தின் நிவாரண வெட்டால் ஏற்பட்டுள்ள பட்டினி நிலைமை, கொலரா நோயின் தாக்கம் என்று பல முனைத் தாக்குதலுக்கு உள்ளாகி சகிக்க முடியாமல் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடியவர்கள் அவர்கள். தமிழ் நாட்டுக்குப் போயாவது கொஞ்சம் மூச்சுவிடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு. இந்த நம்பிக்கையும், அவர்கள் வாழும் சூழலின் சகிக்கவொண்ணா நிலைமை அவர்களை விரட்டிய வேகமும் அவர்களுக்கு நிதானமாக சிந்திக்கும் அவகாசத்தைத் தரவில்லை. தாம் பயணிக்க ஏறியுள்ள படகின் நிலை, அதில் ஏற்றப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை, அலையின் கொந்தளிப்பு வேகம் என்பன பற்றி அவர்களுக்கு அதிகம் சிந்திக்க முடியவில்லை. முடிவு? படகில் சென்ற 44பேர் நீரில் மூழ்கித் தத்தளித்து இறந்தனர். ஆறுபேர் நீந்திக் கரையேறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்பிருந்தே இவ்வாறு அகதிகளாகப் படகில் வந்து இந்தியக் கரையில் இறங்குவோர் தொகை அதிகரித்திருப்பதாக இந்தியாவிலிருந்து செய்திகள் வந்துகொண்டிருந்தன. ஒரு புறம் இந்தியாவில் அகதிகளாக இருப்பவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முயற்சி நடந்து கொண்டிருக்கையில் மறுபுறம், கொஞ்சம் கொஞ்சமாக தமிழ்நாட்டுக் கரைகளை நோக்கி படகுகளில் அகதிகள் சென்று கொண்டிருக்கின்றனர்.

இந்தச் செய்தி ஒன்றும் மிகச் சாதாரணமாக ஒதுக்கிவிடக் கூடிய செய்தி அல்ல. உண்மையில் அரசாங்கம் சொல்வதுபோல் வடக்கில் மக்கள் எந்தப்பயமும் இன்றி வாழலாம் என்றால், இவ்வாறு உயிரை வெறுத்து அகதிகள் இந்தியாவுக்கு ஓட வேண்டிய அவசியம் என்ன? வெளியிலே தெரியாவிட்டாலும், வன்னி மற்றும் மன்னார்ப் பகுதி மக்கள் தீவிர யுத்த நடவடிக்கையின் பின் எவ்வாறு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.' அதுவும் அரசாங்கம், இதுவரை அகதிகளாக இடம்பெயர்ந்த மக்களுக்கென வழங்கிவந்த நிவாரண உதவிப் பொருட்களை 32% ஆல் வெட்டிக் குறைத்தபின், அவர்களை யுத்தக்கெடுபிடி மட்டுமல்ல உணவுப் பிரச்சினையும் பெரிதும் தாக்கியுள்ளது. தற்போது அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தின் மீதும் விழுந்துள்ள வெட்டுக்கு மேலாக மண்ணெண்ணை போன்ற எரிபொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதும் தடுக்கப்பட்டுள்ளதாக வவுனியாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த உலர் உணவு மீதான வெட்டு என்பது உண்மையில் யுத்தப் பிரதேசத்தில் அகதிகளாக வாழும் மக்கள் மீது தொடுக்கப்படுகின்ற ஒரு யுத்தம் என்பதில் ஐயம் இல்லை. உணவுப் பொருட்களை தடை செய்வது, வெட்டிக் குறைப்பது என்பவை யுத்த நடவடிக்கையின் போது கையாளப்படும் மிகக் கீழ்த்தரமான ஒரு அணுகுமுறையாகும். அது மட்டுமல்லாமல் இது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமும் ஆகும்.

அண்மையில் இலங்கையின் யுத்தகால குற்றங்கள் பற்றி கட்டுரை ஒன்றை அமெரிக்க சட்டத்துறைச் சார்ந்த சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ளது. இந்தக்கட்டுரையை எழுதிய பேராசிரியர் போஸ்ட் (Paust) ஹொஸ்டன் பல்கலைக்கழகப் பேராசிரியரும் சர்வதேச சட்டத்திற்கான அமெரிக்கக் கழகத்தின் இணைத் தலைவர்களில் ஒருவருமாவார். அவர், தனது கட்டுரையில் இலங்கையில் யுத்த நோக்கங்களுக்காக உணவுக்கட்டுப்பாடு மற்றும் மருந்துப் பொருட்களை கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபட்டு வருவதாகவும் இது சர்வதேச மனித உரிமைகட்கு முரணானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தப் பிரதேசத்திற்கு உணவுப் பொருட்களை அனுப்பாது தடுப்பதானது பெரும்பாலும் திட்டமிட்டே செய்யப்படுகிறது. இது ஒரு அரசியல் தந்திரமாகவே செய்யப்படுகிறது. பொதுமக்களை பாதிப்புக்குள்ளாக்குவதன் மூலமாக அவர்களது ஆதரவு நடவடிக்கைகளை இல்லாமலாக்கி அவர்களை அகதிகளாக அல்லது அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்குத் தள்ளுவது இதன் நோக்கமாகும். ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு உணவு கிடைக்க முடியாமல் செய்வது மனித உரிமைகள் சட்டத்தின் மீறும் ஒரு நடவடிக்கையாகும். 1949ல் செய்யப்பட்ட ஜெனிவா உடன்படிக்கையின் 3வது சரத்து பட்டினியிடுவது அல்லது மறுப்பது மற்றும் பட்டினியையும், போசாக்கின்மையையும் புறக்கணிப்பது என்பது, மக்களை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டுமென்றும், கொடுமையாக நடாத்துவது தடை செய்யப்படுகின்றது என்றும் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் இந்த 3வது சரத்தை மீறுவது வெறுமனே சட்டத்தை மீறும் செயல் மட்டுமல்ல இது ஒரு போர்க் குற்றமும் ஆகும் என்று அவர் எழுதியுள்ளார்.

அனுப்பப்படும் உணவுப் பொருள் எதிரியின் கையில் போய் விழுந்து விடும் என்று கூறுவது ஒரு நியாயமாகக் கொள்ளப்பட முடியாது என்று அவர் மேலும் எழுதியுள்ளார்.

இவ்வாறே அவர் மருத்துவ விநியோகத் தடையையும் ஒரு போர்க்கால குற்றம் என்று தெரிவிக்கிறார்.

இலங்கை ஜனாதிபதியே வெளிப்படையாக, உணவுப் பொருட்களை புலிகளே எடுத்துச் செல்கிறார்கள் என்று முன்பு அறிவித்ததையும், உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதை குறைத்தமையும் புதிய விடயங்கள் அல்ல.

இன்று வன்னியில் நடக்கும் யுத்தத்தில் பெருமளவுக்கு பாதிக்கப்படுபவர்கள் புலிகளையும் விட பொது மக்களே. இந்த யுத்தத்தில் சம்பந்தப்படாத மக்களை அழிக்கும் திட்டத்தினைத் தான் இப்போது தணிக்கையை அமுலில் வைத்துக்கொண்டு அரசாங்கம் செய்து வருகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த யுத்தம் திட்டமிட்டு பல முனைகளிலும் அவர்களுக்கு எதிராகவே நடத்தப்பட்டு வருகின்றது என்பதை அனுபவித்து உணர்ந்துள்ளார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கத்தின் கீழ் நியாயம் கிடைக்கும் என்ற அற்ப சொற்ப நம்பிக்கையும் வன்னி யுத்தத்திற்கு துணையாக அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண வெட்டு இல்லாமல் ஆக்கிவிட்டது. அவர்களைப் பொறுத்தவரை வன்னியில் இருந்தாலும் சாவு, தப்பி ஓடினால் கடலிலும் சாவு என்ற நிலை.

ஆனாலும், அதில் ஒரு நம்பிக்கைக் கீற்றும் இருக்கிறது. தப்பித் தவறி தப்பினால், குறைந்தபட்சம், சாப்பிடத்தான் இல்லாவிட்டாலும் யுத்த பீதியின்றி இருக்கலாமே என்ற நம்பிக்கை. இந்த நம்பிக்கையுடன் தான் அவர்கள் தமிழ் நாட்டை நோக்கி உயிரை வெறுத்து ஓடுகிறார்கள்.

நாட்டை சுடுகாடாக்கும் அம்மணியின் சமாதான யுத்தத்தின் சாதனைகள் வரலாற்றில் அழியாப் புகழ் பெற்று விளங்கும் என்பதில் சந்தேகமென்ன?

## திருமலை : துயர் தரும் வாழ்வு !

திருகோணமலை நகர்ப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி கடற்கரை வீதி வழியாகப் பிரயாணம் மேற்கொண்டால், சுமாராக 35 கிலோ மீற்றர் தூரத்திலே குச்சவெளிக் கிராமம். 1983ம் ஆண்டுக்கு முன்பாக 65 வீதமான தமிழர்களும், 35 வீதமான முஸ்லிம்களும் சந்தோசமாக வாழ்ந்த மண். தமிழர்களைப் பொறுத்த வரையில் முற்றாகவே இடம் பெயர்ந்த நிலைமையிலும், முஸ்லிம்களில் 50 வீதமானோர் அகதி முகாம் களிலும் வாழும் நிலை இன்று.

அகதி முகாம்களில் வாழும் முஸ்லிம்களின் நிலை என்பது மிகவும் வேதனைக்குரியதாகும். அத்தியாவசியப் பொருட்களைக் கூடத் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ள முடியாத பரிதாபம். போக்குவரத்துப் பயணம் என்பது நீண்ட பல மணிநேரங்களை விழுங்கக் கூடியதாகவே காணப்படுகின்றது. இதற்கிடையில் ஏகப்பட்ட பாதுகாப்புச் சோதனைகள். இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டிற்கு உள்ளாக்கப்படாத அப் பகுதியில் இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையே ஏற்படக்கூடிய மோதல்களில் அந்த வறிய மக்களும் பாதிப்படைந்த சம்பவங்கள் ஏராளமுண்டு. தற்செயலாகவும், சந்தேகத்தின் அடிப்படையிலும் சுடப்பட்ட முஸ்லிம்கள் பலர். அது தவிர தொடரும் சந்தேகப் பார்வைகளும், கைதுகளும் ஏராளம். பகல் நேரங்களில் இராணுவத்தினரால் எதுவும் ஏற்படலாம் என்ற அச்சத்துடனும், இரவு நேரங்களில் புலிகளினால் ஏதும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்துடனுமே அம்மக்களின் பொழுதுகள் கழிகின்றன. மீன்பிடித் தொழிலையே தமது சாதாரண தேவைகளுக்கான வருமானத் தொழிலாகப் பலர் பயன்படுத்துகின்றனர். கடற் பகுதியில் இராணுவத்தினரால் குறிப்பிடப்படும் பகுதிகளுக்கு மாத்திரமே அவர்களால் மீன்பிடிக்கச் செல்ல முடியும். சுருக்கமாகச் சொல்லப் போனால், அவர்கள் அடிமை வாழ்வையே மேற்கொள்கின்றனர். பாதிப்பிற்குள்ளாக்கப்பட்ட மக்களின் தேவைகளை அறிந்து, உடன் தமது கவனத்திற்குக் கொண்டு வந்து பரிகாரம் தேடல் வேண்டும் என்ற அடிப்படையில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட மாவட்டப் புனர்வாழ்வு இணைப்பதிகாரியை அம் மக்களும் மறந்து விட்டனர்.

பல்வேறு கஷ்டங்களையும், வேதனைகளையும் அனுபவித்துக் கொண்டு அவர்கள் வாழ்ந்தாலும், 'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற அடிப்படையில் சிலர் செயற்படுவது தான் துயரமிக்கது. குச்சவெளி மக்கள் பள்ளிவாசல் பகுதியினைச் சுற்றியே முகாமிலும், தமது சொந்த இருப்பிடங்களிலும் வாழ்கின்றனர். பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த மூன்று நபர்கள் அப்பகுதியில் குட்டி ராஜாக்கள் போன்று தர்பார் நடத்துகின்றனர். அவர்கள் பகிரங்கமாகவே சாராயம் மற்றும் கசிப்பு என்பவைகளை விற்பனை செய்கின்றனர். தட்டிக் கேட்க முற்படுவோர்களுக்கு மிரட்டல்களும், எச்சரிக்கைகளும் விடப்படுகின்றது.

அமைதியான தமது கலாசாரம் இவ்வாறான செயற்பாடுகளினால் வீணே சீரழிக்கப்படுவதை அம் மக்களினால் தாங்கிக் கொள்ள முடியாதிருந்தாலும் ஏதுமே செய்து கொள்ள முடியாத கையறு நிலையிலிருக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் ஏதும் ஆனதாக இல்லை என்பதே அம் மக்களின் அங்கலாய்ப்பு. முஸ்லிம்களைத் தலை நிமிர்ந்து வாழவைப்போம் என்று சொல்லிக் கொள்பவர்கள் அப் பக்கம் தலைவைத்துப் படுப்பதுமில்லை என்பது நீண்டகாலக் குறைபாடாக இருந்து கொண்டே இருக்கின்றது.

இதே போன்று திருகோணமலை நகர்ப் பகுதியிலிருந்து சுமாராக 15 கிலோ மீற்றர் தூரத்தில் மற்றொரு கிராமமான இறக்கக்கண்டி கிராமம். 80 வீதமான முஸ்லிம்களைக் கொண்ட இக் கிராமத்தின் பிரதான தொழில் மீன்பிடி. இங்கே பிடிக்கப்படும் மீன்களைப் பெரும்பான்மையினத்தைச் சார்ந்த வியாபாரிகளே பெற்றுக் கொள்கின்றனர். குறைந்த விலைகளில் பெற்றுக் கொள்வது மாத்திரமல்லாது அவர்களின் அட்டகாசங்களும் ஏராளம். கந்தளாய், சிலாபம் போன்ற பகுதிகளில் இருந்து 'சீசன்' காலங்களில் மாத்திரமே தொழிலுக்காக வரும் பெரும்பான்மையினர் தமக்கெனப் பல கடற் பகுதிகளை ஆட்சிபுரிவது தான் வேடிக்கை. 'சிறிமஹத்தயா' என்னும் மீன் முதலாளியொருவர் தமக்குரியதான பகுதியில் மீன் பிடித்தமைக்காகச் சில அப்பாவி முஸ்லிம்களை அண்மையில் தாக்கியுள்ளார். அது மாத்திரமல்லாது, சில இராணுவத்தினரின் உதவியுடன் துப்பாக்கி முனையில் மிரட்டியுமுள்ளார். இவர்கள் பற்றி முறைபீடு செய்வதனால், இராணுவத்தினரின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் டன், நகர்ப் பகுதியில் மீன்வியாபாரத்திற்காகச் செல்ல முடியாது என்ற அச்சம் காரணமாக எல்லா இம்சைகளையும் அந்த வறிய முஸ்லிம்கள் பொறுமையாகத் தாங்கிக் கொள்கின்றனர். இதிலே வேடிக்கை என்னவென்றால், குச்சவெளி மற்றும் இறக்கக்கண்டிப் பகுதி முஸ்லிம்களில் 90 வீதமானோர் மு.கா. ஆதரவாளர்கள். இருந்தும் எந்தவொரு மு.கா. முக்கியஸ்தர்களும் இவர்கள் குறை தீர்க்க முன்வருவதாகத் தெரியவில்லை.

**தோழன், திருமலை**

### வாழ்வு

ஹலோ தம்பியோ! இஞ்ச ஐயா கதைக்கிறன்,
ஆ, ஐயாவோ பார்த்தனீங்களா. வீரகேசரி.
ஓம் தம்பி இன்று காலமை தான் கொழும்பு வந்தனான்.
உங்கட பேத்தின்ர பிறந்தநாள் வாழ்த்து கலரிலை போட்டனான்
ஓம் தம்பி இஞ்ச வர நான் பட்ட பாடு
வாழ்த்து பேப்பரில போட ஆயிரம் டிஎம் முடிஞ்சுது ஐயா.
நான் வந்தது தம்பி...
உங்கட பேரும் போட்டனான் பார்த்தனீங்களா?
அம்மாவுக்கு கொஞ்சம் வருத்தம் கடுமை தம்பி.
நான் சொல்றது கேக்கேலையா ஐயா.
கொஞ்சம் காசு தம்பி...
அங்க நிவாரணம் தாரங்கள் தானே...
அதுவும் நிப்பாட்ட போறாங்களாம் தம்பி.
அது சும்மா.
நீங்க யோசிக்காம போங்கோ.
வீரகேசரியை கொண்டு போய் அம்மாவுக்கும் காட்டுங்கோ.

**உதிஸ்டிரன்**

நன்றி - நூலகத்திட்டம்





# அயோத்தி : ராமனின் பெயரால்...

ராஜஸ்தானின் தென்மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளது பிந்வாரா என்ற நகரம். பரவலாக அறியப்படாத இந்த நகரம் இப்போதெல்லாம் பெரிதும் பேசப்படும் ஒரு நகரமாகி விட்டது. அயோத்தியினை ராமரின் ஜன்மபூமியெனக் கொண்டாடும் விஷ்வ ஹிந்து பரிசத்தின் இராமர் கோவில் அமைக்கும் திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் அங்கு சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்த இராமர் கோயில் அமைக்கும் திட்டம் முன்கூட்டியே செய்யப்பட்ட (Pre Fabricated) தூண்களையும், சுவர்களையும் கொண்டு அமைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 80%மான வேலைகள் செய்யப்பட்டு, 1992 டிசம்பர் 6ம்திகதியன்று பாரதீய ஜனதாக் கட்சி, விஷ்வ ஹிந்து பரிஷத் ஆகிய அமைப்புகளின் தலைமையில் இடித்து நொறுக்கப்பட்ட வரலாற்றுப் புகழ் பெற்ற பாபர் மசூதி இருந்த இடத்திலேயே இந்தக் கோவில் நிறுவப்படவிருக்கிறது. இத்தகைய முன்னரே தயாரித்து நகர்த்தும் (Make shift) கோவில் வேலைகளை ஸ்ரீ ராம ஜன்ம பூமி நியாஸ் மேற்கொண்டு வருகிறது. இதன் பிரதான இயக்குனர்கள் விஷ்வ ஹிந்து பரிசத் அமைப்பின் தலைவர்களே!

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமைகள் இந்த வேலை தொடர்பாகத் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்ற போதும், ஜெய்ப்பூரிலிருந்து 10 மணி நேர பயணத்தில் அமைந்துள்ள, இராம ஜன்மபூமி என்று கூறப்படும் இந்தக்கோயில் அமையவுள்ள இடத்திலிருந்து கிட்டத்தட்ட 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பிந்வாராவில் சிற்பிகளும் கட்டிடக் கலைஞர்களும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். கருங்கல்லிலே செதுக்கப்பட்ட பிரமாண்டமான தூண்கள் அங்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 32 தூண்கள் ஏற்கெனவே செதுக்கப்பட்டு விட்டன என்று தெரியவருகிறது. 1995 ஜனவரி 26ம் திகதி விஷ்வ ஹிந்து பரிசத்தின் தலைவர் அஷோக் சிங்லால் அவர்களால் இந்த வேலைகள் உத்தியோக பூர்மாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த வேலைகளை செய்வதற்கென அமைக்கப்பட்ட 'ஸ்ரீராம் ஜென்மபூமி நியாஸ்' என்ற அமைப்பு இங்கு வேலை செய்பவர்களுக்கு ஊதியம் வழங்கி வருகிறது. இந்த வேலைகட்கான பாறைகள் அங்கிருந்து 600 கி.மீ. தொலைவிலுள்ள சுரங்கங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்றன.

வரலாற்றுப், புகழ்பெற்ற பாபர்மசூதி அமைந்திருந்த இடம் இராமர் ஆலயம் ஒன்று இருந்த இடம் என்ற காரணத்தைக்கூறி 1992இல் பெருந்திரளாக வந்த ஆர்.எஸ்.எஸ்.விஷ்வ ஹிந்து பரிசத், மற்றும் பி.ஜே.பி.யின் குண்டர்களால் தகர்க்கப்பட்டது. கும்பலாக வந்த இந்தக் குண்டர்களின் 'கர சேவை'யை ஊக்குவிக்கும் இந்துத்துவ வெறியை ஊட்டுவதில் இம் மூன்று அமைப்புகளும் பெரும் பங்காற்றியிருந்தன. இன்று ஆட்சியிலிருக்கும் வாஜ் பாய் தலைமையிலான பி.ஜே.பி. இந்த அடாவடித்தனத்தை ஒரு 'தவிர்க்க முடியாத' செயல் என்று அன்று தெரிவித்திருந்தது. அன்று ஆட்சியிலிருந்த ஐ.மு. அரசாங்கம் இந்தச் செயல் குறித்து எந்தத் தீவிர நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த வன்முறையை முன்னின்று நடாத்தியவர்கள் மீது இன்றுவரை சட்டரீதியாக உருப்படியான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பதிலாக அவர்கள் தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

எவ்வாறாயினும், இராமர் கோவிலை உடனடியாக நிறுவும் முயற்சி உயர் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது. 1993 ஜனவரி 7, 1994 ஒக்டோபர் 24, திகதிகளில் வெளியிடப்பட்ட உயர்நீதி மன்ற உத்தரவின் பிரகாரம் இந்த வேலைகளைக் குறிப்பிட்ட இடத்தில் தொடர்வது மட்டுமல்லாமல் அந்த இடத்திலுள்ள நிலைமைகளில் ஏதாவது மாற்றம் செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆயினும், விஷ்வ ஹிந்து பரிசத் தலைவர்கள் இந்தத் தடையுத்தரவு பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. இப்போது பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியிலிருப்பதால் நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்ய முடியாது. அவர்கள் இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இப்போது நடந்து கொண்டிருக்கும் இந்தத் தூண்களைத் தயாரிக்கும் வேலை நீதிமன்ற உத்தரவை மீறிய ஒன்றாக இருக்க முடியாது என்று கூறுகின்றனர். ஏனென்றால், இந்த வேலை இப்போது நடந்து கொண்டிருக்கும் இடம் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட இடம் அல்ல என்பது அவர்களது வாதம். நீதிமன்றம் கோவில் கட்டக் கூடாது என்று தீர்ப்புக் கூறினால் ஒழிய இந்த வேலையை தடைசெய்யப்பட்ட ஒரு வேலையாகக் கொள்ள முடியாது என்பதே இன்றைய பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோரதும் அபிப்பிராயமாகும்.

ஆனால், விஷ்வ ஹிந்து பரிஷத் இதைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. அவர்களும் ராம ஜன்மபூமி நியாஸ் தலைவர்களும், தாம் எந்தச் சட்டத்திற்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்றும், எந்த நீதிமன்ற உத்தரவும் தம்மை எதுவும் செய்ய முடியாதென்றும் தெரிவிக்கின்றனர். ''பிரதம மந்திரியோ, அரசாங்கமோ எதை வேண்டுமானாலும் சொல்லட்டும்'' ஆனால், இராமர் கோவில் பிரச்சினை ஒரு நீதிமன்றத்திற்குரிய பிரச்சினை அல்ல. எம்மைப் பொறுத்த வரையில் இந்த முயற்சியை எந்த அரசியல் சட்டமோ, சட்டவிதிகளோ, அரசாங்கமோ, பிரதம மந்திரியோ யாரும், எவையும் தடை செய்ய முடியாது. தர்மத்தினதும், தர்மாச்சாரியர்களதும் கட்டளைப்படி நடக்கும் இந்த வேலையை நாம் எப்படியும் முடித்து வைப்போம்'' என்கிறார்கள் அவர்கள்.

எப்படியோ இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தக் கோவிலுக்கான16 1/2 அடி உயரமான தூண்களும் பிற வேலைகளும் கடந்த ஆறு ஆண்டுகட்கு மேலாக நடந்து கொண்டுதான் இருக்கின்றன. மத்தியில் பி.ஜே.பி. ஆட்சி வந்தவுடன் இந்த முயற்சி தீவிரமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்து வெறி, முஸ்லிம் எதிர்ப்பு வெறியாக தீவிரமாக வளர்ந்துள்ள இந்தியாவில் இராமர் கோவிலின் பெயரால் இன்னொரு பாரிய இரத்தக் களரியைக் காணப்போகிறதென்றே இதைக் காண்கின்றனர், அங்குள்ள வேலைகளைக் காணச் செல்பவர்கள்.

ஆனால், இந்திய அரசாங்கமும் சரி, மற்றைய அரசியல் கட்சிகளும் சரி, இதை ஒரு தேர்தலுக்கான விவகாரமாக மட்டுமே பார்க்கின்றன. இந்திய மக்களின் எதிர்காலம், இராமரின் பெயரால் அச்சத்துக்குரிய ஒன்றாக மாறிவருவது மறக்க முடியாத ஒன்று!

*(தகவல்கள் : Fronline)*

# யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்...

யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் இதுவரை யாழ். மாநகர சபை, பருத்தித்துறை நகர சபை, சவகச்சேரி பிரதேச சபை, வேலணை பிரதேச சபை, வலிகாமம் வடக்குப் பிரதேச சபை ஆகியவற்றைத் தவிர ஏனைய சபைகளில் இதுவரை கூட்டம் கூட்டப்படவில்லை. வலிகாமம் வடக்குப் பிரதேச சபை ஓரிரு கூட்டங்களைக் கூட்டியது. பின்னர் 19.6.98 முதல் வலிகாமம் வடக்கில் இயல்பு நிலை திரும்பும் வரை தமது செயற்பாடுகளை நிறுத்தி வைப்பதெனத் தீர்மானித்துள்ளது. இதன் அர்த்தம், வலி வடக்குப் பிரதேச சபை இனிமேல் இயங்கமாட்டாது என்பதே காரணம். வலிகாமம் வடக்குப் பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பலாலியில் வைத்து வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரனிடம் தெரிவித்துள்ளார். 211 உறுப்பினர்களில் 82 பேர் மட்டுமே இதுவரை பதவியேற்றுள்ளனர். மக்களுக்குச் சேவை செய்ய வந்தவர்கள் ஆறு மாதங்களாகியும் இதுவரை பதவிப் பிராமணம் செய்துகொள்ளவில்லை.

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் கடந்த ஜனவரி 29ம்திகதி தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அரசாங்கத்தால் நடத்தி முடிக்கப்பட்டன. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தேர்தலைத் தள்ளிப்போடுமாறு விடுத்த கோரிக்கையையும் உதாசீனம் செய்து விட்டு, அரசு தேர்தலை நடாத்தியது. தேர்தல் பிரச்சாரம் ஆரம்பமானதும் இனித் தமிழ் ஈழத்தில்தான் அடுத்த தேர்தல் எனக் கூறிய கூட்டணியினரும் பிரிவினையைத் தவிர வேறு வழியில்லை எனக் கூறி, புரட்சி ஆயுதம்


ஏந்திய சித்தாந்தங்கள் பேசிய முன்னாள் போராளிகளும் களத்தில் குதித்தனர்.

தேர்தல் பிரச்சாரம் ஆரம்பமானதும் ஒருவரையொரும் வசை பாடத் தொடங்கினர். பல்வேறு தேர்தல் காலவாக்குறுதிகளும் இவர்களால் முன்வைக்கப்பட்டன. ஒலி பெருக்கி வாகனங்கள் மாறி, மாறி ஒவ்வொரு கட்சியினரதும் அராஜகங்கள் பற்றி அலறிய வண்ணம் யாழ். வீதிகளில் வலம் வந்தன. போட்டி போட்டுக் கொண்டு ஆட்கடத்தல்களிலும் இவர்கள் ஈடுபட்டனர். புளொட், ஈ.பி.டி.பி. என்பன இவற்றில் முன்னணி வகித்தன. பின்னர் இராணுவத்தினர் தலையிட்டு இவர்களால் கடத்தப்பட்டவர்களை விடுவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

தேர்தல் தினத்தன்று கட்சி அலுவலகங்களில் மது ஆறாக ஓடியது. உலகின் வேறெந்த நாட்டிலும் இல்லாதவாறு ஒரு உள்ளூராட்சித் தேர்தலை அவதானிப்பதற்குப் பெருந்தொகையான சர்வதேசப் பத்திரிகையாளர்கள் வருகை தந்திருந்தனர். பத்திரிகையாளர்களின் படையெடுப்பினால், யாழ்ப்பாணத்திலிருந்த விடுதிகளில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. சில பத்திரிகையாளர்கள், இராணுவத்தினரின் விருந்தினர் விடுதியிலும் தங்க வைக்கப்பட்டனர். இவ்வாறாகப் பெருத்த ஆரவாரத்துடன் நடைபெற்ற யாழ். மாவட்ட உள்ளூராட்சித்தேர்தல்களின் மூலம் யாழ்ப்பாண மக்கள் அடைந்த நன்மை என்ன?

| சபை | மொத்த உறுப்பினர் | பதவி ஏற்றோர் | கூட்டம் |
|---|---|---|---|
| பருத்தித்துறை நகர சபை | 09 | 05 | நடைபெறுகின்றது |
| சாவகச்சேரி நகர சபை | 11 | 06 | நடைபெறவில்லை |
| வல்வெட்டித்துறை நகர சபை | 09 | எவருமில்லை | நடைபெறவில்லை |
| சாவகச்சேரி பிரதேச சபை | 15 | 10 | நடைபெற்றது |
| வலிகாமம் கிழக்குப் பி. சபை | 21 | 04 | நடைபெறவில்லை |
| வலி.தென் மேற்குப் பி.சபை | 16 | 01 | நடைபெறவில்லை |
| பருத்தித்துறை பிரதேச சபை | 09 | 02 | நடைபெறவில்லை |
| வலி. வடக்குப் பிரதேச சபை | 21 | 12 | ஓரிரு கூட்டங்கள் நடைபெற்றது 19.6.98 முதல் நிறுத்தம் |
| வலி. தெற்குப் பிரதேச சபை | 16 | 03 | நடைபெறவில்லை |
| வடமராட்சி தெ.பிரதேச சபை | 18 | 06 | நடைபெறவில்லை |
| நல்லூர் பிரதேச சபை | 12 | 03 | நடைபெறவில்லை |
| பளைப் பிரதேச சபை | 09 | 06 | நடைபெறவில்லை |
| வேலணைப் பிரதேச சபை | 11 | 05 | நடைபெறுகிறது |
| நெடுந்தீவுப் பிரதேச சபை | 09 | 04 | நடைபெறவில்லை |
| ஊர்காவற்துறைப் பிரதேச சபை | 11 | 10 | நடைபெறவில்லை |
| வலி. மேற்குப் பிரதேச சபை | 14 | 05 | நடைபெறவில்லை |

## வீரகேசரியின் பொறுப்பீனம்?


ஸ்ரீகஜன்


பி. மாணிக்கவாசகர்

# அத்தாஸின் பேனா எழுத மறந்தவை!

''இந்த நாட்டின் பொலிசிற்கு, ஒரு விடயத்தை நிரூபிக்க அல்லது நிரூபிக்க முடியமால் செய்ய ஏற்றவிதத்தில் பதிவேடுகள் மாற்றுவதில் அபக்கியாதி பெற்ற ஒரு வரலாறே இருக்கிறது....''

''குற்றவிசாரணைப் பதிவுப் புத்தகத்தில் புதிய பக்கங்களை ஒட்டுவதில் அவர்கள் கைதேர்ந்த நிபுணர்கள். மிகவும் கூர்மையாக ஆராய்ந்தால் ஒழிய, அந்தப் புத்தகத்தில் இருந்த உண்மையான பதிவுகள் நீக்கப்பட்டு எப்படிப் புதிய பதிவுகள் ஒட்டிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டு கொள்வது கடினமாகும்.''

''குற்றம் சாட்டப்பட்ட பல அப்பாவிகள் பொலிசாரின் இத்தகைய பொய்யான குறிப்புகளின் காரணமாக சிறைக்குப் போயிருக்கிறார்கள்.''

''பல நீதிபதிகள் பொலிசாரின் குறிப்புக்களை மட்டும் அடிப்படையாக் கொண்டு பொலிஸ் சார்பு நீதிபதிகளாக செயற்பட்ட குற்றத்தைப் புரிந்திருக்கிறார்கள். சில நீதிபதிகள் சந்தேகத்தின் இலாபத்தை குற்றம் சுமத்துபவர்களுக்கு வழங்கிவிட்டு தண்டனையின் இலாபத்தை குற்றம் சாட்டப்பட்டவர்க்கும் வழங்கியிருக்கிறார்கள்.''

''ஆகவே புதிய புதிய குறிப்புகளை பதிவேடுகளில் பொலிசார் கண்டு பிடிப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய விடயம் அல்ல.....''

-இந்த வரிகள் சண்டே ரைம்ஸ் கடந்த வார இதழில் 'ஹல்ஸ்ரப் ஹில்ஸ்' என்ற பத்தியை எழுதும் 'முதலியாரின்' பத்தியில் இருந்து எடுக்கப் பட்டவரிகளாகும்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியரும், சட்டத்தரணியுமான சிங்க ரணதுங்க அவர்களாலேயே இப்பத்தி எழுதப்பட்டு வருகிறது என்று கூறப்படுகிறது. எவ்வாறாயினும், இந்தப்பத்தி மிகவும் முக்கியமான, சட்டத்துறை சார்ந்த பல விடயங்களை அம்பலப்படுத்தி வரும் ஒரு கௌரமான பத்தி என்பதில் சந்தேகம் இல்லை. இப்பத்தி இதற்கு முன்னர் பலதடவைகளில் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களுடைய விசாரணைகளில் நடந்த சட்டரீதியான குளறுபடிகள் பற்றியும் எழுதியிருந்தது. இவற்றுக்காகக் குரல்கொடுக்கும் சட்டத்தரணிகள் சிலர் பற்றியும் அது குறிப்பிட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட இதழில் கூட தமது மனச்சாட்சிப்படி செயற்பட்ட சட்டத்தரணி நடேசன் பற்றி அது பாராட்டுக் குறிப்பை எழுத்த தவறவில்லை.

ஆனால், இந்தக் குறிப்பை எழுதுவதன் முக்கிய நோக்கம் 'முதலியாரை'ப் புகழ்வது அல்ல. மாறாக, அதே பத்திரிகையில் இக்பால் அத்தாஸினால் எழுதப்பட்டிருக்கும் ஒரு குறிப்பு. இந்த மேற்குறிப்பிட்ட வரிகளுக்கு எவ்வளவு முரணானது என்று சுட்டிக் காட்டுவதேயாகும்.

'சிற்றுவேசன் றிப்போர்ட்' என்ற பத்தியைத் தொடர்ந்து எழுதிவரும் இக்பால் அத்தாஸ் ஒரு பிரபல பத்திரிகையாளர். அரசாங்க மட்டத்தில் பலத்த நெருக்குதலுக்கு உள்ளான ஒரு பத்திரிகையாளரும் கூட. அவரது எழுத்துக்காக அவர் பல தடவைகள் மிரட்டப்பட்டதும், அவரது வீட்டில் காடையர் புகுந்து அட்டகாசம் புரிந்ததும் சரிநிகருக்குப் புதிய தகவல் அல்ல. சரிநிகர் அவரது பேட்டி ஒன்றை வெளியிட்டதுடன், அவர் மீதான அரச அடக்கு முறைக்கெதிராக குரல் கொடுத்தும் வந்துள்ளதும் புதிய விடயம் அல்ல.

அவர் பாதுகாப்பு வட்டாரத்தில் நடக்கும் ஊழல்களை அம்பலப் படுத்தி வருவதும், அதனாலேயே அவருக்கு அரசிடமிருந்து நெருக்கடிகள் வந்தன என்பதும் தெரிந்ததே.

ஆனால், அவரது பெரும் குறை அவர் தனது தகவல்களுக்கு பாதுகாப்பு வட்டாரங்களிலேயே பெரிதும் தங்கி இருப்பது தான். குறிப்பாக வடக்கு கிழக்கு யுத்த நிலவரம் தொடர்பான அவரது பெரும்பாலான தகவல்கள் அரச பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்தும், இரகசிய பொலிஸ் பிரிவிடமிருந்தும் கிடைக்கும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டவையே.



இதனால், அவரது பத்தியின் பாரிய பலவீனமாகத் தெரிவது அவரது பக்கச்சார்பான கருத்துவெளிப்பாடே. அவர் பாதுகாப்பு வட்டாரங்களின் ஊழல் மோசடிகள் குறித்து தீவிரமாக இருக்கும் அளவுக்கு அவர்களது விசாரணைகள், தகவல்களின் உண்மைத் தன்மை குறித்து தீவிரமான அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

கடந்த வாரம் அவர் எழுதிய குறிப்பொன்று, எப்படி 'முதலியாரின்' பார்வைக்கும் இவரது பார்வைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் காட்டுகின்றது என்று தெரிவிக்கப் போதுமானதாகும்.

வீரகேசரி நிர்வாக ஆசிரியர் எழுதிய கடிதம் ஒன்றிற்குப் பதிலளிக்கும் முகமாக அவர் எழுதிய குறிப்பில் இவ்வாறு எழுதுகிறார். ''அது சிலருக்கு எவ்வளவு துன்பமூட்டுவதாக இருந்தாலும் கசப்பாக இருந்தாலும் கூட அது உண்மையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஒன்றாகும்...''

வீரகேசரி நிர்வாக ஆசிரியர் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்கட்கும் தமது நிறுவனத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மறுதலிப்பதில் தீவிர அக்கறை காட்டியதால், இக்பால் அத்தாஸ் கடந்த வாரம் எழுதிய பத்தியை கவனமாகப் படிக்காமலே ஒரு கடிதத்தை அவருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்! வீரகேசரியைச் சேர்ந்தவர்கள் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள், ஜனாதிபதியைப் படுகொலை செய்ய வந்த தற்கொலைக் கொலையாள சந்தேக நபர்களுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டது அதன் நிர்வாக ஆசிரியருக்குப் பெரிய பிரச்சினையாகி விட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் இப்படி எத்தனையோ தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். பொய்க் குற்றச்சாட்டுக்கள் சோடிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் அவருக்கு தெரியாததல்ல. அவரது பத்தியைப் படித்திருந்தாலே இப்படி எவ்வளவோ நடந்திருப்பது அவருக்குத் தெரிந்திருக்கும்.

ஆனால், அவரது பத்திரிகையைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் குறித்து அவருக்கு அப்படியெல்லாம் யோசிக்க முடியவில்லை. இக்பால் அத்தாஸின் கட்டுரையில் கொழும்பு கடற்கரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தற்கொலை கொலையாள சந்தேக நபரான பெண் ஒருவர் வீரகேசரி பத்திரிகையாளரான ஸ்ரீகஜனுக்கு எழுதிய கடிதம் கைப்பற்றப்பட்டதே அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாகவே வவுனியா நிருபர் மாணிக்கவாசகர் கைதும் நடைபெற்றதாக எழுதப்பட்டிருந்தது. வீரகேசரியின் நிர்வாக ஆசிரியருக்கு இந்தப் பிரஸ்தாப கடிதம் உண்மையா? அது தெரிவிக்கும் தகவல் என்ன? ஸ்ரீகஜனுக்கும் இந்தக் கடிதத்துக்கும் உள்ள உறவு என்ன என்பன போன்ற கேள்விகள் எழவில்லை. வெறும் பொலிஸ் பக்க தகவல்களை மட்டும் ஆதாரம் வைத்து இக்பால் அத்தாஸ் எழுதிய கதை அவருக்கு அச்ச மூட்டிவிட்டது. உடனே அவர்களுக்கும் எமது நிறுவனத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று அந்தப் பத்திரிகையாளர்களை மறுதலித்திருக்கிறார் அதன் நிர்வாக ஆசிரியர்.

இந்தப் பத்திரிகையாளர்கள் மீது பொலிஸ் புலன் விசாரணையில் சொல்லப்படும் தகவல்கள் உண்மையா? பொய்யா என்பது பற்றித் தீர்மானத்தை எடுக்கப்போவது நீதிமன்றம். தமது பத்திரிகையாளர்களை தமக்கு சம்பந்தமில்லாதவர்கள் என்பது போலக்காட்டி இக்பால் அத்தாஸுக்கு கடிதம் எழுத முன்பாக அவர் செய்திருக்க வேண்டியது இந்தப் பத்திரிகையாளர்கள் மீதான விசாரணை உரிய முறைப்படி நடக்கிறதா? அவர்கள் ஏதாவது நெருக்கடிக்கு, இம்சைக்கு உள்ளாக்கப்படுகிறார்களா? அவர்களது மனித உரிமைகள் பேணப்படுகின்றனவா? என்பவற்றைப் பற்றிய அக்கறையை அவர் காட்டி இருக்க வேண்டும். ஒரு பத்திரிகையாளர் தனிப்பட்ட ரீதியில் கொண்டுள்ள எந்தத் தொடர்புக்கும் அவர் சார்ந்துள்ள நிறுவனம் பொறுப்பேற்க முடியாது என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தவிரவும், வீரகேசரியை அப்படி ஒரு 'புலிகளின் கூடாரம்' என்பது போல யாரும் குறிப்பிடவும் இல்லை. அப்படியிருக்க அவர் இப்பத்திரிகையாளர்களை மறுதலித்திருக்க அவசரப்பட்டிருக்க வேண்டியதில்லை.

உண்மையில் அவரது அக்கறைக்குரிய விடயமாக இருந்திருக்க வேண்டியது புலிகளுடன் தொடர்பு என்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறிக்கொண்டே எந்த ஒரு பத்திரிகையாளரையும் பிடித்து வைத்திருக்க பொலிசுக்கு உள்ள அதிகாரம் இங்கு துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிப்பது. அப்படியில்லாமல் நியாயமான முறையில் விசாரணை நடப்பதாகக் கருதினால், நீதிமன்றத் தீர்வுவரை காத்திருக்க வேண்டியது. அதைவிட்டுவிட்டு, எந்தப் பத்திரிகை நிறுவனத்தை அவரே மெச்சும் 'நம்பகத்தன்மை' வாய்ந்த பத்திரிகையாகக் கட்டியெழுப்புவதற்காக இந்தப் பத்திரிகையாளர்கள் உழைத்தார்களோ அந்தப் பத்திரிகைக்கும் அவர்களுக்கும் இடையில் உறவு இல்லை என்று மறுக்க முயல்வது சுத்த அயோக்கியத்தனமான ஒரு செயலாகும்.

வீரகேசரியின் நிர்வாக ஆசிரியராகவும், பத்திரிகையின் பொறுப்பாசிரியராகவும் இருக்கும் ஒருவர் இப்படி நடந்து கொள்வது முறைகேடான ஒரு செயல்.

நாம் அத்தாஸுக்கு வருவோம்.

இந்த விடயத்தில் பொலிசாரின் தகவல்கள் எவ்வளவு தூரம் உண்மை என்பது பற்றி இப்போதே எதிர்வு கூறிவிட முடியாது.

ஒரு தர்மலிங்கம் விவகாரம் போல இது பிசுபிசுத்துப் போகவும் வாய்ப்புண்டு.

'ஜனாதிபதியைக் கொலை செய்யும்' முயற்சிகள் பற்றி முன்பும் பல தடவைகள் செய்திகள் வந்தன. விசாரணைகள் நடந்ததும் சிலர் கைது செய்யப்பட்டதும் செய்திகளாக வெளிவந்தது.

இன்றுவரை அந்தச் செய்திகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் யாரும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

பாதுகாப்புத் துறை ஊழல் பற்றி மூச்சுவிடாமல் எழுதும் அத்தாஸின் பேனாவுக்கு இந்த விடயங்கள் எல்லாம் மறந்து போனது விசித்திரம் தான்!

'நாட்டின் ஜனாதிபதியைக் கொல்ல எடுக்கும் முயற்சி' பொதுசன முக்கியத்துவம் பெற்ற செய்தி தான். ஆனால் அந்தத்தகவலைத் தந்தவர்கள் யார்? அவற்றின் நம்பகத்தன்மை என்ன? என்பது பற்றியும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான விசாரணைகள் எப்படி நடக்கின்றது என்பது பற்றியும் ஒரு மெல்லிய கேள்வி கூட அவரிடம் எழாதது ஏன்?

இந்தக்கேள்விக்குப் பதில் தேவையில்லை.

கேள்வியே உரிய பதிலாகும்.

அத்தாஸுக்கும் வென்சலோஸுக்கும் ஒரு முறை முதலியாரின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வரிகளைப் படிக்கச் சிபாரிசு செய்யலாம்!

அரபு

நன்றி - நூலகத்திட்டம்



# திருமலை : கெரில்லா உத்தியில் சிங்களக் குடியேற்றங்கள் !

— செம்பாட்டான் —

திருமலை மாவட்டத்தில் மீண்டும் சிங்களக் குடியேற்ற முயற்சிகளும் அதற்கு அரசியற் பலம் சேர்க்கும் முயற்சிகளும் ஆரம்பித்து விட்டன. நகருக்குள் கோவில் காணிகளிலும் கடற்கரைப் பிரதேசங்களிலும் அத்துமீறல் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளை நகருக்கு வெளியே திருமலை கண்டி வீதியில் மங்கி பிரிட்ஸ்-தம்பலகாமத்திற்கு இடையிளும் நெடுஞ்சாலை ஓரமாக காடுகளை வெட்டி குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்குப் புறம்பாக சேருவல தேர்தல் தொகுதியை மையமாக வைத்து சிங்கள மாவட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன. குடியேற்றங்களுக்கு அரசியற் பலத்தினை அளிக்கும் முயற்சியே இதுவாகும்.

பேரினவாத சக்திகள் குடியேற்றத்தையும் ஓர் போர்த் திட்டமிடல் போலவே மேற்கொண்டு வருகின்றனர். கைப்பற்றும் கட்டம், நிலை நிறுத்துகின்ற கட்டம், தற்காப்புக்கட்டம் என மாறி மாறி திட்ட மிடலை மேற்கொண்டு வருகின்றனர் திருமலை மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு கட்டங்களை மேற்கொள்கின்றனர். குடியேற்றங்கள் நிலையாக அமைந்துவிட்ட பகுதிகளில் நிலைநிறுத்தும் கட்டங்களையும் புலிகளின் ஆபத்து இருக்கும் இடங்களில் தற்காப்புக் கட்டங்களையும் புதிய குடியேற்றங்கள் தேவையான பகுதிகளில் ஊடுருவிக் கைப்பற்றும் கட்டங்களையும் மேற்கொள்கின்றனர்.


நிலைநிறுத்தும் கட்டத்தின் முயற்சிகளில் ஒன்றே புதிய மாவட்டம் அமைக்கும் முயற்சியாகும். இந்நிலை நிறுத்தல் முயற்சிகளில் கூட அவர்கள் படிமுறை ஒழுங்குகளையே பேணியிருந்தனர். முதலில் அவர்கள் குடியேற்ற வசதிகளை மத்திய அரசில் இலகுவாக்கும் பொருட்டு குடியேற்றங்களை இணைத்து சேருவல தொகுதியை உருவாக்கினர். அதனூடு தனியான பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் உள்ளூராட்சி அமைப்பில் மாற்றங்கள் வந்தபோது பிரதேச சபைகளை உருவாக்கி உள்ளூர் மட்டத்திலும் தமது அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணிக் கொண்டனர். சேருவில பிரதேச சபை, பதிசிறிபுர பிரதேசசபை, கந்தளாய் பிரதேச சபை, கோமறங்கடவலை பிரதேசசபை, மொரவேவா பிரதேச சபை, வெருகல் பிரதேச சபை என்பன இந்த வகையில் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகளாகும். தற்போது தனியான மாவட்டத்தை நோக்கி முன்னேறுகின்றனர். ஒரு மாவட்டம் உருவாக்கப்படும் போதே அரச திணைக்களங்களை, அதிகாரங்களைத் தனியாகப் பெற்ற குடியேற்றங்களை மேலும் பலமுடையதாக்கலாம் என இவர்கள் கருதுகின்றனர். ஒரு குடியேற்றம் பலமாக இருப்பதற்கு அப்பிரதேசத்தில் மத்திய தர வர்க்கம் வளர்ச்சியடைந்திருப்பதும் அவசியமானதாகும். அவர்களினாலேயே பல்வேறு வகையினாலும் அரசியல் ரீதியான அழுத்தங்களைக் கொடுத்து குடியேற்றங்களை ஸ்திரப்படுத்துவதற்கு அதிகளவில் உதவ முடியும். மத்திய தர வர்க்கம் எழுச்சியடைவதற்கு பல்வேறு வகைகளில் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக அவை இருப்பதோடு துரிதமாக மேல் நோக்கி அசைவதற்கான வாய்ப்பும் அங்கு இருக்க வேண்டும். கல்வி வசதி, பல்வேறு வேலைவாய்ப்புகள் என்பன இருக்கும் போதே அது சாத்தியமாகும். தனியான மாவட்டத்தின் மூலமே இதில் வெற்றிகளைக் கண்டு கொள்ளலாம் என்பதை பேரினவாதிகள் நன்கே உணர்ந்திருந்தனர். சட்டத்திற்கு புறம்பான வேலைகளை நுணுக்கமாகச் செய்வதற்கும் மாவட்ட அதிகாரமே கை கொடுத்து உதவும் என்பதையும் இவர்கள் தெரிந்துள்ளனர்.

இது விடயத்தில் அம்பாறை மாவட்டம் அவர்களுக்கு நல்ல அனுபவமாக உள்ளது. அங்கு மட்டக்களப்பிலிருந்து அதன் தெற்குப் பகுதியைப் பிரித்து அம்பாறையை உருவாக்கி குடியேற்றப் பிரதேசமான அம்பாறையையே அதன் தலைநகராக்கினர். மாவட்ட அரச அதிகாரத்தை தங்கள் கையில் எடுத்ததோடு குடியேற்றங்கள் விரைந்த அபிவிருத்தியைக் கண்டன. புதிய குடியேற்றங்களை அமைப்பதும், அதனை ஸ்திரப்படுத்துவதும் இலகுவாகின. மிக விரைவிலேயே மாவட்டத்தின் எண்ணிக்கை வீதாசாரமும் மாற்றப்பட்டு மூன்றாம் நிலையில் இருந்த சிங்களவர் முதலாம் நிலைக்குக் கொண்டு வரப்பட்டனா. 1946இல் அம்பாறை மாவட்டம் உருவாக முன்னர் மட்டக்களப்பு மாவட்டமாக இருந்தபோது சிங்களவர் 5.6 வீதமாகவே இருந்தனர். தற்போது அம்பாறை மாவட்டத்தில் ஏறத்தாழ 42 வீதமாக உள்ளனர். மொத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேரில் 4 பேர் சிங்களவர்களாக உள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் உள்ள 16 பிரதேச சபைகளில் சுமார் 9 பிரதேச சபைகள் இவர்களது ஆதிக்கத்தில் உள்ளன. அம்பாறை மாவட்டக் குடியேற்றங்களோடு ஒப்பிடும் போது திருமலை மாவட்டக் குடியேற்றங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளன என்றே பேரினவாதிகள் கருதுகின்றனர்.

தற்காப்புக் கட்டத்தினை திருமலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் வாழ்கின்ற அனைத்துப் பகுதிகளிலும் அவர்கள் மேற்கொள்கின்றனர். புலிகளினால் தாக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சமே இதில் அதிகமாக உள்ளது. மாவட்டமாக்கும் முயற்சியில் இத்தற்காப்பும் ஒரு அம்சமாக உள்ளது. திருமலை நகர எல்லைக்குள் உள்ள குடியேற்றங்களிலேயே தற்காப்பு நடவடிக்கைகளை அதிகளவில் மேற்கொள்ள முயற்சி செய்கின்றனர்.

ஊடுருவி தாக்கிக் கைப்பற்றும் கட்டத்தினையும் நகர எல்லைக்குள்ளேயே அதிகளவில் மேற்கொள்கின்றனர். தமிழர்களைப் பொறுத்தவரை திருமலை மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் முற்றாகப் பலமிழந்த நிலையில் நகரப் பகுதிக்குள் மட்டும் ஓரளவு பலமான நிலையில் உள்ளனர். எண்ணிக்கை அடிப்படையில் அதிகரித்த வீதத்தில் உள்ளனர். அண்மைக்கால போர் இடப்பெயர்வு எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. இங்குள்ள அரச காணிகளும் நகர சபைக்குச் சொந்தமான காணிகளாகவே உள்ளன. இந்நிலையில் குடியேற்றங்களைச் செய்வது சற்றுக் கடினமானதாக உள்ளது. தமிழர்களின் இருப்பு நகர்ப்பிரதேசத்திலேயே தங்கியிருப்பதால் தமிழ் மக்களும் தமிழ் அரசியல் சக்திகளும் நகர்ப்புறக் குடியேற்றத்தினைப் பொறுத்தவரை சற்று விழிப்பாகவே உள்ளனர். எனினும் ஆயுதப் படைகளின் பலத்தினைப் பயன்படுத்தி கோவில் காணிகளிலும், அரச காணிகளிலும் குடியேற்றங்களை நடாத்த முயற்சிக்கின்றனர். எவ்வாறாவது நகரின் சனத்தொகை வீதாசாரத்தினை மாற்றி நகர சபையைத தமது ஆதிக்கத்தில் கொண்டு வருவதே பேரினவாதிகளின் பிரதான இலக்கு. இதற்கு குடியேற்ற போர் முறையில் மரபுப் போர் முறையான திட்டமிட்ட குடியேற்றங்களுக்கான வாய்ப்புக்குறைய கெரில்லாப் போர்முறையான சட்ட விரோத அதிரடிக் குடியேற்றங்களிலேயே அதிகக் கவனம் செலுத்துகின்றனர்.






நகருக்கு வெளியேயான குடியேற்றங்களில் அவர்களுக்குப் பெரிய சிக்கல்கள் இல்லை. காடுகளாக இருக்கின்ற காணிகள் அரச காணிகளாக இருப்பதால் சட்ட விரோத குடியேற்றங்களை நடாத்துவதும் இலகுவானது. ஆனால் புலிகள் தாக்கி விடுவார்கள் என்ற அச்சமே பிரதான பிரச்சினையாக உள்ளது. அத்தோடு புலிப்பயத்தினால் சிங்கள மக்கள் குடியேற முன்வராத நிலையும் அம்மக்களுக்குப் பிரச்சினையாக உள்ளது. தேசிய இனப் பிரச்சினை இன்று சர்வதேச மயப்பட்டிருப்பதால் புதிய குடியேற்றங்களை அமைப்பதில் அரசும் தனது சமாதான முகமூடிக்காக சற்று தயக்கம் காட்டி வருகின்றது.

### குடியேற்ற விடயத்தில் தமிழ்ச் சக்திகளின் எதிர்வினை

குடியேற்றங்கள் தொடர்பில் தமிழ்ச் சக்திகளின் எதிர்வினை கவலைப்படுமளவுக்கு வரலாற்று ரீதியாகவே பலவீனமான நிலையில் உள்ளது. திருமலை மாவட்டத்தின் அனைத்துக் குடியேற்றங்களும் சுதந்திரத்திற்கு பின்னரே மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் அதிகரித்த சனத்தொகையைக் கொண்ட பெரும் குடியேற்றங்கள் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டன. நேரடியாகவே கண்ணுக்குத் தெரிந்த இக்குடியேற்றங்களைக் கூடத் தடுக்கும் முயற்சிகளில் தமிழ்த்தலைமைகள் போதியளவு ஈடுபடவில்லை. கண்ணுக்குத் தெரியாத சட்டவிரோத குடியேற்றங்களில் இவர்கள் முற்றாகவே கவனம் செலுத்தவில்லை. குறைந்த பட்சம் தற்காப்பு முயற்சிகளாவது இவர்கள் எடுக்காதது தான் மிகவும் கவலைக்குரியதாகவிருந்தது. தமிழரசுக் கட்சிக் காலத்தில் மொழிப் போராட்டத்திற்குக் கொடுத்த அக்கறையில் பத்து வீதத்தினைக் கூட இவர்கள் குடியேற்றப் போராட்டத்திற்குக் கொடுக்கவில்லை. தமிழ்த் தலைமையின் யாழ் ஆதிக்க நிலை தான் தங்கள் பிரச்சினைக்கு கொடுத்த முக்கியத்துவத்தை குடியேற்றத்திற்குக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இலகுவில் புறக்கணிக்கத்தக்கதல்ல. இவ்வளவிற்கும் சுதந்திரம் அடைந்தகாலம் தொடக்கம் திருமலை தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தமிழரே இருந்திருக்கின்றனர். மூதூர் தொகுதியிலும் 1960-1965 காலப் பகுதியிலும் 1970-1977 காலப்பகுதியிலும் இரு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக தமிழரே இருந்திருக்கின்றார்.

பெருந் திட்டமிட்ட குடியேற்றங்களைப் பொறுத்தவரை அல்லைத்திட்டம் 1949 இலும் கந்தளாய்த் திட்டம் 1950இலும், பதவியாத் திட்டம் 1954இலும், மொறவேவாத் திட்டம் 1959இலும், மகாதிவுல்வெவத் திட்டம் 1979இலும் உருவாக்கப்பட்டன. இவற்றில் அல்ல திட்டத்தில் 75 வீத நிலங்கள் சிங்கள மக்களுக்கும் 25 வீத நிலங்கள் தமிழ் பேசும் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. கந்தளாய்த் திட்டத்தில் 80 வீத நிலங்கள் சிங்கள மக்களுக்கும் 20 வீத நிலங்கள் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. பதவியாத் திட்டத்தில் 100 வீதம் சிங்கள மக்களே குடியமர்த்தப்பட்டனர்.

மொறவேவாத் திட்டத்தில் 55 வீத நிலங்கள் சிங்கள மக்களுக்கும் 45 வீத நிலங்கள் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. மகாதிவுல்வெவத் திட்டத்தில் 65 வீத நிலங்கள் சிங்கள மக்களுக்கும் 35 வீத நிலங்கள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் கொடுக்கப்பட்டன.

உண்மையில் இது தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும், காணிக்கச்சேரிகள் நடைபெற்ற போதும் அதற்கு எதிரான போராட்டங்களை நடாத்தவதற்கு நிறையவே வாய்ப்புக்கள் இருந்தன. உதாரணமாக அல்லைத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது சிங்கள மக்கள் இலங்கையில் உள்ள எல்லா சிங்கள மாவட்ட அரசாங்க அதிபர்களினூடாகவும் கோரப்பட்டனர். இம்முரண் நிலையைப் போக்க போராட்டத்தினை நடாத்தியிருக்கலாம். தமிழ் மக்களின் விண்ணப்பங்களை தாமே திட்டமிட்டு தமிழ்ப் பிரதேசங்களில் சேகரித்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம். உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் இதனைப் பாரியதொரு அரசியல் பிரச்சினையாக்கி இருக்கலாம். அவற்றையெல்லாம் செய்யாது விட்டு கூப்பாடு போட்டது தான் இவர்கள் கண்ட மிச்சம்.

### இனி என்ன செய்யலாம்?

இன்றைய நிலையில் தற்காப்பு நிலையை எடுப்பது தான் தமிழர்களைப் பொறுத்தவரை முதன்மையான விடயம். முதலில் திருமலை நகரத்தைப் பாதுகாக்க வேண்டும். திருமலை நகர எல்லைக்குள் எந்தவித குடியேற்றங்களுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. அவ்வாறு நிகழ முற்பட்டால் அதனை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி அரசியல் அழுத்தங்களினூடாகவும், மக்கள் போராட்டங்களினூடாகவும் அதனைத் தடுத்து நிறுத்த முற்பட வேண்டும். நகர்க்குடியேற்றங்கள் பல்வேறு வழிகளில் ஏற்பட வாய்ப்புண்டு. வீடமைப்புத்திட்டங்கள் என்ற பெயரிலும் மீனவர் திட்டங்கள் என்ற பெயரிலும் இடம் பெறலாம். இதற்குப் புறம்பாக படையினரின் முகாம்கள் அமைத்தல் என்ற பெயரிலும் பலாத்காரமாக இடம் பெறலாம். இவையெல்லாம் தொடர்பாக விழிப்பு நிலை அவசியம். தமிழ்ப் பத்திரிகைகளிடத்தும் தமிழ் அரசியல் சக்திகளிடத்தும் தமிழ் கல்விமான்களிடத்தும் இவ்விழிப்பு நிலை அதிகளவில் இருக்க வேண்டும்.

நகருக்கு வெளியே தமிழ்ப் பிரதேசங்களை அரசியல் ரீதியாக பலப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அரசியல் அழுத்தங்களைக் கொடுத்து அவ்விடங்களில் தமிழர்களுக்கென தனியான பிரதேச சபைகளை உருவாக்க வேண்டும். அதனூடாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களினூடாகவும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

புதிய குடியேற்றங்களை எங்காவது உருவாக்குகின்றார்களா என்பதைக் கண்டறிந்து அரசியல் ரீதியாக அதனை அம்பலப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இராணுவ அழுத்தங்களினால் மக்கள் கிராமங்களை விட்டு இடம் பெயர்வது இன்று பிரதான பிரச்சினையாக உள்ளது. இதனைத் தடுப்பதற்கான வழிவகைகள் பற்றியும் யோசிக்க வேண்டும்.

குடியேற்ற விடயத்தில் நாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் பயங்கரமானது. அது ஒரு புற்று நோய். சிறிது சிறிதாக அரித்தரித்து முழு உடலையுமே அழித்து விடக் கூடியது. பாலஸ்தீனத்திலும், அயர்லாந்திலும், மிந்தானோவிலும், கொசேவாவிலும் பாரம்பரிய மக்களின் அதிகாரத்தை அழிக்க இதுவே பயன்பட்டது. இங்கும் பேரினவாதிகளின் பிரதான ஆயுதம் இது தான்.

○

நன்றி - நூலகத்திட்டம்




*நோர்வே விவசாயப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள சர்வதேச சூழல் அபிவிருத்தி ஆய்வு நிறுவனத்தில் 'அபிவிருத்திக் கற்கைநெறி'ப் பேராசிரியராகவும், சர்வதேச கல்வித்துறை இயக்குனராகவும் கடமையாற்றும் பேராசிரியர் சண்முகரத்தினம் (சமுத்திரன்) அவர்களுடனான நேர்காணல் இது.*

*இடம்பெயர்ந்த மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றியும் அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம், அவர்களுக்கு உதவும் நோக்குடன் எடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன தொடர்பாக இவர் கடமையாற்றும் நிறுவனத்தில் ஒரு சர்வதேச ஆராய்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்படும் இடம்பெயர்வுகள் குறித்தே முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இந்த அடிப்படையில் இலங்கை, ஆபிரிக்க நாடுகளான சூடான், மொசாம்பிக் போன்ற நாடுகளை உள்ளடக்கியதாக இந்த ஆய்வு நடைபெறவுள்ளது. இம்முயற்சியை மேற்கொள்ளும் நோக்குடன் இலங்கை வந்துள்ளார் பேராசிரியர் சண்முகரத்தினம் அவர்கள்.*

*இலங்கை தொடர்பான இவ்வாய்வினை மேற்கொள்ளும் முதற்கட்ட நடவடிக்கையாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் வாழும் வன்னி, புத்தளம் ஆகிய பிரதேசங்களை ஆய்வுக்குரிய களங்களாக அவர் தெரிவு செய்துள்ளார்.*

*அண்மையில் புத்தளம் சென்று, அங்கு வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு கடந்த 8 வருடங்களாக அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களைச் சந்தித்து உரையாடி வந்துள்ள சண்முகரத்தினம் அவர்கள் தமது மனப்பதிவுகளை இந்நேர்காணல் மூலம் சரிநிகர் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்:-*



நேர்காணல் : வி. சி. ஷ.
நேர்காணல் தொகுப்பு : எம்.கே.எம். ஷகீப்

PHOTO : SHAKEEB



# வடக்கு முஸ்லிம்கள்:
# "தாயகம் திரும்புவதே சரியான தீர்வு"

-பேராசிரியர் சண்முகரட்னம்

**இடப்பெயர்வு தொடர்பான கள ஆய்வினை மேற்கொள்ள இலங்கை வந்துள்ளீர்கள். உங்கள் இந்த ஆய்வு பற்றிய ஒரு முன்விளக்கத்தைச் சொல்ல முடியுமா?**

இடம்பெயர்ந்த மக்களின் சமூக, பொருளாதார நிலைமை பற்றியும், அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம், அவர்களுக்கு உதவும் நோக்குடன் எடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சர்வதேச ரீதியான ஆராய்ச்சித்திட்ட மொன்றினை நான் கடமையாற்றும் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதில் நான் இலங்கை இடப்பெயர்வு தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளேன். வெள்ளப்பெருக்கு, அபிவிருத்தி பணிகள் போன்று பல்வேறு காரணிகளாலும் உள்நாட்டு இடப்பெயர்வுகள் இடம்பெறினும் நாம் குறிப்பாக உள்நாட்டு யுத்த இடப்பெயர்வுத் தாக்கங்களை கருத்திற்கொண்டே செயற்படுகின்றோம்.

***இந்தக் கள ஆய்வின் ஆரம்பச் செயற் பாடாக தாங்கள் புத்தளத்தில் இடம் பெயர்ந்துள்ள வடபகுதி முஸ்லிம்க ளைச் சென்று சந்தித்து வந்துள்ளதாக அறிகிறோம். அவர்கள் தொடர்பாக தங்களுக்கு ஏற்பட்டுள்ள அபிப்பிரா யங்கள் என்ன என்பதை அல்லது அவர்கள் தொடர்பான தங்கள் நிலைப் பாடு என்ன என்பதை விளக்குவீர்களா?***

வடக்கிலிருந்து 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களில் பெரும்பகுதியினர் புத்தளம் மாவட்டத்தில் இருக்கிறார்கள். அவர்கள் அகதி முகாம்களிலும், தனியான சில குடியிருப்புக் களிலும் வசிக்கிறார்கள். நான் புத்தளத்தில் இவர்களைச் சந்தித்போது இவர்கள் எட்டு ஆண்டுகளை இடம்பெயர்ந்த நிலையில், அவர்களுடைய சொல்லில் சொல்வதானால் அகதிகளாகக் கழித்து வருகின்றார்கள். இங்கு யாழ்., முல்லைத்தீவு, மன்னார் போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களைச் சந்தித்தேன். நான் எனது ஆய்விற்காக இந்த இடம்பெயர்ந்த மக்களைக் கண்டு பேசியபோது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில அமைப்புக்களைக் கண்டு பேசிய பொழுது அவர்கள் என்னிடம் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டார்கள். 'இந்த ஆய்வை நீங்கள் எதற்காகச் செய்கிறீர்கள்? இது உங்களுடைய ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மாத்திரமா? உங்கள் கல்வித்தேவைக்காகவே இதைச் செய்கின்றீர்களா? அல்லது இந்தப் பிரச்சினையால் பாதிக்கப் பட்டுள்ளவர்களுக்கு பயன்படக்கூடியவகையில் ஏதாவது முடிவுகளைக் காணவேண்டும் என்ற நோக்கில் செய்கிறீர்களா? என்று உண்மையில் இத்தகையதொரு சமூக, விஞ்ஞான ஆய்வினை மேற்கொள்ளும்போது இந்தக் கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது. இது ஒரு தார்மீகக் கேள்வியாகும். நாம் எதற்காக சமூக ஆய்வை மேற்கொள்ள வேண்டும்? குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும்பொழுது அதுவும் இடம்பெயர்ந்த மக்களின் சமூகப் பொருளாதார நிலைமைகள் என்று பார்க்கும்பொழுது நிச்சயம் அந்த மக்களுடைய இன்றைய நிலையிலிருந்து அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் 'அவர்களுக்கு உதவக்கூடிய செயற்பாடு களிலும் பங்குபற்றாவிட்டால் இத்தகைய சமூக விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் தந்தக்கோபுரங் களில் இருப்பவர்களாகவே இருந்து விடுவார்கள். அவர்கள் கேட்ட கேள்வியும் நியாயமானது. அந்தக் கேள்வியை நான் எதிர்பார்த்திருந்தேன். அத்துடன் நான் இந்த ஆய்வை மேற்கொண்டது வட கிழக்கில் நீண்டகாலமாக நடந்து வரும் இந்த உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களிடையே இடம்பெயர்ந்தவர்களது நிலைமை களை ஆராய்ந்து அறிவினைப் பெறுவதற்காக வுமாகும். நான் புத்தளத்தையும், வன்னியையும் தேர்ந்தெடுத்ததே முஸ்லிம், தமிழ் மக்களுடைய நிலைமைகளை அறிந்து கொள்வதற்காகவும் தான். அந்த அடிப்படையில் அவர்கள் கேட்ட கேள்வி முக்கியமானது. அதற்கு நான் கூறினேன்! நிச்சயமாக நான் செய்கிற இந்த ஆய்வு இப்பிரச்சினையின் தீர்வுக்கு உதவக்கூடிய சில தகவல்களைக் கொண்டதாகவே இருக்கும் எனறு. இதுவே எனது அவாவும் ஆகும். அப்போது இன்னொரு கேள்வியும் எழுந்தது. இந்த ஆய்வினைச் செய்யும் காலத்தில் - நான் அங்கிருக்கும் காலத்தில் - இந்த இடம்பெயர்ந்த வர்களுடைய அபிவிருத்திக்கு, முன்னேற்றத்திற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவலாம். இந்த வகையில் அங்குள்ள வர்களுடன் சேர்ந்து ஒரு அரைநாள் பட்டறை (Work Shop) ஒன்றை வைத்தோம். அதில் நீண்ட காலமாக இடம் பெயர்ந்தவர்களுடைய சமூக, பொருளாதார பிரச்சினைகள் அவர்கள் வாழ்கின்ற நிலைமைகள், உள்ளூர் மக்களது நிலைமைகள், உறவுகள் முரண்பாடுகள் பற்றியும், வளங்களுக்கான தேவை, அதனால் ஏற்படும் முரண்பாடுகள் பற்றியெல்லாம் நிறையப் பேசினோம். இதற் கூடாக, கூட்டாக இவற்றைச் சிந்தித்து எந்த வகையில் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்ற கேள்விகளையும் நாம் எதிர்நோக்கினோம். இத்தகைய கேள்விகளை எதிர்கொள்ளும்போது குறிப்பாக புத்தளம் பிரதேசத்தில் உள்ளூர்வாசிகள் பலர் இடம் பெயர்ந்தவர்களைவிட் வறியவர்களாகவும் இருப்பதைக் கண்ணுற்றேன். ஆகவே இங்கு அந்த உள்ளூர்வாசிகளையும் உள்ளடக்கிய திட்டங்கள் தான் பயன் தரும். குறிப்பாக இங்கு சில கிராமப்புரங்களில் உள்ளூர்வாசிகள் இடம்பெயர்ந் தோரால் சிறுபான்மை ஆக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இந்த இடம்பெயர்ந்தவர்களுக்கென செய்யப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் அங்குள்ள உள்ளூர்வாசிகளை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருக்குமென் றால் அதிக பயனுள்ளதாக இருக்கும்.

***இவ்வாறான முடிவுக்கு தாங்கள் ஏன் வருகிறீர்கள் என அறியலாமா?***

புத்தளம் ஒரு வளர்ச்சி பெற்ற பகுதியல்ல. குறிப் பாக, யாழ்ப்பாணத்தோடு ஒப்பிடுகையில் பின்தங்கிய பகுதியாகவே உள்ளது. யாழ்ப்பா ணமே நீண்டகாலம் அபிவிருத்திக் குறைவுடனும், பாதிப்புடனும் இருந்துள்ளது. அதைவிட ஒரு மோசமான அபிவிருத்தி நிலையே புத்தளத்தில் இருந்தது. இங்கு வடக்கில் இருந்து மக்கள் வந்தபோது அங்குள்ள மக்கள் அவர்களை வரவேற்றார்கள். நிலைமையறிந்து சகல ஏற்பாடு களையும் செய்தார்கள். ஆனால், காலப்போக்கில் அங்கு சில பிரச்சினைகள் எழுந்தன. உ+மாக, அங்கு அடிப்படையான தொழில்கள், விவசாயமும், கடற்தொழிலும். மற்றையது இந்த இரு தொழில்களுடன் தொடர்புடைய கூலி வேலை. முதலில் இங்கு பெருந்தொகையினர் வந்ததால் கூலி குறையத்தொடங்கியது. இதனால், உள்ளூர்வாசிகள் இடம்பெயர்ந்தோருடன் போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டது. அடுத்தது இடம்பெயர்ந்தோர் கடற்தொழில் செய்ய முயல்கிறபோது அங்கிருக்கிற கடல்வள உரிமைப் பிரச்சினை எழுகின்றது. குறிப்பாக சிறுகடல் மீன்பிடி தொடர்பாக அப்பிரச்சினை எழுகிறது. குறிப்பிட்ட கிராமத்தவர்களது பொதுச் சொத்தாக இருக்கிற சிறுகடல்வள எல்லையில் பெருந் தொகையினர் மீன்பிடிக்க முயல்கையில் வளப்பற்றாக்குறை ஏற்படுகிறது. இதேபோன்று தான் பெருங்கடலிலும். அவர்கள் தூரச்சென்று மீன்பிடித்து வந்தாலும், இறங்கு துறை தொடர்பான பிரச்சினை இருக்கின்றது. இத்தகைய முரண் பாடுகள் வலுவடைகின்றன. கூடவே இவற்றைத் தீர்க்கும் நோக்குடன் அங்குள்ள அமைப்புகள் இயங்கி வருகின்றன. இவற்றைப்பற்றி சற்று ஆழமாகப் பார்ப்பதுதான் என் ஆய்வினுடைய நோக்கமும்.

புத்தளத்தில் இடம்பெயர்ந்தவர்களோடு நான் கலந்துரையாடியபோது எழுப்பப்பட்ட வேறு சில அரசியல் பிரச்சினைகள்/கேள்விகள் பற்றியும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் சந்தித்த சகலரும் தாம் தமது பாரம்பரிய வாழிடங்களுக்கு திரும்பிச் செல்வதுதான் இறுதித் தீர்வு என்பதில் ஒரே கருத்துக்கொண்டிருக்கி றார்கள். எட்டு வருடமாக வாழிடங்களிலிருந்து பெயர்ந்து வாழ்ந்து வரும் இவர்களில் சிலர் புத்தளத்தில் நிரந்தரமாய்க் குடியேறும் வாய்ப்புக்களை பெற்றிருந்தும் தாம் திரும்பவும் தங்கள் சொந்த மண்ணுக்குச் செல்வதையே விருப்பமாய்க் கொண்டிருக்கிறார்கள். அதுவே அவர்களுடைய கனவு.

இது சம்பந்தமாக நான் பலருடன் உரையாடினேன். சாதாரண மக்களிலிருந்து, இடம்பெயர்ந்த அமைப்புப் பிரதிநிதிகள் வரை நான் கலந்துரையாடினேன். இதிலிருந்து ஒன்று தெளிவாகிற்று. என்னோடு உரையாடியவர்கள் சிலர் என்னைக் கேட்டார்கள். 'நீங்கள் ஒரு தமிழ் ஆய்வாளர் என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினையில் ஈடுபாடுள்ளவர் என்ற நிலையில் நீங்கள், நாங்கள் விரும்புகின்ற இந்தத்தீர்வுக்காக எந்த வகையில் உதவமுடியும்? என்று. எனது அடிப்படை நிலைப்பாடும் அதுவாக இருப்பதால் - அதாவது வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுடைய தாயகம் வடக்கே. அவர்கள் தங்கள் தாயகத்துக்குத் திரும்புவதே சரியான தீர்வு. அதைத்தவிர வேறு ஒரு மாற்றுத்தீர்வு நியாயமாக இருப்பதாக எனக்குப் படவில்லை - அவர்களுடைய அடிப்படை நிலைப்பாடும் எனது நிலைப்பாடும், ஒன்றென்றே நான் கூறியிருந்தேன். உ+மாக, நீண்டகாலமாக இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களில் கணிசமானோர் குறிப்பாக மன்னார் பகுதிகளிலிருந்து வந்தவர்கள், தங்களுடைய கிராமங்களுக்குப் போவதற்கு முயற்சித்துள்ளார்கள். ஒரு சிலர் போய் வந்துள்ளார்கள். எனக்குக்கிடைத்த தகவலின்படி சில கிராமங்களில் இவர்களுக்கும், அங்குள்ள அடிமட்ட இயக்க உறுப்பினர்களுக்கும், இடையே பரஸ்பர புரிந்துணர்வு இருப்பது போலவே படுகிறது. இதை போய் வந்தவர்கள் தெரிவித்தி ருந்தார்கள். இதைவிட இவர்கள் இன்னொரு முக்கியமான விடயத்தையும் தெரிவித்திருந் தார்கள். தாயகத்தில் நண்பர்களாக, அயலவர்க ளாக இருந்த தமிழர்கள் இப்போதும் கூட இங்கு வந்து, தங்களுடன் தங்கி, சுமுக உறவைப்பேணி வருகிறார்கள் என்று தெரிவித்தார்கள். இத்தகைய தொடர்புகளை அவர்கள் தொடர்ந்தும் பேணியே வருகிறார்கள். நீண்டகாலமாக இப்படி இடம்பெயர் நிலையில் இருந்தால் இந்தத் தொடர்பு கூட பலவீனமடையலாம். இன்று பார்க்கும்போது அதை அவர்கள் பேணியே வருகிறார்கள், அப்படி இருப்பதையே விரும்புகிறார்கள்.

– அடுத்த இதழில் முடியும்...

நன்றி - நூலகத்திட்டம்



விக்ரமபாகு கருணாரத்ன எழுதுகிறார்...

# தமிழ் இடதுசாரிகளின் பொறுப்பு யாது?



கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன
பொதுச் செயலாளர், ந. ச. ச. கட்சி

மாகாண சபைக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட வேண்டும். அல்லாவிட்டால், பாதுகாப்பு வழங்குவதற்காகப் படைகளில் கணிசமான தொகையினரை தென்னிலங்கைக்கு அழைக்கும் பட்சத்தில் வடக்குக் கிழக்கு யுத்தத்தில் பின்னடைவு ஏற்படுவதைத் தடுக்கமுடியாது. அதனால் ஏற்படும் விளைவுகளுக்குத் தான் பொறுப்பேற்கமுடியாது எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அடித்துக்கூறி வருகிறார். இதற்கு மகாநாயக்க தேரர்களும் ஆசி வழங்கியுள்ளதுடன், மாதுலுவாவ சோபித தேரோ போன்ற பேரினவாதக் ''கனவான்களும்'' ரத்வத்தைக்கு உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் யாவருக்கும் சவால் விடுவதற்காக 23.07.98ம் திகதி கொழும்பு கோட்டையில் நடத்தப்பட்ட மறியல் போராட்டம் வெற்றிகரமாக அமைந்திருந்தது.

மாகாண சபைகளால் எவருக்கும் எதுவித உபயோகமுமில்லை. எனவே, மாகாண சபைத் தேர்தல்களால் எது வித பிரயோசனமும் இல்லை எனும் இவர்களின் நிலைப்பாட்டுக்கு சாட்டையடி கொடுப்பதாக அன்றைய மறியல் போராட்டம் விளங்கியது. இந்தப் போராட்டத்தினை நவ சம சமாஜக் கட்சி மட்டுமல்லாமல், மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) முன்னின்று நடத்தியதானது ஒரு மகத்தான வெற்றியாகும். யுத்தமா? தேர்தலா? யாரும் தனது யுத்த நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு விழைகிறார்களா? என்ற கேள்விகளைத் தொடுத்து வந்த ரத்வத்தைக்கு, ''ஆம். நாம் அதற்குத் தயார்'' எனும் அழுத்தம் திருத்தமான முறையிலேயே மறியல் போராட்டத்தில் பங்குபற்றிய ஆயிரக்கணக்கானோர் ஆக்ரோசமாகப் பதிலளித்தனர்.

### ஜே.வி.பி.யின் பங்களிப்பு ஒரு விழிப்புணர்ச்சிக்குரியது

அடுத்ததாக நான் ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட வேண்டும். அதாவது, இன்றும் ஜே.வி.பி. ஒரு ஒளிவு மறைவற்ற இனவாத சக்தியேயென்பது தான் இயங்கியல் ரீதியற்ற முறையில் சிந்திப்பவர்களின் எண்ணமாகும். அப்படிப்பட்டவர்களுக்கு அன்றைய மறியல் போராட்டம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும். இனவாத சக்திகள் அனைத்தும் ரத்வத்தையைச் சுற்றி அணிதிரண்டு அவரின் யுத்தப் பேரிகைகளை முற்றுமுழுதாகப் பலப்படுத்தி வரும் இவ்வேளையில் ஜே.வி.பி., நவ சம சமாஜக் கட்சியுடன், தோளோடு தோள் நின்று 'தேர்தலை நடத்து' எனக் குரலெழுப்ப முடியுமென்றால் நிச்சயமாக அது ஒரு இனவாத நிலைப்பாடல்ல.

### ஐ.தே.க.வின் போக்கு யுத்தத்துக்கு இசைவானது

மறுபுறத்தில் ஐ.தே.கவை எடுத்துக் கொள்வோம். தேர்தலை ஒத்திவைப்பதை எதிர்ப்பதாக அவர்கள் கூறித் திரிகின்றார்கள்; ஆனால், ரத்வத்தையின் பகீரத யுத்தப் பிரயத்தனங்களுக்கு எதிராக அவர்கள் சின்னி விரலையாவது உயர்த்தவில்லை. முற்றாக வாழாவிருக்கின்றனர். தேர்தல் தொடர்பாக அரசாங்கத்தின் பிசுபிசுப்பான போக்குக்கு இசைவாக அவர்கள் தமது தேர்தல் பிரச்சாரங்களை ஆறப்போட்டுவிட்ட நிலையில் உள்ளனர். அவர்கள் மதில்மேல் பூனை போல் நடந்து கொள்வதையும் ஒரு தந்திரோபயமாக் கையாண்டு, சிறுபான்மையின மக்களின் ஆதரவை எதிர்காலத்தில் ஏமாற்றிப் பெறுவதற்கான நோக்கம் அவர்களிடம் இருக்கத்தானே செய்யும்.

### தேர்தலுக்கான போராட்டம் = யுத்த எதிர்ப்புப் போராட்டம்

தேர்தலை ஒத்திவைக்காமல் நடத்த வேண்டும் எனப் போராடுவதானது யுத்தத்திற்கு எதிரான பரந்துபட்ட போராட்டமாகும் என்பதை மறந்து விடக்கூடாது. அனுருத்தவும், அவரைச் சூழ்ந்து ஆல வட்டம் பிடிக்கும் யுத்த வெளிக் கும்பல்களும் தேர்தலா? யுத்தமா? என்று கூக்குரலிடும்போது, ''உடனடியாகத் தேர்தலை நடத்து'' என நாம் சங்கநாதம் செய்யவேண்டும். அதுதான் மிகப் பரந்துபட்ட முறையில், மிகச்சிறந்த முறையில் ''உடனடியாக யுத்தத்தை நிறுத்து'' எனக் கூறுவதாக அமையும்.

### அனுருத்தவின் யுத்த முயற்சிகளை முறியடிப்பதற்கே ந.ச.ச.க. போராடுகின்றது

நானும், நவ சம சமாஜக் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அனுருத்தவின் யுத்த முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனும் அசைக்க முடியாத நிலைப்பாட்டினையே சிரமேற்கொண்டு போராடி வருகிறோமென்பது யாரும் அறிந்த விடயமாகும். 1979ம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்ட வேளை அதனை எதிர்த்துச் சவப்பெட்டி ஊர்வலம் நடத்தியது முதல், யுத்தத்திற்கெதிராக எமது கட்சி சர்வதேச மட்டத்திலும் போராடி வந்துள்ளதை உலகமேயறியும். இதனால், குறிப்பாக முன்னைய ஆட்சியாளர்கள் எமக்கு ஈழம் வாதிகள் என நாமம் சூட்டியதையும் மக்கள் அறிவர். அதற்காக, நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குகிறோம் என்பதற்கில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது ஒரு சோசலிசக் கட்சியல்ல. அது ஒரு ஜனநாயகக் கட்சியுமல்ல. இன்னும் சொன்னால், அது ஒரு ஜனரஞ்சகமான மக்கள் படையுமல்ல. அது மக்களின் ஆதரவுடன் கூடிய ஜனநாயக ரீதியான தேசிய விடுதலை இயக்கமே என்றால், அதன் வெற்றிக்கு நிச்சயமாக எமது ஆதரவு உண்டு. எதுவாயினும் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தினை நாம் ஆதரித்துப் போராடி வருகிறோம் என்பது கண்கூடு.

ஜே.வி.பி.யைப் பற்றி யார் எந்தவித சந்தேகம் கொண்டிருந்தாலும் கூட சந்திரிகா, அனுருத்த மற்றும் யுத்த வெறியர்களுக்கெதிராக ஜே.வி.பியுடன் இணைந்து போராடக் கூடியஎதயிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்த் தேசிய விடுதலை தொடர்பாக ஜே.வி.பி. எமது கட்சியின் நிலைப்பாட்டில் இல்லை என்பது உண்மை. அதைப் பூசி மெழுக வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது. ஆனால், அவர்கள் இன்று ஒரு முற்போக்கான நிலைக்கு நிச்சயமாக நகர்ந்துள்ளனர் என்பதை நாம் உணரவேண்டும்.

### ஐக்கிய இடதுசாரி முன்னணி கட்டியெழுப்புவதைத் தமிழ் இடதுசாரிகள் ஆதரிக்கவேண்டும்

பழைய இடதுசாரித் தலைவர்களும், கட்சிகளும்தவறான பாதையில் இறங்கியதால் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது வரலாறு! அதற்காக இடதுசாரி இயக்கம் பிழையானது என யாரும் கூற முடியாது. எனவேதான் சாதகமான நிலைமைகள் உருவாகும் போதெல்லாம் அவற்றைப் பற்றிப் பிடித்து தென்னிலங்கையில் யுத்தம் முதலிய படுபாதகங்களுக்கெதிராக ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பும் எமது முயற்சிக்கு உதவுவதும், உறுதுணையாக நிற்பதும் தமிழ் இடதுசாரிகளின் கடமையாகும். மாறாக, ஒன்றிணைந்த நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னதாக ஜே.வி.பி., எமது அனைத்து வேலைத் திட்டங்களையும் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என வேண்டுவதானது தவறான அணுகுமுறையாகும்.

○

---

# யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகமா ? இராணுவ நிர்வாகமா?

''இலங்கைப் பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் உங்களை வருக! வருக! என வரவேற்கிறார்கள்.'' இவை வலிகாமம் மக்கள் தென் மராட்சியிலிருந்து, வலிகாமம் திரும்பிக்கொண்டிருந்தபோது சாவகச்சேரியில் காணப்பட்ட வாசகங்கள். தென்மராட்சியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த மக்களுக்கு மீசாலை புத்தூர் சந்தியில் வைத்துக் குளிர்பானமும், சொக்கிளேற்றும் படையினரால் வழங்கப்பட்டன. மக்களும் குதூகலத்துடன் வலிகாமம் திரும்பினர். வலிகாமம் திரும்பும் மக்களுக்கு உடனடி நிவாரணமாக 7000/= ரூபா வழங்கப்படும் என அரச தொடர்பு சாதனங்கள் அறிவித்தன.

தாம் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி நிம்மதியாகத் தமது வாழ்க்கையைத் தொடங்கலாம் என நினைத்து வலிகாமம் திரும்பிய மக்களுக்குக் கிடைத்தது ஏமாற்றமே. தமது பதினான்கு வருட அகதி வாழ்வுக்கு ஒரு முடிவு கிட்டும் என நினைத்து வந்த வலிகாமம் வடக்குப் பகுதி மக்களை இன்று வரை தமது இருப்பிடங்களுக்குச் செல்வதற்குப் படையினர் அனுமதிக்கவில்லை. மாறாக, வலிகாமம் வடக்குப் பிரதேசம், பாதுகாப்பு அமைச்சரினால் அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இவர்கள் நிரந்தர அகதிகளாக்கப் பட்டுள்ளனர்.

விவசாயிகளை விவசாயம் செய்வதற்குக் கூடப் படையினர் அனுமதி வழங்கவில்லை. தென்மராட்சியின் பெரும்பாலான நெல் வயல்களில் நெல் விதைப்பதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர். மீனவர்கள் மீன் பிடிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் போது தமது அடையாள அட்டைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்து விட்டே மீன் பிடிக்கச் செல்லவேண்டும். இவர்கள் திரும்பி வந்ததும் இவர்களது அடையாள அட்டைகள் திரும்ப வழங்கப்படும். உடனடி மீளக் குடியமர்த்தல் நிவாரணமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த 7000/= ரூபா தற்போது 5000/= ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதுவும் அரைவாசிப்பேருக்குமேல் இன்னமும் வழங்கப்படவில்லை. காரைநகர், தீவுப் பகுதிகளில் இன்னமும் மக்கள் மீளக் குடியேறவில்லை. குடாநாட்டின் பெரும்பாலான பாதைகள் தடை செய்யப்பட்டுள்ளன. உ+ம் செம்மணி வீதி.

சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் போது குடாநாட்டில் கணிசமான ளவு வீடுகள் மட்டமாக்கப்பட்டன. வீடு சேதமடைந்தவர்களுக்கு ரூபா 25,000 நட்ட ஈடு வழங்கப்டும் எனக் கூறி கிராம சேவகர்களும், வீடுகள் சேதமடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் இவர்களுக்குப் பத்துப் பைக்கற் சீமெந்து வழங்கப்படும் எனக் கிராம சேவகர்கள் தெரிவித்தனர். தற்போது சில கிராமசேவகர்கள் இந்தப் பத்துப் பைக்கற் சீமெந்தும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளனர். இவை போதாதென்று தற்போது நிவாரண வெட்டு நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

''புலிகளின் பதினான்கு வருடக் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து படையினர் யாழ்ப்பாண மக்களை மீட்டெடுத்துள்ளனர்.'' இவை வல்லை வெளியில் காணப்படும் வாசகங்கள். ''புலிகளால் இழக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களின் கௌரவத்தைப் படையினர் மீண்டும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.'' இவை புத்தூர்ச் சந்தியில் காணப்படும் வாசகங்கள். இதன் அர்த்தம் சந்திக்குச்சந்தி வயோதிபர்களுக்கும், நோயாளிகளுக்கும் நடை பழக்குதல் ஆகும். உதாரணமாக, யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் போகும் ஒருவர் சுமார் பத்துக் கிலோ மீற்றர் பிரயாணத்தின் போது ஐந்து இடங்களில் தமது வாகனத்தை விட்டு இறங்கிப் படையினருக்கு சல்யூட் அடிக்க வேண்டும். தென்மராட்சியில் இடம் பெயர்ந்திருந்தபோது யுவதிகள் கூட இரவு 9 மணிக்கும் தனியே சைக்கிள்களில் வீதிகளில் திரிந்தார்கள். இன்று பகலில் கூடப் பெண்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடியைத் தாண்டும் போதும் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனேயே சோதனைச் சாவடிகளை நெருங்குகின்றனர்.

விலைவாசியைப் பொறுத்த மட்டில் பொருட்கள் யாவும் கட்டுப்பாடு விலையிலிருந்து பத்து, இருபது ரூபா கூடுதலாக வைத்தே விற்பனை செய்யப்படுகின்றன. சில சமயங்களில் ஐம்பது, நூறு ரூபா கூடுதலாக வைத்தும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. 87/= ரூபா விலை பொறிக்கப்பட்ட அங்கர் பால்மா 92/= ரூபாவாகவும், 260/= ரூபா விலை பொறிக்கப்பட்ட செருப்பு 350/= ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. இந்த இடத்தில் யாழ்ப்பாண வர்த்தகர்களின் 'சேவை'யையும் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம் இப்பொருட்களுக்குக் கப்பல் கட்டுப் பணம் என்று சொல்லியே வர்த்தகர்கள் பொருட்களைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். ஆனால், சிலோன் டுபாக்கோ கம்பனி மட்டும் விமான மூலம் சிகரெட்டைக் கொண்டு வந்து (கப்பல் கட்டணத்தை விட விமானக் கட்டணம் 9 மடங்கு அதிகம்) கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்து வருகின்றது.

யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்ததைத்தொடர்ந்து 637 பேர் காணாமல் போயுள்ளனர். பதினைந்துக்குமேற்பட்ட பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். இவர்களில் அரைவாசிப்பேர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பின் கொல்லப் பட்டுள்ளனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட போது அவர்களுடன் உடனிருந்த குற்றத்திற்காக சுமார் ஆறு பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். இவை உத்தியோகபூர்வத் தகவல்கள். மூடி மறைக்கப்பட்டவை?

யாழ்ப்பாணம் புலிகளிடமிருந்து மீட்டெடுக்கப்பட்டுவிட்டது. அங்கு சிவில் நிர்வாகம் நடைபெறுகிறது. வீதிகள் திருத்தப்படுகின்றன. தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன. மின்சாரம் வழங்கப்படுகின்றது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக அங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் உள்ளூராட்சிப் பிரதிநிதிகளின் நிர்வாகம் நடக்கிறது. இதை விட வேறென்ன வேண்டும். நீதிமன்றங்கள் இயங்கவிட்டால் கூட முன்னாள் போராளிகள் இருக்கிறார்கள் நீதி வழங்குவதற்கு.

நிச்சயம் சந்திரிகாவின் பெயர் மகாவம்சத்தில் இடம்பெறத்தான் போகிறது. யாழ்ப்பாண மக்களை, அவர்களது சொந்த மண்ணிலேயே அடிமைகளாக்கிய பெருமை வேறு யாரை அடைய முடியும்? முன்னாள் போராளிகளின் தோள்களில் இப்போதும் துப்பாக்கிகள் தொங்குகின்றன. ஆனால், அவர்களது இப்போதைய கவனம் எல்லாம் அறிக்கைகள் விடுவதிலேயே. கண்டிக்கிறோம், வன்மையாகக் கண்டிக்கிறோம். இவைதான் தமிழ்க்கட்சிகளின் தாரக மந்திரம். அவர்கள் கை உயர்த்துவதற்கும் பின்னிற்க மாட்டார்கள் என்பது சொல்லித்தெரிய வேண்டியதல்ல. கடந்த 2 1/2 வருட ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் அரசு சாதித்தது இதைத்தான். முன்பு புலிகளின் நிர்வாகம். இப்போது இராணுவ நிர்வாகம்.

*(எழுவான்)*

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்த் தேசியவாதத்தின் பாராளுமன்ற அரசியல் வறுமை

சி.சிவசேகரம்

**ஈழத் தமிழ் தேசியவாதமென்பது தன் இன்றைய தேசிய அடையாளத்தை இலங்கையின் அரசியற் சுதந்திரத்தின் பின்பே விருத்தி செய்தது. இதற்கு முன்னர் தமிழர் என்ற பொது அடையாளமும் இவர்களில் ஒரு பகுதியினரது நலன் சார்ந்த ஒரு அடையாளமாகவே இருந்தது.**

எந்தவொரு சமூகமும் சமூகப்பிரிவும் சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சமூகங்களும் தமக்கெனத் தனித்துவமானதும், பொதுவானதுமான சில சமூக - அரசியற் பண்புகளைக் கொண்டு தமது அடையாளத்தைக் காணவும், காட்டவும் முனைகின்றன. இவ்வாறான அடையாளத் தேடல் பெரும்பாலும் குறிப்பாக அரசியல், பொருளாதாரத் தேவைகளாலும் புற நிர்ப்பந்தங்களாலும் ஏற்படுகிறது. தன் அடையாளந்தேடும் சமூகத்தின் தன்மையும் உள்ளடக்கமும் அது தேட முனையும் அடையாளத்தினின்று மிகவும் வேறுபடுவதற்கான வாய்ப்பு உண்டு. கால இடச் சூழல்களால் நிர்ணயமாகும் இத்தகைய அடையாளங்கட்குக் காலத்தால் அழியாததும், அடிப்படையானதுமான எதுவிதமான பண்பும் இல்லை. ஆயினும், மனித அடையாளத்திற்கும் அதன் பல்வேறு கூறுகட்குமான தேவை வரலாற்றில் என்றுமே இருந்து வந்துள்ள ஒன்று தான்.

தேசிய அடையாளம், குறிப்பான வரலாற்று நிர்ப்பந்தங்களால் ஏற்படுகிற ஒன்று என நான் இங்கு அதிகம் வலியுறுத்த அவசியம் இல்லை. வரலாறு, தேசியவாதத்தின் தேவைகட்கு ஏற்ப, மீளவும் புனையப்படுவதற்கும் ஒரு தேசிய இனத்தினதோ, தேசத்தினதோ வரலாற்றுக் கால, இட எல்லைகள் விரிவுக்கு ஆளாகி வரலாற்று உண்மைகளை விழுங்கி விடுவதற்கும் ஈழத்தமிழ்த் தேசியவாதத்தின் வரலாற்றியலிலும் சிங்கள பௌத்த தேசியவாத வரலாற்றியலிலும் சான்றுகள் அனேகம். இது போன்ற வரலாற்றின் புனைவிளக்கம் சாதி அடிப்படையிலும் நிகழுகிறது, பிரதேச அடிப்படையிலும் நிகழுகிறது. எங்கெங்கெல்லாம் நடைமுறை அரசியல் அதை அவசியமாக்குகிறதோ அங்கெல்லாம் அது நிகழ்ந்து வந்துள்ளது.

ஈழத் தமிழ்த் தேசியவாதமென்பது தன் இன்றைய தேசிய அடையாளத்தை இலங்கையின் அரசியற் சுதந்திரத்தின் பின்பே விருத்தி செய்தது. அதற்கு முன்பு தமிழர் என்ற பொது அடையாளமும் அவர்களில் ஒரு பகுதியினரது நலன் சார்ந்த ஒரு அடையாளமாகவே இருந்தது. அந்த அடையாளம் இலங்கையில் அன்று தமது அடையாளத்தை உணர்த்த முற்பட்ட பிற சிறுபான்மை இனத்தவரது அடையாளங்கள் போல இலங்கை என்ற தேசிய அடையாளத்தினுள்ளேயே தனது இருப்பை நிலைநிறுத்த முற்பட்டது. சிங்களத் தேசியவாதமா இலங்கைத் தேசியவாதமா என்ற தடுமாற்றம் பேரினவாத அரசியல்வாதிகள் மத்தியில் இருந்தது. இலங்கையின் அடையாளத்தைப் பௌத்த சிங்கள அடையாளமாக நிறுவும் ஒரு போக்கு குறிப்பிட்ட வர்க்க நலன் சார்ந்தது என்பதும் நாமறிந்ததே. இதை இயலுமாக்கிய வரலாற்றுச் சூழல்கள் பற்றி நாம் எளிதாக மறந்து விடுகிறோம்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சிங்கள, தமிழ் சமூகங்களின் பிரதிநிதிகள் எனப்பட்டோர் சில அதிகார வர்க்கங்களது நலன்களையே சார்ந்திருந்தனர்.

சிங்கள இன அரசியலில் மலையகம், கரைப்பகுதி என்ற வேறுபாடும் சாதியமும் வலுவான தாக்கம் செலுத்தின. அவ்வாறே தமிழ் இன அரசியலில் பிரதேசவாதமும், சாதியமும் வலுவாக இருந்தன. இவற்றின் தடயங்கள் இன்னும் அழியாதது மட்டுமன்றி இன்னமும் இவை தலை நீட்டுவதையும் நாம் காண்கிறோம்.

பழைய சமூகத்தின் சாதிய, நிலவுடைமை அதிகார அடுக்கும் காலனித்துவம் உருவாக்கிய நிருவாக அதிகார அடுக்கும் அச்சூழலில், உருவாக்கிய தோட்டமும் நகரமும் சார்ந்த குறை வளர்ச்சி பெற்ற முதலாளிய அதிகார அடுக்கும் இணைந்த இலங்கையின் அரசியலில் தேசிய இன அடிப்படையிலான ஒரு அரசியற் போக்கு படிப்படியாக விரிவடைந்தது. இந்த அரசியலின் தலைமை அன்று முதல் இன்று வரை முதலாளிய, நிலவுடமை வர்க்க நலன் சார்ந்தவர்களது கையிலேயே இருந்து வந்துள்ளது. (இவ்வாறான அரசியலைப்பயன்படுத்தித் தம்மை வளர்க்க முயன்ற சில 'இடதுசாரி' அரசியற் சக்திகள் சிங்களவர் மத்தியிலும், தமிழர் மத்தியிலும் இருந்துள்ளவாயினும், இனவாத அரசியல் எப்போதுமே ஒடுக்கும் வர்க்கங்களது நன்மையையே பேணியுள்ளது என்பது வேறு விடயம்.)

குறுகிய தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் சிங்களப் பேரினவாதத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் சார்ந்தே நிகழ்ந்துள்ளன, எனினும் இலங்கை என்ற விரிவான தேசிய அடையாளத்தை நிராகரித்துத் தமிழ்த் தேசியவாதம் தன்னை அடையாளங்காட்டும் நிகழ்வை 1976ல் தான் தெளிவாக அடையாளங் காண முடியும். அதற்கு முன்பு ஈழம் பற்றிப்பேசியவர்கள் இருந்தார்கள். ஆனால், அது ஒரு புறக்கணிக்கத்தக்க அரசியற் போக்காகவே இருந்தது. இலங்கையின் பேரினவாத அரசியற்போக்குகள் இவ்வாறான ஒரு நிகழ்வுக்கு அனுசரணையாகவே இருந்தன என்பதும், சிங்களப் பேரினவாதத்தைக் காரணங் காட்டி வளர்க்கப்பட்ட குறுகிய தமிழ்த் தேசியவாதம் தனது சந்தர்ப்பவாத அரசியலால் தமிழ்த் தேசிய இனத்தையும் பிற சிறுபான்மைத் தேசிய இனங்களைச் சார்ந்த மக்களையும் எவ்வளவு தூரம் பலவீனப்படுத்தியுள்ளது என்பதை நான் இங்கு விவரிக்க அவசியம் இல்லை.

1948க்குப்பிந்திய தமிழ்த் தேசியவாத அரசியலின் வளர்ச்சியை நாம் தமிழ்க் காங்கிரசின் ஆதிக்கக் காலம், தமிழரசுக்கட்சியின் ஆதிக்கக் காலம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதிக்கக்காலம் என்வற்றினூடாக அடையாளங்காணலாம். இந்த அரசியலின் தோல்வியின் விளைவாகவே தமிழீழ விடுதலை இயக்கங்கள் எனப்படும் இயக்கங்கள் உருவாகி வளர்ந்தன. இவற்றின் பலவற்றில் இன்றைய அவலத்தையும் ஆயுதமேந்திய போராட்டம் மக்கள் போராட்டமாக வளர இயலாத சிக்கலையும் விளங்கிக்கொள்ளத் தமிழ்த் தேசியவாதப் பாராளுமன்ற அரசியற் கட்சிகளின் வரலாறு பற்றிய அறிவு சிறிது உதவும்.

தமிழ்த் தேசியவாத அரசியல் தமிழ்த் தேசிய உணர்வின் விருத்தியுடன் சேர்ந்து மாறி வந்துள்ளது. சிங்களப் பேரினவாத அரசியல் இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்பே அடையாளங் காணப்பட்டது. இலங்கைத் தேசிய காங்கிரசினுள் ஏற்பட்ட இனவாத அரசியல் முரண்பாடுகளின் குழந்தையான தமிழக்காங்கிரசின் அரசியல், வசதிபடைத்த வேளாள உயர்குடியினரது நலன்சார்ந்தே அமைந்திருந்தது. இதனால், தமிழ்க் காங்கிரசின் தளம் யாழ்ப்பாணக் குடாநாடாக இருந்தது. வடமாகாணத்தில் யாழ்ப்பாணத் தமிழ் வேளாள மேட்டுக்குடி, ஆதிக்கம் இருந்த அளவுக்கு, அக்கட்சியால் வடமாகாணத்தில் எல்லாத் தொகுதிகளிலும் செல்வாக்குச் செலுத்த முடிந்தது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை தவிர்ந்த எந்தத் தொகுதியிலும் அதனாற் காலூன்ற முடியவில்லை என்பதை விடச் செயற்படும் நோக்கம் இருந்ததா என்பதும் கவனிக்க வேண்டியது.

தமிழ்க் காங்கிரசின் அணுகுமுறை அன்று மேட்டுக்குடிகளின் அரசியலிற் காணப்பட்ட பேரம் பேசும் அரசியலாகவே இருந்தது. சுதந்திர இலங்கையின் புதிய அரசியல்யாப்பு வரைவுக்கான ஆலோசனையாக ஐம்பதுக்கு ஐம்பது என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டபோதும், இந்தப் பேரம் பேசும் அரசியற் கோணத்திலிருந்தே பிரச்சினை அணுகப்பட்டது. பிரித்தானிய எஜமானர்கள் இந்த ஐம்பதுக்கு ஐம்பது பிரேரணையை ஏற்க இயலாமைக்கான காரணங்களில் சிங்களப் பெரும்பான்மையினருக்கு உரிய ஐம்பது போக மற்ற ஐம்பதும் அதேவிதமான நியாயத்துடன் தேசிய சிறுபான்மை இனப்பிரிவுகளிடையே பங்கிடப்பட இடமளிக்கப்படவில்லை என்பது நியாயமான ஒன்று. அவ்வாறே தமிழ்க்காங்கிரசின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை ஏற்கப்பட்டிருந்தாலும் அதன் பின்விளைவுகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பது இன்னொரு விடயம். ஃபிஜியில் இந்திய வம்சாவளியினர் பாராளுமன்றப் பெரும்பான்மை பெற்றதன் விளைவாக இரண்டு தசாப்தங்கட்கு முன்பு ஃபிஜியில் ஏற்பட்ட இராணுவ ஆட்சி கவனிக்கத்தக்க ஒரு உதாரணம்.

தமிழ் மக்கள் (அதாவது தமிழ் மேட்டுக் குடிகள்) பெரும்பான்மை இனத்துடன் (அதாவது சிங்கள மேலாதிக்க வர்க்கத்துடன்) சமரசமாகவும், தந்திரமாகவும் உறவாடித் தமக்கு வேண்டியவற்றைப் பெற வேண்டும் என்ற அணுகுமுறை, தமிழ்க் காங்கிரஸ் அரசியலை விளக்க ஓரளவு உதவும். சி. சுந்தரலிங்கமும், ஜி.ஜி.பொன்னம்பலமும் ஐ.தே.க. ஆட்சியில் அமைச்சர்களாகிய நோக்கமும் இதுவென்றே கொள்ளலாம். ஆயினும், இதற்கு மலையகத் தமிழர் கொடுத்த விலை பெரிது.

தமிழ்க் காங்கிரஸ் ஐ.தே.க. ஆட்சியில் பங்காளியானதன் மூலம் ஐ.தே.க. கணிசமான நன்மைகண்டது. திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.சிவபாலன் தனக்கு துணை அமைச்சர் பதவி கிடைக்காததையிட்டு 1949அளவில் தமிழ்க் காங்கிரசில் இருந்து ஐ.தே.கவுக்கு கட்சி மாறினார். இதன் பின்பு, திருகோணமலையில் தமிழ்க் காங்கிரஸ் எந்தத்தேர்தலிலும் போட்டியிடவில்லை. ஐ.தே.க. ஒரு அகில இலங்கைக் கட்சி என்ற அந்தஸ்தைப் பெறும்விதமாக வடக்கில் அது வளரத் தமிழ்க் காங்கிரசுடனான உறவு உதவியது.

எனினும், தமிழ்க் காங்கிரசால் தமிழ் மக்களது நலன்களை ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்ற அடிப்படையில் பேணமுடியவில்லை. 1948க்கு முன்பிருந்தே தொடங்கிய திட்டமிட்ட குடியேற்றங்கள் கிழக்கு மகாணத்திற் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் அவர்களைச் சிறுபான்மையினராக்கும் முயற்சியில் மும்முரமடைந்தன. சிங்களம் மட்டுமே அரச கரும மொழி என்ற கொள்கையை ஐ.தே.க. மேற்கொள்ளாமற் தடுப்பதற்கு தமிழ்க் காங்கிரஸ் தலைமை, 1955ல் எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

தமிழ்க் காங்கிரசால் தமிழ்த் தேசிய இனத்தின் தலைமையை ஏற்று வழிநடத்த இயலாமைக்கு அதன் வர்க்கத்தன்மையும் யாழ் - மைய அணுகுமுறையும் முக்கியமான காரணங்கள். அதன் பார்வையின் தீர்க்கமின்மை ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையிலும் அதைவிட மோசமாக பிரசாவுரிமைச் சட்டத்தின் தொடர்பாகவும் தெளிவானது. ஆயினும், 1952 தேர்தலில் யாழ்ப்பாணக் குடாநாடு தமிழ்க் காங்கிரசைத் தண்டிக்கவில்லை. 1956ல் மொழிப் பிரச்சினையை வைத்தே தமிழ்க் காங்கிரஸ் நிராகரிக்கப்பட்டது. 1956ல் அது கண்ட வீழ்ச்சி நிரந்தரமானது. பின்பும் ஓரிருவர் அக்கட்சியின் பேரில் தேர்தல்களில் வென்றாலும், தமிழ்க் காங்கிரசைத் தமிழ் மக்களது முக்கியமான ஒரு கட்சியாகக் கருதுமளவுக்கு அந்த வெற்றிகட்கு ஒரு முக்கியத்துவமுமிருக்கவில்லை. தமிழசுக் கட்சி யாழ்ப்பாணத் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்க் காங்கிரசைத் தோற்கடிப்பதற்கு எடுத்த முயற்சி கைகூட, 1965 வரை காத்திருக்க நேர்ந்தமை உண்மையே என்றாலும், 1956க்குப்பின்பு தமிழரசுக் கட்சியே தமிழ் மக்களது பிரதான அரசியற் கட்சியாகக் காணப்பட்டது என்பது மறுக்க இயலாதது.

தமிழரசுக் கட்சியின் முக்கியமான அரசியற் பங்களிப்பு தமிழ்ப் பேசும் மக்கள் என்ற அரசியற் கருத்தாக்கமாகும். மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது எதிர்த்த தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களால் அதே பிரச்சினையின் அடிப்படையில் தமிழரசுக்கட்சி நிறுவப்பட்டது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஏன் பிரிந்து போய்த் தமிழரசுக் கட்சியை நிறுவ முனைந்தார் என்பதற்குத் தமிழ்க் காங்கிரஸ் தரப்பில் கூறப்படும் காரணம் யாதெனில், அவர் தனக்கும் மந்திரிப்பதவி கிடைக்கும் என எதிர்பார்த்து அது கைகூடாததால் பிரிந்து போனார் என்பதாகும். இது எவ்வாறிருந்தாலும், மலையக மக்களின் பிரசாவுரிமைப் பிரச்சினை காரணமாகத் தமிழ்க் காங்கிரசில் பிளவு ஏற்படுவது தவிர்த்திருக்கமுடியாத ஒன்றென்றே தோன்றுகிறது. ஏனெனிற் கோப்பாய் பா.உ. ஆன கு. வன்னியசிங்கமும் மூதவை உறுப்பினரான ஈ.எம்.வி. நாகநாதனும் அப்பிரச்சினை தொடர்பாக மிகவும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அதைவிட, 1956ல் மொழிப் பிரச்சினை தோன்றிய சூழலில், தமிழ்க் காங்கிரசுக்கு எதிரான ஒரு தமிழ்த் தேசியவாத அணி வடக்கில் வலிவு பெற்றிருக்கும் என்பது மிகவும் இயல்பானதே. 1956ன் பின் தமிழ்க் காங்கிரசின் சரிவும் சிங்களப் பேரினவாத அரசியலின் எதிர்வினையாக எழுந்த ஒரு தமிழ்த் தேசியவாதக் கட்சி மேலோங்குவதும் நியாயமாக எதிர்ப்பார்த்திருக்கக் கூடியவை.

தமிழரசுக் கட்சி மலையகத் தமிழர் பற்றி எடுத்த சரியான நிலைப்பாட்டை எவரும் தமிழரசுத் தலைமையின் விரிவான பார்வையென்றும், தீர்க்கதரிசனமென்றும், சமூக நீதியென்றும் எண்ணி மயங்கலாம். ஆயினும், 1956 தேர்தலின் பின்பு, பத்தே வருடங்களில் இந்த மயக்கங்கள் பெரும்பாலும் தெளிவடையப் போதிய சாட்சியங்கள் தோன்றிவிட்டன.

தமிழரசுக்கட்சி முன்வைத்த தமிழ்ப் பேசும் மக்கள் என்ற கோட்பாடு தமிழ்ப் பேசும் மக்களை மொழி வாரியாக ஒரு அரசியற் தலைமையின் கீழ்க்கொண்டு வருகிற நோக்கில் அமைந்த அளவில் முன்னைக் கால அரசியலினின்று வேறுபட்டிருந்தாலும், அது இலங்கைத் தமிழரின் தலைமையையும் குறிப்பாக யாழ் மைய மேலாதிக்கப் பார்வையையும் தவிர்க்கும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும், தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னை நிலைநிறுத்துவதில் கணிசமான வெற்றிபெற்றது. சுயேச்சையான தமிழ் வேட்பாளர்கள் ஓரிருவர் தமிழரசுக்கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று வந்தமை இங்கு குறிப்பிட வேண்டியது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமிழரசுக்கட்சித் தலைமையில் என்றுமே முஸ்லிம் எவரும் முக்கியமான பொறுப்பில் அமரும் வாய்ப்பு ஏற்படவில்லை என்பதை மட்டுமே குறிப்பிட்டால் போதுமானது. முன்னாட் திருகோணமலைப் பா.உ.வான ந. இ.இராஜவரோதயமும், முன்னாட் பட்டிருப்புப் பா.உவான எஸ்.எம்.இராசமாணிக்கமும் முக்கியமான கட்சித் தலைமைப் பதவிகளில் (பேரளவில்) சிலகாலம் வைக்கப்பட்டிருந்த போதும், கட்சியின் தீர்மானங்கள் எப்போதுமே யாழ்ப்பாணஞ் சார்ந்த ஒரு சிறு குழுவின் எண்ணப்படியே எடுக்கப் பட்டு வந்தன.

1961 சத்தியாக் கிரகத்தின் பின்பு பனாகொடை இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் ஏறத்தாழ எல்லாத் தமிழரசுப் பிரமுகர்களும் இருந்தனர். அப்போது யாழ் மாவட்டத்துப் பிரமுகர்கள் தமக்குள் கூடிப்பேசி முடிவெடுக்க முனைவதைக் கவனித்த ந.இ.இராஜவரோதயம் கிண்டலாக அவர்களிடம் ''அடுத்த சத்தியாக் கிரகம் உங்களுக்கு எதிராகத் தான்'' என்று கூறியதாக அவருடன் தடுப்புக் காவலில் இருந்த ஒருவர் அண்மையில் எனக்குத் தெரிவித்ததை இங்கு குறிப்பிடுவது தகும். ஏனெனில், திருகோணமலையில் யாழ்ப்பாணத்தவர்கட்கு எதிரான உணர்வுகள் குறைவு. அங்கிருந்தே இத்தகைய உணர்வுகள் எழக்கூடிய விதமாகத் தமிழரசுக்கட்சியின் தலைமையிலுள்ளோர் நடந்து கொண்டனர்.

அப்போதைய மட்டக்களப்புப் பா.உ.வான செ. இராசதுரைக்கும் 'தமிழரசுத் தளபதி' அ. அமிர்தலிங்கத்துக்குமிடையிலான மோதல்கள் பனாகொடையில் வெகு பிரசித்தம். இராசதுரையைத் தமிழரசுக்கட்சியின் தலைமையில் முன்னுக்கு வரவிடாமல் மறிக்கவும் பின்பு 1977 தேர்தலில் அவரைத் தோற்கடிக்கும் நோக்கிலும் எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி அதிக இரகசியம் இல்லை.

வரும்...

நன்றி - நூலகத்திட்டம்




ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி யேறக அடிப்படையாகவிருந்த காரணிகள் மிகப்பலவாகவிருந்தன என்ற போதிலும் இறுதிக் கட்டக் கயிறிழுப்புக்கு ஒரு அற்புதம் நிகழ்ந்தது.

ஆம். இந்த நாட்டின் ஆட்சியை நிர்ணயிக்கும் மிகமிக நிர்ணயகரமான ஒரு தருணம் மலையகத் தமிழர்களுக்குக் கிடைத்தது. அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் மலையகத்தின் மாற்று அரசியல் கட்சி எனக்கருதப்பட்ட மலையக மக்கள் முன்னணிக்கும் அதன் தலைவர் சந்திரசேகரனுக்கும் கிடைத்தது. மிகமிகத் தீர்க்கமான அத்தருணம் மலையகத் தமிழர் தவறவிட்ட அற்புதமான தருணங்களில் ஒன்று. ஆட்சிபீடமேற வேண்டிய எக்கட்சியும் மலையகத் தமிழரின் கோரிக்கைகள் அனைத்தையும் கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. ஆனால், துரோகத்தனமிக்க சந்தர்ப்பவாதத் தலைமையால் அத்தருணம் வீணடிக்கப்பட்டு விட்டது.

## அருவருப்புக்கு உள்ளாகிவிட்ட பொ.ஐ.மு.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த அரசாங்கத்தின் செயலூக்கம் பற்றிய பாரிய வெறுப்புணர்வுகளுக்கு மத்தியில் ஒரு மாகாண சபைத் தேர்தலை அது சந்திக்கவுள்ளது.

- ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம்.
- இலஞ்சம் ஊழலை ஒழிப்போம்.
- சமாதான முறையில் இனப் பிரச்சினையைத் தீர்ப்போம்.
- சுயமரியாதையுள்ள ஒரு ஜனநாயக.சமூகத்தைப் படைப்போம்.
- அரசியல் அமைப்பை மாற்றுவோம்.
- அச்சமற்ற வாழ்வை சிருஷ்டிப்போம்.

எனப் பல கலர் கலரான வாக்குறுதிகளின் மத்தியில் ஆட்சிபீட மேறிய அரசாங்கம் எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு விட்டு

- யாழ். குடாநாட்டின் மீதான சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையையும், ஜயசிக்குறு படை நடவடிக்கையையும்

மட்டுமே மூலதனமாக வைத்து ஆட்சி நடத்த வேண்டிய வங்குரோத்து நிலையையடைந்துள்ளது. அது வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக

- 5 லட்சம் தமிழ் மக்களை காட்டுக்குள் விரட்டியது,
- பத்தாயிரக்கணக்கான தமிழ் இளைஞரைக் கைது செய்தது,
- நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞரைக் காணாமல் போகச் செய்தது,
- நூற்றுக்கணக்கான தமிழ் பெண்களை இராணுவ நரவேட்டைக்குப் பலி கொடுத்தது.

இவ்வளவும் செய்தும் பசியடங்காத சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் ஏக புத்திரியும், ஏக காவலர்களும் தாம் தாம் என்று பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள நிலையில்,

- எக்கம தேசய, எக்கம ரட்டய
- தவளம
- சுதுநெலும் வியாபாரய

என்பன மூலம் தாம் யாருடைய ஜனாதிபதி எனவும், தமது அரசாங்கம் யாருடைய அரசாங்கம் எனவும், அம்பலப்படுத்திக்கொண்டுள்ளது.

இந்நிலையில் மலையகத் தமிழருக்கென தனிச்சிறப்பான வாக்குறுதிகளையும் சந்திரிகா அரசாங்கம் வழங்கத் தவறவில்லை. அவையாவன.

- வாழ்நிலையையும், சூழலையும், சுகாதார நிலையையும் மேம்படுத்தப் பெருந்தோட்டப் பிரதேசங்களில் விஷேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்.
- பெருந்தோட்டத் தொழிலாளரின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்.
- தோட்டப் பாடசாலைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- மின்சக்தி வசதி, குடிநீர் வினியோகம், போக்குவரத்து, வீதிகள் என்பவற்றை மேம்படுத்த அவசரத்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தல்.
- பெருந்தோட்டத் தொழிலாளரின் வருமானத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- சுகாதாரத் தேவைகள், தாய்மாரினதும், பிள்ளைகளினதும், நலன்கள் என்பவற்றை மேம்படுத்த அவசியமான விஷேட திட்டம் ஒன்று பெருந்தோட்டத்துறையில் நடைமுறைப்படுத்தப்படும்.
- இந்திய வம்சாவளியினர் என்பதில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பாரபட்சங்களும், அசமத்துவமும் இல்லாதொழியச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.
- சமத்துவத்தையும், சமத்துவ அந்தஸ்தையும் உறுதிப்படுத்தச் சட்டமூலம் கொண்டு வரப்படும்.
- பெருந்தோட்டத் தொழிலாளரின் குடியிருப்புகள், பிரதேச சபைகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
- தொழிலாளர் உரிமைகளை உத்தரவாதப்படுத்தவும், பெருந்தோட்டத் தொழிலாளரின் நலன்புரி வசதிகளையும் உறுதிப்படுத்த அவசியமான வழிவகைகள் செய்யப்படும்.

என்ற 10 அம்ச உறுதிப்பாடு 1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தின் மூலம் வழங்கப்பட்டது.

இவற்றில் வீடமைப்புக்காக ஒரு பிரதியமைச்சரை நியமித்ததையும், தோட்டத்துறை உள்ளகக் கட்டமைப்பு அமைச்சொன்றைத் தொண்டமானுக்கு வழங்கியதையும் தவிர அரசு உருப்படியாக மலையக மக்களுக்குச் செய்த சேவை ஒன்றுமில்லை.

## செய்தது ஒன்றுமில்லை

தோட்டத்துறை மக்களின் - மலையக தமிழரின் வாழ்க்கை நிலைமையானது பொ.ஐ.மு. ஆட்சியில் மிகவும் கீழிறங்கிப் போனதன் விளைவை 1997ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்களில் மலையக மக்கள் பிரதிபலித்தனர்.

- தோட்டத்துறையை 50 வருடக் குத்தகைக்குத் தனியாருக்குக் கொடுத்தமை.
- 10,000 ஏக்கர் தோட்டக் காணிகளைச் சுவீகரித்தமை.
- மலையக இளைஞர்களை ஆதாரமின்றிக் கைது செய்து வதைத்துத் தடுத்துவைத்தமை.

ரத்னசிறி விக்ரமநாயக்க தலைமையில் போலி வீட்டுரிமைச் சான்றிதழ் வழங்கி ஏமாற்றியமை போன்ற மலையகத் தமிழருக்கு விரோதமான நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு

- 1500 ஆசிரியர்களை நியமித்தமை.
- ஓரளவுக்கு வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியமை.
- தோட்டங்களுக்கு மின்சாரம் வழங்க முன்வந்தமை

போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய சில நலன்களையும், மலையகத் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளது.

## சொந்த மக்களுக்கே துரோகம்!

பொ.ஐ.மு. அரசாங்கத்தை ஆதரித்து நிற்கும் சந்திரசேகரனும், தொண்டமானும் மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை, அற்ப சலுகைகளுக்காக, விலைபேசி விற்பவர்கள் என்பதனைப் பல முறை நிரூபித்துள்ளனர். சாகும்வரை அமைச்சராகவே இருப்பேன் என்கிற தொண்டமானும், தனது சின்னச்சின்ன ஆசைகளுக்காகத் தயக்கமின்றி அடிப்படைக் கோரிக்கைகளைத் தூக்கி எறியும் சந்திரசேகரனும், மலையகத் தமிழரின் உண்மையான தலைமைகள் அல்ல என்பதும், தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்க்கத்தினதும், சேவை புரிகின்ற எஜமானரதும் நலன்களுக்காக மக்களை விற்றுவிடக்கூடியவர்கள் என்பதும் பலமுறை நிரூபணமாகியுள்ளது.

இந்த அடிப்படையில் தான் பொ.ஐ.மு.வை ஆதரிப்பதற்காகத் தாம் ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்ததாகவும், அதனைப் பொ.ஐ.மு. ஏற்றுக் கொண்டு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், ம.ம.முன்னணித் தலைவர்களும், இதொ.கா. தலைவர்களும் மீண்டும், மீண்டும் மக்களுக்குப், பொய்யுரைத்து வந்தனர். ஆனால், எந்தக் கட்சியுடனும் ஒப்பந்தம் செய்யவில்லையென அரசாங்கம் பல தடவை மறுத்தது. அந்த ஆறு அம்சக் கோரிக்கைகள் என்ன என்பது கூட இதுவரை யாருக்கும் தெரியாது.

இந்த நிலைமைகளின் பின் 1997ம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் மலையகத் தமிழர் மிகத் தீர்க்கமாகத் தமது தீர்ப்பை வழங்கினர். இதனை ஏற்கமறுத்த மலையகத் தலைமைகள்

- மக்கள் சாராயத்திற்கு வாக்களித்தார்கள் என தொண்டமானும்,
- மக்கள் பழக்கதோசத்தால் ஐ.தே.க.வை ஆதரித்தனர் என ம.ம.மு.வும்கூறி மக்களை மடையர்கள், முட்டாள்கள், நன்றி கெட்டவர்கள் எனவும் திட்டித் தீர்த்தனர்.

அத்தேர்தலில் மலையகத் தமிழர் ஐ.தே.கட்சியை ஆதரித்தமைக்கு காரணம் பொ.ஐ.மு. மீதும் துரோகத்தனமிக்க மலையகத் தலைமைகள் மீதும் கொண்ட வெறுப்பே என்பதனை அறியாத அல்லது ஏற்க மறுத்தவர்களின் வாதங்களின் வங்குரோத்துத்தனத்தை ஜனாதிபதித் தேர்தலில் மலையகத் தமிழர் வாக்களித்த வீதத்தைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். 1994 பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க. - இ.தொ.கா. கூட்டை ஆதரித்த மலையகத் தமிழர் அதே ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவை பெரும்பான்மையாக ஆதரித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

- இ.தொ.கா. தனது கட்டுப்பாட்டில் இருந்த நுவரெலியா, அம்பேகமுவ பிரதேச சபைகளை இழந்ததோடு டசின் கணக்கான உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தோல்வியுற்றனர்.
- மலையக மக்கள் முன்னணி முறையே 1989தேர்தலில் 10,000 வாக்குகளும், 1993 மகாண சபைத்தேர்தலில் 12,000 வாக்குகளும், 1994 பாராளுமன்றத் தேர்தலில் 27,000 வாக்குகளும் பெற்றிருந்தது. ஆனால், 1997 பிரதேச சபைத் தேர்தலில் பல உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டு 18,000 வாக்குகளையே பெற்றது.
- மலையகத் தொழிற்சங்க சக்திகள் பெரும் தோல்வியைச் சந்தித்திருந்தன.
- 1996, 1998 வேலைநிறுத்தங்களில் மிகமோசமாக ஏமாற்றப்பட்ட தொழிலாளர்கள் மாபெரும் தன்னிச்சையான எதிர்ப்பியக்கங்களைக் காட்டினர். 1998 வேலை நிறுத்தம் காட்டிக் கொடுக்கப்பட்ட பின்னர் 100 க்கும் மேற்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மலையகமெங்கும் நடத்திய மக்கள், வேலைக்குத் திரும்புமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை மிகமோசமாக அலட்சியப்படுத்தினர்.

பல தோட்டங்களில் தொழிற்சங்கப் பிரமுகர்களை விரட்டியடித்ததோடு, சந்தா கொடுக்கவும் மறுத்தனர்.

இந்தப் பின்னணியில், மலையகத்தின் அரசியல், தொழிற் சங்கச் சக்திகள் மீதான கடும் விமர்சனங்களோடு முதல் தடவையாகத் தொண்டர் தாபன முதலாளிகளின் நடவடிக்கைளும் கடும் விமர்சனத்திற்குள்ளாகி வருகின்றன.

மேலும் இ.தொ.காவின் முன்னாள் பொதுச்செயலாளர் எம்.எஸ்.செல்லச்சாமி தொடர்ந்துள்ள வழக்கினால், இ.தொ.காவின் சேவல் சின்னம் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. ம.ம.முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அணிக்கும் இடம் தவறிவந்துவிட்ட செயலாளர் பீ.ஏ.காதர் அணிக்கும் இடையிலான முரண்பாட்டின் உச்சக் கட்டத்தில் அக்கட்சியின் சின்னமும் முடக்கப்படலாம்.

கடந்த 1993 மாகாண சபைத் தேர்தல்களில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பி.வி.கந்தையா, செங்கொடிச் சங்கப் பொதுச் செயலாளரும் மாகாண சபை உறுப்பினருமான ஓ.ஏ. இராமையா ஆகியோர் தோல்வியடைந்திருந்தனர்.

## இருப்பதையும் இழக்கச் செய்தவர்கள்

இப் பின்புலத்தின் அடிப்படையோடு இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடும்

**மலையகத்தில் தோன்றிய கூட்டணிகள் கூட்டணி மக்களுக்குப் புதியதல்ல.**

1977-1994-இ.தொ.கா- ஐ.தே.க. கூட்டாட்சி.

1989-1991- மலையக மக்கள் முன்னணி புளொட் கூட்டணி

1989-மாகாண சபைத் தேர்தல் - ஐக்கிய சோசலிச முன்னணி

1991-உள்ளூராட்சித் தேர்தல்

ம.ம.மு.-ஸ்ரீ.ல.சு.கட்சி, அ.ஐ.தொ.கா. கூட்டணி

1993-ம.ம.முன்னணி, அ.ஐ.தொ.கா. கூட்டணி

1994-இன்றுவரை- பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித்தேர்தல், ம.ம.மு.- பொ.ஐ.மு. கூட்டணி.

1997 -உள்ளூராட்சித் தேர்தல்

-பொ.ஐ.மு. - இ.தொ.கா. தொழிற் சங்கங்கள் கூட்டணி.

-செல்லச்சாமி - ஐ.தே.க. கூட்டணி.

-ஐ.தே.க. - என்.யூ.டபிள்யூ கூட்டணி

1996/97-இ.தொ.கா., ம.ம.முன்னணி - பாராளுமன்ற கூட்டணி.

1998 -மாகாணசபைத் தேர்தல், மலையக அமைப்புக்களின் தேர்தல் கூட்டணி.

(இ.தொ.கா. - ம.ம.மு. தொழிற்சங்க தொண்டர் தாபன கூட்டணி)

-ஐ.தே.க., செல்லச்சாமி கூட்டணி

- இடதுசாரி கூட்டணி.

நன்றி - நூலகத்திட்டம்



...தார்மீக அடிப் ...பிட்டுள்ள, பிராந் ...திகளும், அவற் ...ங்களும் மலைய

... பயன்படுத்தி, ...ழுத்தம் கொடுப்ப ...தனது பிடிக்குள் ...ன மறைமுக ...லான மலையக ...சங்க, தொண்டர் ...ட்டவைத்துள்ளன ...க சான்றுகள்



...டையில் தான் ...ன் எவ்விதமான ...யும் தன்னகத்தே ...ால், மக்களிட ...ப்பட்டு வரும் ...து வரும் அமைப்

ளதுமான கூட்டணியின் அரசியல், இத்தேர்தலில் மக்களால் இனம் காணப்படலாம்.

- மலையகத் தமிழரில் கிட்டத்தட்ட 6' இலட்சம் பேர் இன்னும் முறைப்படியான பிரஜாவுரிமை பெறவில்லை.

84,000 இந்தியக் கடவுசீட்டு பெற்றவரதும், அவர்களது வழிதோன்றல்களதும் பிரஜாவுரிமை ஏற்கப்படவில்லை.

- மலையக மக்களது அடிப்படை வாழ்க்கை வசதிகளை மேம்படுத்தித் திட்டவட்டமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
- தோட்டக் காணிகளில் சுவீகரிப்பும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கைவிடப்படவில்லை.
- மலையகத் தமிழரின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்படவில்லை.
- அடையாள அட்டைகள், பிறப்பு சான்றிதழ்கள் கூடப் பெறமுடியாத நிலை நீடித்திருக்கிறது.
- நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்கள் பயங்கரவாதிகள் என காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

கல்வி மறுசீரமைப்பில் மலையகத் தமிழருக்கு ஏற்படவுள்ள மாபெரும் பின்னடைவு குறித்து எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை.

- திட்டமிட்ட இன ஒழிப்பிற்கு அடிப்படையான தீவிர குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மலையகத்தில் கைவிடப்படவில்லை.

தோட்டங்களில் கம்பனி நிர்வாகங்கள் மேற்கொள்ளும் கொடிய ஒடுக்குமுறைகள்.

- மலையகத் தமிழர்களுகளுக்கு எதிரான பொலிஸ், நீதித்துறைப் பாரபட்சங்கள்.
- போக்குவரத்து, சுகாதார சேவையிலான பாரபட்சம் நீக்கப்படவில்லை.
- வீடு, காணிகளைச் சொந்தமாக்குதல்.

போன்ற நூற்றுக்கணக்கான வரலாற்று பூர்வமான அம்சங்கள் பேரணியின் நிகழ்ச்சித் திட்டத்தில் இல்லை.

- மலையக மக்கள் முன்னணி பிராந்திய சபை கோரிக்கையை முன்வைத்தது, இ.தொ.கா. மலையகத் தமிழருக்குத் தனியான நிர்வாக அலகு தேவையில்லை என்கிறது.
- ஓ.ஏ. இராமையா இந்திய வம்சாவளித் தமிழர் என்கிறார். ம.ம.மு. மலையகத் தமிழர் என்கிறது.
- ஓ. ஏ. இராமையாவும், தொண்டர்தாபன முதலாளிகளும் சமத்துவ உரிமைகள் வேண்டும் என்கின்றன.
- மலையகத்தின் அறிவுஜீவிகள், புரட்சிகர சக்திகள் அரசியல் சுயநிர்ணயம் கோருகின்றனர்.
- 1998 ஏப்ரலில் வேலைநிறுத்தத்தில் தொண்டமானின் இ.தொ.கா, தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி, ம.ம.மு, தோ.தொ.கா, ஐ.தே.கவின் ல.தே.தொ.யூ. ஆகியன ஐந்து முனைகளில் இச்சக்திகள் இருந்தன. கூட்டுப் பேரத்தில் கூட்டுக் காட்டிக் கொடுப்பைச் செய்தன.

### சந்தர்ப்பவாத கூட்டணி!

இவ்வாறான அரசியல் சூழ்நிலையில் முரண்பாடுகளுக்கு மத்தியில் உருவான ''இந்திய வம்சாவழி மக்கள் பேரணி'' ஒரு சந்தர்ப்பவாத கூட்டணியின்றி வேறென்னவாக இருக்க முடியும்? (பார்க்க பெட்டிச் செய்தி) இதற்கு முன்பும் மலையகத்தில் பல கூட்டணிகள் இருந்தன. அவை அரசியல் கூட்டணிகள். தேர்தல் கூட்டணிகள், தொழிற்சங்கக் கூட்டணிகள் என்ற பல்வேறு அடிப்படைகளில் செயற்பட்ட போதும் மலையகத் தமிழரின் அரசியல் இருத்தல் குறித்தான திட்டவட்டமான கொள்கைகளோ நிகழ்ச்சித் திட்டமோ இவற்றுக்குக் கிடையாது என்பதனை மலையகத் தொழிற்சங்க இயக்கத்தின் வரலாறு மெய்ப்பித்திருக்கிறது?

- இந்திய வம்சாவளி மக்கள் பேரணியின் அடிப்படை நிகழ்ச்சித் திட்டமென்ன?
- ம.ம.முன்னணியின் பிராந்திய சபைக் கோரிக்கை என்னவாயிற்று?
- பொ.ஐ.மு. யுடனான இ.தொ.கா., ம.ம.மு. கூட்டணி என்னவாயிற்று?
- எங்கே தோட்டத் தொழிற் சங்கக் கூட்டமைப்பு?
- ''இந்திய வம்சாவளி'' என்ற பெயரை மிகத் தீவிரவாக வலியுறுத்தும் சக்திகளின் பின்னணி யாது?
- தொண்டர் தாபன சக்திகளும், மதப்பிரச்சார அமைப்புகளும் தேர்தல் கூட்டணிக்குள் கொண்டு வரப்பட்டது ஏன்?

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இனம் காணப்பட்டு விட்டனவா? அவை எவை?

- மலையகப் பிற்போக்கு சக்திகளிடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு விட்டனவா? எந்த அடிப்படையில்.
- புதிய கூட்டணியால் மலையகத்தில் பாலாறும், தேனாறும் 'ஓடும்' என ஓலமிடும் பிற்போக்குப் பத்திரிகைகள் பகல்கனவு காண்பவர்கள். கொள்கையோ, கோட்பாடோ, அடிப்படைத் திட்டமோ இல்லாத கூட்டணியில் பெரும் நன்மைகளும் வரும் என மக்களை நம்ப வைப்பது ஏன்?
- இரண்டு தடவை போலி வீட்டுரிமைச் சான்றிதழ் வழங்கி மக்களை ஏமாற்றிய தொண்டமானுடன் எப்படி ஏனைய அமைப்புகள் விமர்சனமின்றி இணைந்தன?
- இதொ.கா.வில் இறக்குமதி செய்யப்பட முன்பு அவர்களால் விரட்டப்பட்ட இரா. சிவலிங்கம் யாருடைய பிரதிநிதியாக எதற்காக மீண்டும் ஊடுருவியுள்ளார்?
- பீ.ஏ.காதர் வெளியேற்றப்பட்டமைக்கும், அன்னிய உளவு நிறுவனங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன?
- ம.ம.மு.வைப் பிளவுபடுத்துவதில் அதன் பிராந்திய சபைக் கோரிக்கைக்கும் மலையகத் தமிழர் என்ற பிரடகனத்துக்கும் ஏதாவது தொடர்புண்டா?
- மலையகத்தில் தீவிரவாத சக்திகளை மக்கள் இனம் கண்டு ஒடுக்க வேண்டுமென்ற தொண்டமானின் கோரிக்கைக்கும், இ.தொ.கா. ஏற்றுக்கொண்டுள்ளதாகச் சொல்லப்படும் அரச உளவுப் பணிக்குமான தொடர்பு என்ன?

ஆகிய வினாக்களை இச்சந்தர்ப்பத்தில் எழுப்பிவைப்பது பொருத்தமானதாகும். இவற்றுக்கு விடை காணாத எந்தக் கூட்டணியும் தேர்தலை மையம் கொண்ட சந்தர்பவாதக் கூட்டணிகளாகவே இருக்கும்.

மலையக மக்கள் அனைத்து அமைப்புகளிலும், தலைமைகளிலும் வெறுப்புற்றிருக்கின்ற போதும், மாற்றுவழியின்றித் தம்மை மிகமோசமாக ஏமாற்றிக் காட்டிக் கொடுத்து வரும் சக்திகளை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வருகிறது.

### இடதுசாரி சக்திகள்

வரப்போகும் தேர்தலில் இடது முன்னணியும் ஜே.வி.பி.யும் போட்டியிடவுள்ளன. இருமுறை புரட்சிகர எழுச்சிகளின் போதும் ஜே.வி.பி மலையகத் தமிழரை மானிடப் பெறுமானமுடையவராகக் கூடக் கருதவில்லை. இன்றுவரையிலும் அதன் நிகழ்ச்சித் திட்டத்தில் மலையகத் தமிழர்கள் தொடர்பான நிலைப்பாடு, முஸ்லிம் மக்கள் தொடர்பான நிலைப்பாடு, தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த நிலைப்பாடு என்பன தெளிவுபடுத்தப்படவில்லை. வரலாற்று பூர்வமாக அது ஒடுக்கப்பட்ட மக்களதும், தேசிய இனங்களதும் நம்பிக்கைக்குரிய கட்சியாக இன்றுவரை தன்னை இனம் காட்டவில்லை.

புதிய இடதுசாரி முன்னணி உண்மையான சமூக மாற்றத்தை நாடிநிற்கிறதென்றால் அதற்கான காத்திரமான அரசியல் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும். ரஷ்யாவில் பொல்செவிக் கட்சி தேர்தல்களில் பங்கு கொண்டமையும், மா ஓ, சியாங்கை சேக்குடன் ஐக்கிய முன்னணி அமைத்ததும், அந் நாடுகளின் வரலாற்று சூழ்நிலைகளுக்கேற்ற விஞ்ஞான பூர்வமான நடவடிக்கைகளாக அமைந்தன. ஆனால் உலகின் பல பாகங்களிலும் ''புரட்சியாளரின் சவக்கிடங்காக'' இருக்கின்ற பாராளுமன்றப் பாதையை தேர்தெடுத்த இடதுசாரிகள் சந்தர்ப்பவாதிகளாக, மக்களுக்குத் துரோகமிழைக்கவும், புரட்சிகர எழுச்சிக்கான சாத்தியப்பாட்டை எதிரியிடம் தாரை வார்க்கவுமே உதவியுள்ளனர்.

இலங்கை வரலாற்றில் - இடது முன்னணிகளையும், இடது வலது கூட்டணிகளையும் மக்கள் கண்டுள்ளனர். பாரிய உலக ரீதியான வரலாற்றுப் படிப்பினைகளுக்குப் பின்னர் பாராளுமன்றப் பாதையில் ஒரு இளைய தலைமுறையைத் தள்ளிவிடுவது புரட்சிக்குச் செய்யப்படும் துரோகமாகவே இருக்கும்.

மலையகத்தில் பல இளம் தலைமுறையினர் புதிய ஜனநாயகக் கட்சியை நாடுகின்றனர். அவர்களுக்கும் கட்சி சரியான மார்க்கத்தைக் காட்டுகின்றதா என்பதும், ஒவ்வொரு தலைமுறையும் பாராளுமன்றச் சேற்றில் மூழ்கடிக்கப்பட வேண்டுமா என்பதையும் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும்.

### மலையக மக்கள் முன்னுள்ளபணி

மலையகத் தமிழருக்கு அவசியமானது அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையேயன்றி வீதியமைப்பது, வீடுகட்டுவது, சீமெந்தும், ஓடும் கொடுப்பது, ஆசிரியர் நியமனம் என்பவை அல்ல.

மலையகத் தமிழர்பிரச்சினை வெறுமனே கூலிப்பிரச்சினையோ, வீட்டு பிரச்சினையோ, மொழிப் பிரச்சினையோ, வேலைவாய்ப்புப் பிரச்சினையோ அல்ல.

மாறாக, ஒருதேசத்தின் - அரசியல் சமூகத்தின் இருத்தல் தொடர்பான - சுயகௌரவம் தொடர்பான அரசியல் சுயநிர்ணயம் தொடர்பான பிரச்சினையே!

---

## ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலங்களில் மலையகத் தமிழருக்கெதிரான நடவடிக்கைகள்:

1. 1948 பிரஜாவுரிமையைப் பறித்தமை (1948 பிரஜாவுரிமைச் சட்டம்)
2. 1951வாக்குரிமையைப் பறித்தமை.
3. 1954 நேரு - கொத்தலாவலை உடன்படிக்கை.
4. 1956,1977, 1979, 1980, 1981, 1983, 1984, 1986 வன்செயல்களை திட்டமிட்டு நடாத்தியமை. 1977 - டெல்பி சப்பேறி தாக்குதல்.
5. பாடசாலைகள், கோவில்கள், லயன்களை எரித்தமை.
6. கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பில் பாரபட்சம் கட்டியமை.
7. திட்டமிட்ட இன ஒழிப்பை மேற்கொண்டமை.
8. திட்டமிட்டக் குடும்பக்கட்டுப்பாட்டை மேற்கொண்டமை.
9. நூற்றுக்கணக்கான மலைய்க இளைஞரை கைது செய்தமை, கொன்று குவித்தமை.
10. 500 மலையக இளைஞர்கள் காணாமல் போகக் காரணமாகி இருந்தமை.
11. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டமை.
12. காமினியின் திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்தை ஊக்குவித்தமை.
13. மகாவலித் திட்டத்தின் கீழ் 10,000 தொழிலாளர் குடும்பங்களை விரட்டியடித்தமை.
14. அரச நிர்வாகத்தை சிங்கள மயப்படுத்தியமை.
15. பௌத்த மதத்தை அரச மதமாக்கியமை.
16. போலி வீட்டுரிமை சான்றிதழ் கொடுத்து ஏமாற்றியமை.
17. தோட்டங்களின் தனியார் கம்பனிகளிடம் குத்தகைக்கு கொடுத்தமை.
18. ஜனசக்தி திட்டத்தில் புறக்கணிப்பு.

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆட்சிக்காலத்தில் மலையகத் தமிழருக்கெதிரான நடவடிக்கைகள்:

1. 1956 சிங்களத்தை அரச கரும மொழியாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டமை.
2. 1958 வன்செயல்கள்.
3. 1964 சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டமை.
4. 1967 சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் (அமுலாக்கல்) சட்டம் கொண்டுவந்தமை.
5. 1972 காணி சீர்த்திருத்த ஆணைக்குழுச் சட்டம் கொண்டுவரப்பட்டமை.
6. 1972 - 74 நட்சா திட்டத்தின் கீழ் 10,000 தமிழ் தொழிலாளர் குடும்பம் விரட்டப்பட்டமை.
7. 1974 சிறிமா - இந்திரா ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டமை.
8. 1972 - மாதச் சம்பள கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை.
9. கள்ளத்தோணிகள் என ஆயிரக்கணக்கான மலையக தமிழரை நாடு கடத்தியமை.
10. 1977 - டெவன் காணி சுவீகரிக்கப்பட்டமை. சிவனு - இலட்சுமணன் படுகொலை.
11. 1972 - 76 பஞ்சம் இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர் அவலச்சாவு.
12. டசின் கணக்கான தோட்டத் தொழிலாளர் சுட்டுக்கொல்லப்பட்டமை.
13. 1994 - 50 ஆண்டு குத்தகைக்கு தோட்டங்களை தனியாரிடம் கொடுத்தமை.
14. 1994 - 98 - 200 க்கும் அதிகமான மலையக இளைஞரை தடுத்து வைத்திருக்கின்றமை.
15. சமுர்த்தித் திட்டத்தில் புறக்கணிப்பு.

## 1994முதல் இன்றுவரை பொ.ஐ.மு. - ம.ம.முன்னணி - இ.தொ.கா. மலையக மக்களுக்கு கிடைத்தது என்ன?

## மலையக மக்கள் முன்னணி 1994-98

| சாதனைகள் | வேதனைகள் |
|---|---|
| 1. ம.ம.மு. பிராந்திய சபைக்கோரிக்கை முன்வைத்தல். | 1.பிராந்திய சபைக் கோரிக்கை கைவிட்டப்பட்டமை. |
| 2. சிறிபாத கல்லூரியில் 100% இடஒதுக்கீடு கேட்டமை, 75% பெற்றுக்கொடுத்தமை. | 2. 75% இட ஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டமை. |
| 3. நவீன வீடமைப்புத் திட்டம் கேட்டமை/ மின்சார வசதி கேட்டமை. | 3. மிகமந்த கதியில் ஏனோ தானோ என திட்டம் நடைமுறைப்படுத்தப்படல். |
| 4. மலையக மக்களுக்கு கிராம சேவகர், பிறப்பு, இறப்பு பதிவாளர் நியமனம் கோரியமை. | 4. அடிக்கடி அறிக்கையிடல் அரசாங்கம் மௌனம் சாதித்தல் நியமனம் எங்கும் கிடைக்கவில்லை. |
| 5. முழு அமைச்சர் பதவி கேட்டமை. | 5. அரை அமைச்சரானதோடு உச்சிகுளிர்ந்து போனது. |
| 6. ஆசிரியர் நியமனம் கோரியமை. | 6. முழுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்திக்கப்படாமை. |
| 7. சாராய விற்பனையை எதிர்த்து பிரச்சாரம் செய்தமை. | 7. சாராய லைசன்கள் வாங்கி விற்றமை. |
| 8. வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் கேட்டமை. | 8. கிடைத்தவற்றை இரகசியமாக உறவினர், நண்பர்களுக்கு கொடுத்தமை. |
| 9. மலையக இளைஞர் கைதாவதை ஆட்சேபித்தமை. தலைவர்கள் தாமே அரசியல் கைதியாக இருந்தமை. | 9. மலையக இளைஞர் கைதுகளை கண்டிக்கவோ, விடுவிக்கவோ ஆக்கபூர்வமாக முயலாமை. |
| 10. குடியேற்றங்களை எதிர்த்தமை. | 10. தோட்டக்காணி சுவீகரிப்பை கண்டு கொள்ளாமை. |
| 11. தொழிலாளரிடம் கட்சியை கட்டியமை. | 11. முதலாளிகளிடம் அதனை விற்றமை. |

---

## ...தொ.கா. (1994 - 1998)

| ...னைகள் | வேதனைகள் |
|---|---|
| ...க்கையை முன்வைத்... | 1.ஆறு அம்ச கோரிக்கை என்னவென்று கூறாமல் மறைத்தமை. |
| ...ழ் ரட்ணசிறி விக்கிர... வழங்கியமை. | 2. இரண்டுதடவை போலி வீட்டுரிமை சான்றிதழ் வழங்கி ஏமாற்றியமை. |
| ...வலை நிறுத்தங்களை... | 3.இரண்டு தடவை மலையக மக்களுக்கு துரோகம் புரிந்து தமது நலன்களை பெற்றமை. |
| ...கக் கட்டமைப்பு... | 4. உள்ளக கட்டமைப்பு பற்றி ஆரம்ப அறிக்கை, திட்டம் கூட தயாரிக்கப்படாமை. |
| ...ன்னணியை பாராளு... கொண்டமை. | 5. இளைஞர்களை டசின் கணக்கில் காட்டிக் கொடுத்தமை, மறுபுறம் எதிர்ப்பதாக கபட நாடகம் ஆடியமை. |
| ...ளஞர் கைதை... | 6. காணிகளை சுவீகரிப்பதை எதிர்ப்பதுபோல் எதிர்த்துவிட்டு தாமே முன்னின்று அதனை சுவீகரிக்க உதவியமை. |
| ...திர்த்தமை. | 7. அரசு பொறுப்பேற்ற தோட்ட வைத்தியசாலைகள்மூடப்பட்டதைகண்டுகொள்ளாமை. |
| ...சாலைகளை அரசு... | 8. பாடசாலைகள், தொழிற்சாலைகள் மூடப்படுவதை கண்டுகொள்ளாமை. |
| | 9. பொலிஸ் புலனாய்வுப் பிரிவாக செயற்படுகின்றமை. |
| | 10. 50 ஆண்டு கம்பனி குத்தகையை ஆதரித்தமை. |
| | 11. போர்க்கால அமைச்சரவையில் வீற்றிருக்கின்றமை. |
| | 12. ஆயிரக்கணக்கான மலையக இளைஞர்கள் கைது செய்யப்படுவதை கண்டுகொள்ளாமை. |
| | 13. பொலிஸ் அடக்கு முறையை கண்டுகொள்ளாமை. |
| | 14. வாழ்க்கை செலவு புள்ளி அலவன்சை தாரை வார்த்தமை. |

...ள அடிப்படை ...சந்தர்ப்பவாதப் ...தேர்தல் ...ருக்கின்றது. ...தெடுக்கப் ...யல்பூர்வ ...யதார்த்த ...ஏதுமற்ற ...மக்கள் ...தொழிற் ...சக்திகளால் ...தும், அதிகம் ...தான தொழி ...கத்தின் மயில் ...ல் குதித்துள்

நன்றி - நூலகத்திட்டம்

# சிறுவர் அரங்கு :

# ஆளுமையுள்ள சிறுவர்களை உருவாக்க ....

கிழக்குப் பல்கலைக்கழக நுண் கலைத்துறையினர் சமீபத்தில் நடத்திய உலக நாடக தினவிழாவில் சிறுவர் நாடகங்களுக்கென ஒரு நாள் ஒதுக்கப்பட்டு அந்நிகழ்ச்சியில் சிறுவர்கள், சிறுவர் நாடகங்கள் தொடர்பான கருத்துரைகளும், சிறுவர் நாடக நிகழ்த்துகைகளும் இடம்பெற்றன. இந்நிகழ்ச்சி சிறுவர்கள், அவர்களின் இயல்பு, அவர்களின் எதிர்காலம் போன்ற விடயங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கான ஒரு சூழலைத் தோற்றுவித்து இருந்தது.

இன்றைய சிறுவர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நமது சூழலில்; யுத்தத்தின் பாதிப்பு, நவீன விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சியின் தாக்கம், நவீனத்தை நோக்கிய நமது வாழ்க்கை மாற்றம் போன்றன எம்மை அறியாமலே சிறுவர்களின் வளர்ச்சியில் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன.

மேற்குறித்த பாதிப்புக்களில் இருந்து சிறுவர்களை மீட்டு, அவர்களை ஆளுமைமிக்கதொரு எதிர்காலத் தலைமுறையினராக வளர்த்தெடுப்பதில் பாடசாலை மற்றும் பெற்றோர், சிறுவர்களைச் சூழ உள்ள சமூகம் என்பனவற்றின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. பாடசாலைக் கல்வி சிறுவர்களின் எதிர்கால நலன்களை 'மையமாகக் கொண்டு திட்டமிடப்பட்ட போதும் அது மாணவர்களுக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை. இதுபோல் பெற்றோரின் அக்கறையின்மையும் பல நிலைகளில் உணரத்தக்கதாக உள்ளது. இத்தன்மை அவர்களின் எதிர்காலத்தையே சில சமயங்களில் சிதைத்து விடுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் மேற்குறித்த பின்னணியுடன் தொடர்புபடுத்தி பாடசாலை நாடகங்களை நோக்கும் போது பாடசாலை அரங்க இயக்கம் மாணவர்களின் எதிர்கால நலனையும், சமகாலத் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுவதை உணரக்கூடியதாக உள்ளது. இந்நாடகச் செயற்பாடுகளில் சிறுவர் நாடகத்தின் மூலம் சிறுவர்களை ஆளுமை மிக்கதொரு தலைமுறையினராக வளர்த்தெடுக்க முடியும் என்னும் நம்பிக்கை வெளிப்படுத்தப்படுகின்றது. இச்சிந்தனைத் திரட்சியின் விரிவாக்கத்தை கிழக்குப் பல்கலைக்கழகம் ஒழுங்கு செய்திருந்த சிறுவர் நாடக நிகழ்ச்சி புலப்படுத்தியது.

இச்சிறுவர் நாடக விழாவில் மட்டக்களப்பின் பல பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்களின் நாடகங்கள் இடம் பெற்றன. சிசிலியா பெண்கள் பாடசாலை மாணவர்கள் தயாரித்தளித்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'ஒற்றுமையின் சின்னம்', மகாஜனக் கல்லூரி மாணவர்கள் தயாரித்தளித்த குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'முயலார் முயல்கின்றார்', களுதாவளை மகா வித்தியாலய மாணவர்கள் தயாரித்து வழங்கிய இந்திய எழுத்தாளர் எம்.எஸ். காந்திமேரியின் 'காட்டுக்குள்ளே திருவிழா', வந்தாறுமூலை கணேச வித்தியாலய மாணவர்கள் தயாரித்தளித்த ஜெயசங்கரின் 'பிள்ளை அழுத கண்ணீர்' என்பன இவ் விழாவில் இடம் பெற்றன.

மட்டக்களப்பின் அரங்கச் செயற்பாட்டில் பாடசாலை நாடகங்கள் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றன. மட்டக்களப்பின் பாடசாலையரங்கச் செயற்பாட்டில் பல்வேறு போக்குகளை இனங்கண்ட போதும் 1990களில் இருந்து காத்திரமான முன்னெடுப்புக்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில், இக்காலத்தில் இருந்து மட்டக்களப்பின் நவீன நாடகத்தின் தொடக்கத்தை பாடசாலை நாடகங்களூடே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தன்மை மட்டக்களப்பின் பாடசாலை நாடகங்களுக்கு தனித்தன்மையை வழங்குகின்றது.

மட்டக்களப்பின் பாடசாலை அரங்க வளர்ச்சியில் சிரேஷ்ட மாணவர்களுக்கான அரங்கு, சிறுவர்களுக்கான அரங்கு என இரு தளங்களில் இயங்குவதை அவதானிக்கலாம். சிரேஷ்ட மாணவர்களுக்கான அரங்கு இன்று வரை ஆரோக்கியமற்றதொரு சூழலில் வாழ, சிறுவர்களுக்கான அரங்கச் செயற்பாடோ இதற்கு எதிர்மாறான நிலையில் உள்ளது. இதற்கு அடிப்படைக் காரணமாகச் சிறுவர் நாடகச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் சிறுவர் நாடகம் பற்றிய தெளிவும் சமூகம் பற்றிய தூர நோக்கும் உடையவர்களாக விளங்குவதைக் குறிப்பிடலாம்.



இருந்தும் மட்டக்களப்பின் பாடசாலை நாடகங்களை எடுத்து நோக்கும்போது அதன் வளர்ச்சியில் நகர்ப்புறம் சார்ந்த குறித்த சில மாணவர்களை மையப்படுத்திய வளர்ச்சியையே அவதானிக்கலாம். ஆனால், இந்நிலைமைக்கு மாற்றீடாக இந்நாடக விழாவில் களுதாவளை மாணவர்களைக் கொண்டு சிவரெத்தினம் தயாரித்த நாடகம், வந்தாறுமூலை மாணவர்களைக் கொண்டு ஜெயசங்கர் தயாரித்த நாடகம் ஆகிய இரு செயற்பாடுகளும் கிராமப்புறப் பாடசாலையைச் சேர்ந்த நாடகங்களைப் பல்கலைக்கழக மேடையில் கண்டு ரசிக்கும் வாய்ப்பைத் தோற்றுவித்தன. இந் நெறியாளர்கள் இருவரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். இச்செயற்பாடு நகரில் மையங் கொண்டு இருந்த எமது பாடசாலை அரங்கு சகல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுவதன் முன் அறிவிப்பு எனலாம்.

மேற்குறித்த பின்புலத்தை அடிப்படையாகக்கொண்டு மட்டக்களப்பின் சிறுவர் அரங்கு (பொதுப்படையாகப் பாடசாலை அரங்கு) எதிர்கொள்ளும் சவால்களை வந்தாறுமூலை கணேச வித்தியாலய நாடகத் தயாரிப்பில் உள்ள இடர்பாடுகளை மையமாகக் கொண்டு இக்கட்டுரையில் விளக்க முற்படுகின்றேன்.

பாடசாலை நாடகமொன்றைத் தயாரித்து மேடையேற்றுவதில் ஒரு பாடசாலை பல சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. பாடசாலை நாடகமொன்றைத் தயாரிப்பதற்கான சகல வளங்களும் ஒரு பாடசாலைக்கு முழுமையாகக் கிடைப்பது இல்லை. அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் ஒரு நாடகத் தயாரிப்பு முழுமை பெற, குறித்த பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்போரின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பு நாடக நெறியாளரின் செயற்பாட்டுடன் இணைய வேண்டும். அப்போது தான் நாடகத் தயாரிப்பு முழுமை பெறும். இவ்வாய்ப்பு சகல பாடசாலைகளுக்கும், சகல பாடசாலைகளிலும் கிடைப்பது இல்லை.

ஜெயசங்கர் அன்ரோனியோ கிறம்ஸ்கியின் குட்டிக் கதையையும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'பாலுக்குப் பாலகன்' சிறுவர் நாடகத்தையும் பின்பற்றி எழுதிய நாடகமே 'பிள்ளை அழுத கண்ணீர்' ஆகும். கணேச வித்தியாலயத்தில் இந்நாடகம் ஜெயசங்கரால் தயாரிக்கப்படுவதற்கு உறுதுணையாகவும், உதவி நெறியாளர்களுள் ஒருவராகவும் இருந்தவர் அப்பாடசாலை ஆசிரியை கௌரி மோகரஞ்சிதன் ஆவார். மற்றைய உதவி நெறியாளர் தே. அலோசியஸ் ஆவார். இந்நாடக செயற்பாட்டிற்குப் பக்க பலமாக இருந்தவர் அப்பாடசாலை அதிபரான த. தங்கவேல் அவர்கள்.

வந்தாறுமூலை கணேச வித்தியாலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள அடிப்படை வசதிகளே பூர்த்தி செய்யப்படாத பாடசாலைகளில் ஒன்று எனலாம். அப்பாடசாலைச் சூழலில் சமகால/ நவீன நாடகம், நாடக அரங்கம், நாடகம், நடித்தல், நாடகம் பார்த்து ரசித்தல் என்பன பரிட்சயம் அற்ற விடயங்களாகவே அமைந்திருந்தன. மாணவர்கள் சௌகரியமாக இருந்து கல்வி கற்பதற்கான இடவசதி போன்ற அடிப்படை வசதிகளே இங்கு பூர்த்தி செய்யப்படாத நிலையில் இவர்கள் நாடகத்தைப் பற்றிச் சிந்திப்பது சாத்தியமற்றது தான்.

வந்தாறுமூலை பிரதேச மக்கள் வேளாண்மையை தமது உழைப்பு ஊதிய வாழ்விற்காக நம்பி உள்ளனர். இம்மக்களில் அதிகமானவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வதையும் அவதானிக்கலாம். பல சந்தர்ப்பங்களில் காலை ஆகாரமும் இல்லாது மாணவர்கள் பாடசாலைக்குக் கல்வி கற்கச் செல்லும் நிலையும் உண்டு. இவ் வறுமைக்கு எதிரான அவர்களின் போராட்டம் பல சந்தர்ப்பங்களில் அவர்களின் எதிர்காலத் தலைமுறையினர் பற்றி சிந்திப்பதற்கான வாய்ப்பற்ற சூழலையே வழங்கி இருந்தது.

மேற்சுட்டிய இயல்பு இப்பாடசாலை கல்விச் சமூகச் சூழலில் காணப்பட்ட போதும் இப்பாடசாலை மாணவர்களினால், நாடகத்தில் இச்சூழலின் தர்க்கம் எதிரொலிக்கவில்லை. நாடகம் நிதானமான முறையில் சிறுவர் நாடகத்தின் பல்வேறு பரிமாணமும் புலப்படும் விதத்தில் நகர்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

நாடக ஓட்டத்தில் ஒரு குழந்தைப் பிள்ளைக்கு வைத்த பாலை எலிக்குஞ்சர் குடித்து விடுவதும், பசிகொண்ட பிள்ளை பாலுக்காக அழுவதும், எலிக்குஞ்சர் பிள்ளைக்குப் பாலை மீண்டும் பெற்றுக் கொடுக்க எடுக்கும் பிரயத்தனங்களுமே முக்கியம் பெற்று இருந்தன. நாடக ஓட்டத்தில் இச்சிறுகதை விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு இருந்தது. இதனால் இயற்கை வளமான மரம், செடி, கொடிகளை அழியாது பேணி இயற்கைச் சமநிலையைப் பேணவேண்டும் என்னும் உணர்வு பிரதானப்படுத்தப்பட்டு இருந்தது.

சிறுவர்களின் கற்பனைக்கு இடமளிக்கத்தக்க விதத்தில் மேடையில் வயல், குளம், மலை, காடு என்னும் காட்சிப் படிமங்கள் இலகுவாகவும், எளிமையாகவும் கொண்டு வரப்பட்டிருந்தன. இச்சூழலில் தவளை, கொக்கு, கூவான், கோழி, எலிக்குஞ்சர், ஆடு என்னும் பாத்திரங்கள் ஓடி ஆடி விளையாடின. இங்கு 20 நிமிடம் மேடை நிறைந்த பல வேடம் புனைந்த சிறுவர்களின் விளையாட்டினைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

நாடகச் செயற்பாடு கதை கூறும் உத்தியைத் தவிர்த்து நாடக நிலைப்பட்ட அபிநயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இருந்ததால் ஆடல், பாடல், அபிநயம் என்பன அரங்கச் செயற்பாட்டில் கலந்து இருந்தன. பாத்திரங்களின் உரையாடலில் மாணவர்களின் இயல்பான மொழிக்கையாள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருந்தது. இவை சிறுவர்களின் இயல்பான திறன்களை வளர்க்க உதவின.

அரங்கச் செயற்பாட்டிற்கு வழு ஏற்படாத வகையில் சகல சிறுவர்களும் தங்கள் பங்களிப்பினை நாடகத்துக்கு முழுமையாக வழங்கி இருந்தனர். தவளைக் குஞ்சரின் கேளிக்கையையும், நகைச்சுவை உணர்வையும் ஏற்படுத்தும் ஆற்றல், குளத்தாத்தாவின் முதிர்ச்சியின் சோர்வு, எலிக குஞ்சரின் இளமைத் துடிப்பின் வேகம், மலைமாமா, மலைமாமி, வயலம்மா, ஆடக்கா போன்றோரின் எலிக்குஞ்சரின் மேல் கொண்ட வேடிக்கையான பாகம் என்பன நாடக ஓட்டத்தில் இயல்பாகப் புலப்பட்டன. இவை இந்நாடகத்தின் அழகியல் புலப்பாட்டின் அடிப்படையாகவும் அமைந்திருந்தன. இவற்றுடன் பாத்திரங்களின் கலைத்துவ வெளிப்பாட்டில் சாதாரணமாகவும், நேர்த்தியாகவும், ஒழுங்கமைக்கப்பட்டிருந்த உடை, ஒப்பனை என்பனவும் வனப்புச் சேர்த்தன. சிறுவர்களிடையே விளையாட்டுணர்வையும் வேடிக்கை உணர்வையும் தூண்டத்தக்க சாதனமாக முகமூடி பயன்படுத்தப்பட்டிருந்தது.

வந்தாறுமூலை கணேச வித்தியாலய மாணவர்களின் இத் தயாரிப்பு பல்கலைக்கழக மேடையைத் தவிர ஏசானம் சிறுவர் இல்லம், மட்டக்களப்பு பட்டிக்களி செழியன் பேரின்பம் பூங்கா திறப்பு விழா போன்ற இடங்களிலும் மேடையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலை மாணவர்களினால் தயாரித்தளிக்கப்பட்ட இந்நாடகத்தின் கலைத்துவ வெளிப்பாட்டிலே எதுவித பின்னடைவையும் எம்மால் இனங்காண முடியவில்லை. சாதாரண ஒரு சிறுவர் நாடகத்தின் வெளிப்பாட்டு நிலையில் இருந்து இங்கு மாறுபட்டு இருக்கவில்லை.

மேற்குறித்தத் தன்மை ஒரு உண்மையை இவ் இடத்தில் புலப்படுத்தியது. சிறுவர்கள் யாவரும் அவர்களது இயல்பில், திறனில் வேறுபாடற்றவர்களே! அவர்களின் திறன்களை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கிடைக்கும் போது தங்களின் திறன்களை வெளிப்படுத்துவதுடன், அவர்களின் ஆளுமையையும் வளர்த்துக்கொள்கின்றனர். சந்தர்ப்பமற்ற சிறுவர்களின் ஆளுமை சில வேளைகளில் குறைவிருத்தியைக் காண்கின்றது. சகல பாடசாலை மாணவர்களுக்கும் அவர்களின் கல்விச் செயற்பாட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் சமவாய்ப்பு அளித்து அவர்களின் கல்விச் செயற்பாடு முன்னெடுக்கப்படும் பேரது பாடசாலைக்கல்வியின் முழுமையான இலக்கை அடைவதில் எதுவித வில்லங்கமும் இருக்காது. இங்கு வந்தாறுமூலை கணேச வித்தியாலய மாணவர்களின் திறனை இனங்காணவும், வெளிப்படுத்தவும் பங்களிப்புச் செலுத்தியது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அமைவிடம் எனலாம். ●

— வடிவேல் இன்பமோகன் —

நன்றி - நூலகத்திட்டம்





# மாகாண சபைத் தேர்தல்: பிரதான கட்சிகளும் பெண் வேட்பாளர்களும்!

இம்முறை மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான சாத்தியங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எவ்வாறிருந்த போதும் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களில் சகல கட்சிகளும் சளைக்காமல் ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதில் பெண் வேட்பாளர்களைப் பெண்களின் விகிதாசாரத்தின் படி இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதியையேனும் நிறுத்தும் படியும், பெண்களின் நலன்கள் குறித்த விடயங்களை விஞ்ஞாபனத்தில் சேர்க்கும் படியும் பல பெண்கள் அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்திருந்தன.

மாகாண சபைக்கான வேட்பு மனுத் தாக்கல் முடிவுற்று விட்டன. இந்த நிலையில் அவற்றைக் கொண்டு ஆராயும் போது, பெண்கள் அமைப்புகளின் கோரிக்கைகளை எந்த விதத்திலும் இந்த ஆணதிகார கட்சிகள் கவனம் செலுத்தவில்லை என்ற முடிவுக்குவர முடிகிறது.

அண்மையில் இந்திய மத்திய அரசாங்க பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட, அரசியலில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதித்துவம் அளித்தல் பற்றிய மசோதா (இது அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.) கடும் எதிர்ப்பின் மத்தியில் கிடப்பில் போடப்பட்டது என்பதும் இந்த இடத்தில் நினைவுக்கு கொண்டு வரக் கூடியது.

பெண்கள் அமைப்புகள் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்ற பெண்களின் சுயேட்சைக் குழுவுக்கு தங்களின் ஆதரவை வழங்கி வருகின்றன. பெரும்பாலான பெண்கள் அமைப்புகளுக்கு, தேர்தலில் போட்டியிடுகின்ற பெண்கள் சுயேட்சை குழுவின் அரசியல் குறித்த பிரச்சினைகள் இருக்கின்ற போதும், இப்படி ஒரு குழு தோன்றியிருப்பதை ஊக்குவிக்கும் வகையில் இதனை ஆதரிக்க வேண்டுமென்ற நிலையில் உள்ளன. பொருளுதவிகள், பிரச்சார உதவிகள் என்பனவற்றிலும் இக்குழுவுக்கு தங்களின் ஆதரவை வழங்கி வருகின்றன.

ஆனால், பெண் வேட்பாளர்களை நிறுத்த எவ்வித ஆர்வமும் காட்டியிராத கட்சிகளில் சில, இக்குழுவுக்கு எதிரான பிரச்சாரங்களையும் முடுக்கி விட்டுள்ளன. இதன் பின்னணியில் உள்ள அரசு சார்பற்ற நிறுவனங்களைக் காரணம் காட்டி இந்த ஒட்டுமொத்த முயற்சியையும் கேலி செய்து வருகின்றன. ஆனால் முந்நூறுக்குக் கிட்டிய வேட்பாளர்களை நிறுத்துகின்ற இந்தக் கட்சிகளால் மூன்று பெண் வேட்பாளர்களைக் கூட தேடிக் கண்டு பிடிக்க முடியாதது பெரும் வேடிக்கை.

இந்த நிலையில் இன்று பிரதான கட்சிகளாக இருக்கின்ற பொ.ஐ.மு., ஐ.தே.க., ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் மிகவும் குறைந்தளவிலேயே பெண் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

பொ.ஐ.மு., தனது மொத்த வேட்பாளர்களான 299இல் 8 பெண்களை மட்டுமே நிறுத்தியுள்ளது. இது மொத்த வேட்பாளர்களில் 2.68 வீதமாகும்.

ஐ.தே.க. தனது மொத்த வேட்பாளர்களான 299இல் 15 பெண்களை மட்டுமே நிறுத்தியுள்ளது. இது மொத்த வேட்பாளர்களில் 5.02 வீதமாகும்.

ஜே.வி.பி. தனது மொத்த வேட்பாளர்களான 299இல் 24 பெண்களை மட்டுமே நிறுத்தியுள்ளது. இது மொத்த வேட்பாளர்களில் 8.03 வீதமாகும்.

தங்களது ஆட்சி பெண் தலைமையிலான ஆட்சி, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பெண்கள், பாராளுமன்றத்திலும், அமைச்சரவையிலும் முன்னைய அரசாங்கத்தை விட கூடிய பெண்களுக்கு இடம் கொடுத்துள்ளோம் என கூறிக் கொள்ளும் பொ.ஐ.முவானது பிரதான கட்சிகளிலேயே குறைவான பெண்களை தனது வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளமை அதன் உண்மை நிலையை தோலுரித்துக் காட்டக் கூடிய ஒன்று.

மேலும், பொ.ஐ.மு, மற்றும் ஐ.தே.க. ஆகிய முதலாளித்துவக் கட்சிகளோடு ஒப்பிடுகையில் இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பி. முதலாளித்துவக் கட்சிகளை விட அதிக பெண் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இவ் வேட்பாளர்கள் உண்மையிலேயே கட்சியில் அடி மட்டத்திலிருந்து வந்தவர்கள் என்பதிலும், அவர்கள் அரசியலாட்டப்பட்டவர்கள் என்பதும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

அந்த வகையில் ஜே.வி.பி.யின் பெண் வேட்பாளர்கள் பொருத்தமுடையவர்கள் என்றாலும் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை மகிழ்ச்சியூட்டக் கூடியதல்ல.

இந்த நிலைமைகள் அரசியலில் ஆணதிகார கட்சிகள் பெண்களுக்கு இடம் கொடுக்காத வரையில் பெண்கள் தங்களின் உரிமைகளுக்கான தனித்த போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதையே காட்டுகிறது.

எவ்வாறிருப்பினும், இந்த அமைப்புமுறையின் கீழ் இத்தேர்தல் வழிமுறை பெண்களுக்கு விடிவைத் தேடித்தந்து விடாது என்பதை கருத்திற் கொள்வதும் முக்கியம்.

**என்.சரவணன்**

### இம்முறை மாகாண சபைத் தேர்தலில் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் (பால் ரீதியாக)

| மாகாண சபைகள் / வேட்பாளர்கள் | பொ.ஐ.மு. | | ஐ.தே.க. | | ஜே.வி.பி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் வேட்பாளர்கள் | பெண் வேட்பாளர்கள் | ஆண் வேட்பாளர்கள் | பெண் வேட்பாளர்கள் | ஆண் வேட்பாளர்கள் | பெண் வேட்பாளர்கள் |
| மேல் | 109 | 03 | 104 | 07 | 101 | 10 |
| மத்திய | 64 | 01 | 63 | 2 | 61 | 4 |
| சப்பிரகமுவா | 47 | 01 | 46 | 2 | 43 | 5 |
| ஊவா | 36 | 02 | 38 | - | 36 | 2 |
| வட மத்திய | 36 | 01 | 33 | 4 | 34 | 3 |
| மொத்தம் | 292 | 08 | 284 | 15 | 275 | 24 |

### கடந்த மாகாண சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| | | வேட்பாளர்கள் | | | தெரிவுசெய்யப்பட்டவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிறுவனம் | வருடம் | மொத்தம் | பெண்கள் | வீதம் | மொத்தம் | பெண்கள் | வீதம் |
| மாகாணசபை | 1988 | 1,327 | 38 | 2.8 | 437 | 13 | 2.9 |
| | 1993 | 2,351 | 12 | 0.5 | 382 | 12 | 3.1 |

### கடந்த இரு மாகாண சபையிலும் அதன் அமைச்சரவையிலும் பெண்களின் பிரதிநிதித்துவம்

| | | வேட்பாளர்கள் | | | தெரிவுசெய்யப்பட்டவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிறுவனம் | வருடம் | மொத்தம் | பெண்கள் | வீதம் | மொத்தம் | பெண்கள் | வீதம் |
| முதலாவது | 1988 | 437 | 13 | 2.9 | 35 | 03 | 8.5 |
| இரண்டாவது | 1993 | 382 | 12 | 3.1 | 35 | 03 | 8.5 |

# நான் ஒரு சந்தர்ப்பவாதியா ?

''எல்லாவிதமான அரசிய ், சமூக கல்வி, இலக்கியத் தொலைத்தொடர்பு அமைப்புகள் அனைத்துக்குள்ளும் உன்னைப்போன்ற சந்தர்ப்பவாதிகளே கோலோச்சுகின்றனர்.'' என்று திடீரென எனக்குள்ளிருந்து என் உள்விமர்சகன் குரல் கொடுத்தான்.

''என் விமர்சகக் குஞ்சே, சந்தர்ப்பவாதிகள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று விளக்குவாயா?'' - எனக்குள் எழுந்த எரிச்சலை மறைத்துக் கொண்டு பரிகாசமாகக் கேட்டேன் நான்.

''நீ பாதுகாப்பான உத்தியோகத்தில் இருந்து கொண்டு முற்போக்குவாதியாக இருக்கிறாய், கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபியாக இருப்பதாகச் சொல்கிறாய், மார்க்சீயச் சித்தாந்தத்தைக் கரைத்துக் குடித்தவன் போல் எழுதுகிறாய், பேசுகிறாய். தொலைத்தொடர்பு மீடியாக்களில் பேட்டியளிக்கிறாய். ஆலோசனை வழங்குகிறாய் இல்லையா?'' - அவன் என்னைப் பார்த்துக் கேட்டான்.

''அதற்கென்ன, இவற்றைச் செய்தால் சந்தர்ப்பவாதியா?'' - நான் திருப்பிக் கேட்டேன்.

''இவற்றை ஒருவன் செய்வதால் சந்தர்ப்பவாதி ஆகிவிட முடியாது. இவற்றை ஏன், எப்படிச் செய்கிறான் என்பதில் தான் சந்தர்ப்பவாதம் வருகிறது.'' - என் விமர்சகன் பதில் சொன்னான்.

''விளக்குவாயா?'' - நான்.

''இவற்றை நீ உன் வயிற்றுப் பிழைப்பு வருமானத்தைத் தக்க வைப்பதற்கும், அதேவேளை நீ ஒரு இடதுசாரி முற்போக்காளனாகவும், ஏழைப் பங்காளனாகவும் காட்டிக்கொண்டு அவற்றின் நிழலில் மீண்டும் உன் சுயநலப் பொருள் தேட்டத்தைத் தொடர்வதற்குமே பாவிக்கிறாய். உன்னால் எந்தவித முற்போக்குப் பாய்ச்சலோ, புரட்சியோ, சமூக முன்னேற்றமோ ஏற்பட்டதில்லை. மாறாக, தேக்கமும், சரண்டலுமே மிஞ்சியுள்ளன.'' - அவன் திருப்பித் தாக்கினான்.

''நீ நினைக்கிற மாதிரி புரட்சி என்பது கிள்ளுக் கீரை வியாபாரம் அல்ல. அதற்குரிய காலம், மக்களின் பக்குவம் என்று பல இருக்கிறது. மார்க்சீய வார்த்தைகளில் சொல்வதானால் தொழிலாளர்கள் தம்மை யாரென்று உணர்ந்து வர்க்க பேதம் உற்றவர்களாய் இருக்க வேண்டும். அப்போதுதான் முற்போக்குப் பாய்ச்சலோ புரட்சியோ ஏற்படும். புரிகிறதா?'' - நான் காலாகாலமாகச் சொல்லிச் சுரத்துக்கெட்டுப்போயிருந்த சொற்களை எடுத்து வீசினேன்.

''ஹா ஹா ஹா!'' - அவன் பயங்கரமாகச் சிரித்தான்.

'ஏன் சிரிக்கிறாய்?'' - நான் அசடு வழியக் கேட்டேன்.

''நீ இந்தப் பதிலைச் சொல்லுவாய் என்று எதிர்பார்த்தே நான் உன்னைச் சீண்டினேன். உனது இந்தப் பதிலைக் கொண்டே எல்லா அமைப்புகளிலும் உள்ள உன்னைப் போன்ற சந்தர்ப்பவாதிகளை விளக்கலாம், கட்டவிழ்க்கலாம்'' எனக்குள் இருந்தவன் அழுத்திக் கூறினான்.

''அடேயப்பா! பெரிய கட்டவிழ்ப்பாளன்'' என்று உயிரற்றுக் கிண்டல் செய்த நான், சரி உன் விளக்கத்தை முன் வை. கேட்க ஆசையாய் இருக்கு'' என்றேன், கேலி கலந்த குரலில்.

''எல்லாவிதமான மக்கள் அமைப்புக்களையும், உண்மையான முற்போக்காளர்களைவிடச் சந்தர்ப்பவாதிகளும், சாமான்யர்களும், அயோக்கியர்களுமே ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். இவர்கள் அந்தந்த அமைப்புக்களின் சட்டதிட்டங்களையும் மாற்றத்திற்கு முகங்கொடுக்காது போன பழங் கருத்துக்களையும், வார்த்தை ஜால வெற்றுச் சுலோகங்களையும் மனப்பாடஞ் செய்த விற்பன்னர்களாக இருப்பர். ஏன் தெரியுமா?''உள் விமர்சகன் கேட்டான்.

''ஏன்?'' - எனக்கு அவன் என்ன சொல்லப் போகிறான் என்று தெரிந்தும் யந்திரகதியில் கேட்டேன்.

''தான் தலைமை தாங்கும் அல்லது அங்கம் வகிக்கும் அமைப்புக்களைச் சதா ஸ்தம்பித நிலையில் வைத்திருக்கவும், அந்த ஸ்தம்பித நிலையைப் பேணிக்கொண்டு தான் கொழுப்பதற்கும், தலைவராக இருப்பதற்கும் அந்த அமைப்பின் சுலோகங்களையும், காலாவதியான கருத்துக்களையும் இவன் கவசமாகப் பாவிக்கிறான்'' - அவன்.

''எப்படி?'' - மீண்டும் அதே யந்திர கதிக் கேள்வி.

''ஏழைத் தொழிலாளர்கள் உரிமைகள் பறிக்கப்படும் போது, போராட்டத்தில் குதிக்காது, அரசுக்கு அடிவருடும் உன் போன்ற சந்தர்ப்பவாதிகளுக்கெதிராக, உங்கள் அமைப்புக்குள்ளேயே இருக்கும் இரண்டொரு முற்போக்குவாதிகள் கொதித்தெழும்போது நீ அவர்களை ஓரங்கட்ட வைக்கும் கோஷம் எது தெரியுமா?'' - அவன்.

''நீயே சொல்லு!'' - நான்.

''திரிபுவாதிகள்! ஏகாதிபத்திய அடிவருடிகள்!, சி.ஐ.ஏ. கைக் கூலிகள்! ஹா ஹா ஹா!'' - அவன் பெரிதாகச் சிரித்தான்.

''சத்தம் போடாதே, மெல்லவாகச் சிரி''

''ஏன் பயமா? உங்கள் சந்தர்ப்பவாதத்தை றோஹன விஜேவீர அழகாகச் சொல்லியுள்ளான். அவன் ரஷ்ஷிய கொம்யூனிஸ்ட் ஆதரவாளனாக இருந்த போது இதே சுலோகச் சிலம்பங்களோடு அரசுக்கு அடிவருடும் வேலைதான் நடந்தது. அதில் சலிப்புற்று அவன் சீனப்பிரிவில் சேர்ந்த போது சண்முகதாசன் தலைமையில் இன்னும் சுலோக உச்சாடனங்கள் பல்கிப் பெருகின! ஆனால், கட்சிக் கூடாரம் இருந்த இடத்தைவிட்டு நகரவேயில்லை! வெறுப்புற்ற விஜேவீர அதைவிட்டு வெளியேறிய போது, புரட்சிக்குரிய சூழல் எங்கும் எப்பொழுதும் இருப்பதைக் கண்டான். இவர்கள் மூஞ்சியில் காறி உமிழ்வதுபோல் 1971ல் தன்புரட்சி மூலம் அரசையே நடுங்க வைத்தான். ஆனால், அவன் புரட்சியை உள்வாங்க முடியாத உன் போன்ற சந்தர்ப்பவாதிகள் என்ன சுலோகத்தை முன்வைத்தார்கள் தெரியுமா?'' - அவன்.

''ஓம் தெரியும். அட்வென்ஷறிசம்! (Adventurism) வீர சாகசச் செயல்!'' நான் பழக்கமானதை ஒப்புவித்தேன்.

''பார்த்தாயா, வெற்றுச் சுலோகங்கள் எப்படி உன் போன்ற சுயநல அதிகார வர்க்கத்துக்குத் தத்துவ சேவகம் செய்வதை!'' அவன்.

''சரி சந்தர்ப்பவாதியையும், முற்போக்குவாதியையும் நீ எப்படி வித்தியாசப்படுத்துவாய்?'' எனக்குள் இருந்து எழுந்தவனின் மூச்சை அடக்க முடியாதென்ற நிலை ஏற்பட்டபோது நான் அவன் வழியில் அள்ளுப்பட்டுக் கேட்டேன்.

''ஆரம்பத்தில் சந்தர்ப்பவாதியும், முற்போக்குவாதியும் ஒரே மாதிரித்தான் தெரிவார்கள். ஆனால், முற்போக்குவாதி தேக்கத்தை ஆதரிக்கும் எந்தக் கூடாரத்திற்குள்ளும் தங்காது, உடைத்துக் கொண்டு தன் முற்போக்குப் பாய்ச்சலுக்கேற்ற ஊடகத்தைத் தேடிக்கொண்டு போவான். இதே போலவே சந்தர்ப்பவாதியும் தன் சுரண்டலுக்கும், தலைமைக்கும் தோதில்லாதவற்றையெல்லாம் கடந்து போய்த் தன்னைக் கொழுக்க வைக்கும் ஊடகத்தில் நிலைகொண்டு சுலோகங்களைச் செய்ய ஆரம்பிக்கிறான். ஆனால், முடிவில் முற்போக்குவாதி தற்தியாகியாகி மக்களை மேம்படுத்த, சந்தர்ப்பவாதி தன்னைக் கொழுக்க வைத்து மக்களை ஏமாற்றுகிறான். முன்னதற்கு உதாரணம் றோஹன விஜேவீர, பின்னதற்கு இன்றுள்ள அனுர பண்டாரநாயக்க (இன்னும் தொண்டமான், வாசுதேவ நாணயக்கார, இலக்கியத்தில் எஸ். பொ. போன்றவர்களும் சில வகையறாக்கள்.)

ம்... வேறு?''

''வரலாற்றிலும் இதற்கு உதாரணம் உண்டு. 1930களில் ஜேர்மனியில், வீமர் அரசு வீழ்ச்சிக்குப் பின், இடதுசாரிகள் அனைவரும் ஹிட்லரின் குண்டர்களால் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருந்த போது, ரஷ்ஷியாவில் இருந்து உதவி கிடைக்கும், கிடைக்கும் எனப் போராடிக் கொண்டிருந்த இடதுசாரிகளைச் சாகவிட்டு, ஜேர்மனியை ஹிட்லருக்குக் காவுகொடுத்தான் ஸ்ரலின்! காரணம் உண்மையான சோசலிசப் புரட்சி ஜேர்மனியில் ஏற்பட்டால் தான் சர்வாதிகாரமும், தலைமையும் பறிபோய் விடும் எனப் பயந்தான் ஸ்ரலின். ஈற்றில் அந்த ஹிட்லருடனேயே ஒப்பந்தம் செய்து கொ[illegible]ன். இது கண்டு ஐரோப்பிய இடதுசாரிப் புத்திஜீவிகள் அனைவரும் வெகுண்டெழுந்தனர். 'பொய்த்த கடவுளான' (ஸ்ரலின் ரஷ்ஷியாவை) (God that failed) பிய்த்தெறிந்தனர். இது இடதுசாரி உலகில் நடந்த மாபெரும் சந்தர்ப்பவாத அயோக்கியத்தனம்! ஆனால், இதற்கும் சுலோகம் உண்டு சொல்லவா?'' அவன் சிரித்தான்.

ஆனால், இன்று அந்த சோவியத் யூனியன் உடைந்து போய்விட்டதே! அதன் காரணம் தெரியுமா?'' என்றேன்.

என் கேள்வியின் உள்ளார்த்தத்தை விளங்கிக் கொண்ட அவன் ''சோவியத் யூனியன் மட்டுமல்ல சீனாவும் உடைந்து போய்விட்டது. அது, 'பூனை கறுப்பா? வெள்ளையா? என்பது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. எலி பிடித்தால் காணும்' என்ற முதலாளியாகி விட்டது! ஏன் தெரியுமா?'' என்றான் இன்னோர் கோணத்தில்.


''அமெரிக்கக் கைக்கூலிகள்! சி.ஐ.ஏக்கள்!'' நான்.

''இல்லை, உன் போன்ற சந்தர்ப்பவாதிகள்! பல்கலைக் கழகத்தில் படிக்கிறபோது 'இந்தப் புரட்சி அது இது' என்று பேசிவிட்டு, படித்து முடித்ததும், நல்ல உத்தியோகத்தில் குந்திக் கொண்டு, காதலித்தவளையும் கைவிட்டு, கொழுத்த சீதனம் வாங்கிக் கொண்டு இன்னும் கட்சிக்குள் இருந்து சுரத்துக்கெட்ட சுலோகங்களை அள்ளிவீசும் உன்போன்ற முற்போக்கு முதலாளிகளே! இங்குதான் உங்கள் புராதன மார்க்சீயம் மறு பரிசீலனைக்குள்ளாகிறது!''

நன்றி - நூலகத்திட்டம்



# புகார்



க. கலாமோகன்

நாங்கள் குடிக்கின்றோம், புகைக்கின்றோம், சம்பாஷிக்கின்றோம். அந்த மதுவிடுதியிலே தான் நான் அவர்களோடு நாங்கள் ஆகிக்கொண்டேன். எங்கிருந்து வந்தோம், எப்படி வந்தோம், ஏன் வந்தோம் என்பன தொடர்பாக நாங்கள் விசாரணைகளைச் செய்வதில்லை. திட்டங்கள் தீர்வுகளுக்கெல்லாம் அந்நியமான கணங்களை நாங்கள் அங்கே கழிப்பதுண்டு. மாலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்திலே எல்லோரும் கூடி விடுவோம்.

அங்குதான் நான் ஜோனோடு சந்திப்பு ஏற்படுத்திக்கொண்டேன். இரண்டு வருடங்களாக எனக்கு அவனைத்தெரியும். ஓவியக் கலைஞன் என்று கேள்வி. இன்றுவரை அவனது எந்தக் கீறலையும் நான் பார்த்ததில்லை. அவனது மனம் கவிதைத்துவமானது என்பதை - இரண்டு நிமிடங்கள் அவன் முன் இருந்தால் புரிந்துவிடலாம். எங்களைப்போல அவனும் நன்றாகவே குடிப்பான்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் அவன் ஓர் ஹோமோசெக்ஸுவல் எனும் விஷயம் எனக்குத் தெரியவந்தது. ஏன் இவ்வளவு நாளும் அவன் இதனை எங்களுக்குச் சொல்லாது விட்டான் என்று நாங்கள் எவருமே ஆச்சரியம் அடையவில்லை. வாழ்வு புகார் மயமானது. இன்று பார்ப்பவைகளை நாளை பார்க்கும்போது அவை வேறு அர்த்தங்களைத் தரலாம். இந்த மாற்றங்கள் முடிவற்றன....

புகாரைத் திட்டுவதா? விழிகளைச் சபிப்பதா? நாங்கள் அலைகின்றோம். சரி என்கின்றோம். பின்னர் பிழை என்கின்றோம். அதன் பின்னர் பிழை என்றதைச் சரி என்கின்றோம். சரி பிழையாகின்றது... பிழை சரியாகின்றது. மாறி மாறி இதே கதைகள்..... இதே கவிதைகள்..... இதே கனவுகள்....

*

நஹீப்பிற்கு அன்று பிறந்த தினம். ஜோன் தனது வாழ்வு முதல் தடவையாகச் சொன்ன தினமாகவும் அது இருந்தது. நாங்கள் சற்றே அதிகம் குடித்திருந்தோம். சிமோன் வீட்டிலேதான் நஹீப்பின் பிறந்த தினம் நடக்கும் என்றனர். நஹீப் வாழ்வது ஒரு ஹாஸ்டலிலாம், அத்தோடு தூரமுமாம். ''சரி போவோம்'' என்று சிமோன் சொன்ன வேளையில், பிரான்ஸிஸ்கோ எங்களது கிளாஸ்களை ''இது கடைசி ரேண்'' என்றபடி நிரப்புகின்றான். இந்த வேளையிலேதான் ஜோன் அழுதான். முதல்தடவையாக அழுவதை நாங்கள் கண்டோம். முன்னர் அவன் அழுதானா என்பது எங்களுக்குத் தெரியாது.

''ஜோன்! நீ ஏன் அழுகின்றாய்?'' பிரான்ஸிஸ்கோ கேட்கிறான்.

''எனது கனவைத் தொலைத்த தினம் இது''

''எது உனது கனவு?'' கேட்கிறேன்.

''அது எனது உலகு. எனது கனவே உலகாக இருந்தது...''

அவனது உலகமும், அவனது கனவுகளும். எமது கனவுகளும், எமது உலகுகளும். இந்தக் கணத்தில் எனது வயல்களும், எனது வீதிகளும் என் முன் பளிச்சிட்டு மறைந்தன. எனது சில இரவுகளின் துணைவியான நத்தலி எனது உதட்டை மிருதுவாகக் கடித்துவிட்டு ஜோனின் மீது தனது வட்ட விழிகளை நிமிர்த்துகின்றாள்.

''இப்ராஹிம்! அழகிய இப்ராஹிம்!'' என ஜோனின் உதடுகளும் முணுமுணுக்கின்றன.

''இப்ராஹிம் இறந்து... ஐந்து வருடங்கள். இன்றுதான் அவன் இறந்தான். அவனது இறந்ததினம் இன்று. நான் அவனோடு வாழ்ந்தேன். நான் அவனையும் என்னை அவனுமாக வாழ்ந்தோம். காதலின் பதுமமான பக்கங்களை இரவுகளையும், பகல்களையும் மறந்து நாங்கள் வாசித்தோம். அவனது உடலின் பூக்களை எனது போதை விழிகளால் முகர்ந்தேன், கடித்தேன். எனது உடலும் உயிரும் களைப்பில்லாமல் அவனைத் தியானித்தன. இப்ராஹிம்! உனது முகத்துடன் பிறந்த நாணம் அழிமலேயே இருக்கட்டும். உனது நாணத்தின் ஏக சுவைஞன் நானே. உனது உடலில் நான் கீறிய ஓவியங்கள் எனக்குள் காயாமலேயே உள்ளன. உனது சிவப்பு உதடுகள் தந்த சுவை எங்கும், எவளிடமும், ஒருபோதுமே எனக்குச் சித்திக்க மாட்டா. இப்ராஹிம்! நீயே எனது காதலி. நீயே எனது கோடை காலச் சோலை. எனது உயிரின் குரல் உனக்குக் கேட்கின்றதா?''

ஜோன் தன்னை மறந்த நிலையில் இருந்தான். அவனது வாழ்வின் பக்கம் எங்களுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. ஆனால், ஓர் கசிவினை எங்களுக்குள் ஏற்படுத்தியது.

''என்ன, கனவு காண்கின்றாயா?'' என்றபடி நத்தலியைச் சற்றே உசுப்பினேன். எனது காதிற்குள் மிகவும் அமைதியாக ''பாவம் ஜோன்'' என்றபடி எனது உதட்டில் முத்தமிட்டாள்.

நானும் அவளும் சில வருடங்களாக.ரகஸிய வாழ்வு நடத்துகின்றோம். அவளை நான் முதலாவதாகச் சந்தித்தது ஓர் ஓவியக் கண்காட்சியிலேயே. அன்று நாங்கள் நிறங்கள், உருவங்கள் பற்றி நிறையப்பேசினோம். பேர்ணாட் லே ஜரின் உருவங்களின் முன்னே நாங்கள் திகைத்து நின்ற வேளையிலே தான், ஒருத்தி வந்து, தான் பிந்தி வந்ததற்கு முதலில் மன்னிப்புக் கேட்டு விட்டு அவனது உதட்டிலே முத்தமிட்டாள்.

''உனக்கு கத்தரினை அறிமுகப் படுத்துகின்றேன். நான் வாழ்வது இவளோடு தான்'' எனறாள் நத்தலி.

இந்தச் சந்திப்பின் பின்னர், நான் அவர்களது வீட்டிற்கு பல தடவைகள் அழைக்கப்பட்டேன். எனக்கு ஓர் லெஸ்பியன் குடும்பத்துடன் தொடர்பு உள்ளது என்று சொன்னபோது எனது மனைவி சற்றே அதிர்ந்து போய்விட்டாள்.

''வாழ்வின் முகங்கள் வித்தியாசமானவை. வரைவிலக்கணங்களை வைத்து நாம் ஒருபோதுமே வாழ்வைப் பார்க்க முடியாது'' என்று மட்டும் நான் அவளிடம் சொல்லிக் கொண்டேன்.

''இந்த வாழ்வில் எனக்கு ஓர் சுவை கிடைக்காது விடின் அது பரிசோதனை முயற்சியாகவே இருந்து விடலாம்... அவள் என்னை விரும்பினாளா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், என்னோடு தனது பரிசோதனையைத் தொடங்க விரும்பினாள். கடந்த இரண்டு வருடங்களாக நானும் அவளும் ரகஸிய கணங்களில் வாழ்கின்றோம். இந்தக் கணங்களிலே நாங்கள் யாசிப்பது சந்தோஷத்தை மட்டுமே...

*

ஜோனினது காதலன் இப்ராஹிம் (AIDS) பிடித்துத்தானாம் இறந்தானாம். ஒரு வருட காதல் வாழ்வின் பின் எப்படி அவன் பிராங்கால் வசீகரிக்கப்பட்டான் என்பதை ஒரு போதுமே ஜோன் விளங்கிக் கொண்டதில்லை.

''அவன் எனக்கு அந்த மாலையிலேயே முத்தம் தந்தபோது அதுவே அவன் எனக்குத் தரும் கடைசி முத்தமாக இருக்கும் என நான் நினைக்கவேயில்லை. நான் அவனது காலில் விழுந்தேன். காதலிற்காக....'' ஜோன் அழுதபடி சொல்கின்றர்ன்.

உலகு, கனவு, சந்தோஷம், உபாதை....

''நான் இப்போது ஆல்பேர்த்தோவுடன் வாழ்கின்றேன். இப்ராஹிமைப் போல இவனும் என்னைப் பிரமிக்க வைக்கின்றான். ஆனால், இவனிற்காக நான் எந்தக் கவிதையையுமே எழுதியதில்லை. பயம்! பயம்!! பிரமித்து.

நத்தலியும் கத்தரினும் பிரிந்து இரண்டு வருடங்கள் . பிரிவின் முதலாவது தினங்களில் நத்தலியின் மனம் பாதிக்கப்பட்டிருந்தது. நான் அவளிடம் பிரிவின் காரணங்களைக் கேட்கவில்லை. அவளாகவே, கத்தரின் வேறு ஒரு பெண்ணை விரும்பத் தொடங்கியுள்ளதாகவும், அவளுடனேயே வாழ முடிவெடுத்துள்ளதாகவும் சொன்னபோது,

''அப்படியாயின், நீ ஓர் வேறு உறவைத் தேடுவது தானே'' என்றேன்.

''நான் லெஸ்பியன் வர்ழ்க்கையை விட்டு வெளியேற விரும்புகின்றேன்.''

''ஏன்? நீ இந்த வாழ்வு முறை கூடாதது என்று கருதுகின்றாயா?''

''அப்படியில்லை. வேறு சுவைகளையும் அறிய எனக்கு விருப்பமாகவுள்ளது.''

''இந்த விருப்பத்தின் காரணமாக உனது பிரிவினைக் கொள்ளலாமா?''

''பிரிவினால் நான் துன்புறுகின்றேன் என்பது உண்மை. ஆனால், எனது விருப்பங்கள் புனிதமானவை.''

''வேறு சுவைகள் என நீ எதனைக் குறிப்பிடுகின்றாய்?''

''எனக்கு 32 வயது. நான் ஒரு போதுமே ஆண்களோடு வாழ்ந்ததில்லை. இந்த வாழ்வையும் அறிய விரும்புகின்றேன்.''

''இது ஓர் பரிசோதனை முயற்சியா?''

நாங்கள் ஆகிக்கொண்டார்கள். நத்தலி எனது கன்னத்தைத் தடவினாள். உதட்டைக் கடித்தாள்.

போதை! போதை!! பொல்லாத போதை!

முடிவில் நாங்கள் சாப்பிடத் தொடங்கினோம். இந்த வேளையிலே லூனெஸ் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி ஏதோ தொடங்க நத்தலி தடுத்தாள்.

''இது கனவுகள் வாழும் கணம். உனது போதனைகளைப் புதை!''

கொண்டாட்டம் முடிந்து மாடிப்படிகளால் இறங்கிக் கொண்டிருந்தபோது - ஓர் குழந்தை அழும் ஒலி எனக்குக் கேட்டது.

மெத்ரோ பூட்டப்பட்டுக் கிடந்ததால் ராக்ஸி எடுத்து வீடுகளுக்குத் திரும்புவதே எங்களுக்குள்ள ஒரேயொரு வழியாக இருந்தது. என்னையும் ஜோனையும் தவிர்த்து ஏனையோருக்கு ராக்ஸிகள் இலகுவாகக் கிடைத்து விட்டன. நாங்கள் காத்திருந்தோம். எதுவும் பேசாமல்.

ஜோன் மிகவும் களைத்துப் போய் இருந்ததால் அடுத்து வந்த ராக்ஸியில் அவனை ஏற்றி அனுப்பிவிட்டு இனிவரும் ராக்ஸிக்காகக் காத்திருந்தபோது ஓர் மெல்லிய குளிர்காற்று என்னைக் கடித்துச் சென்றது

*

எழுதினால் இவனையும் பறிகொடுத்து விடுவேனோ எனும் பயம். ஒவ்வொரு இரவிலும் ஆல்பேர்த்தோவை நான் பிரமிக்க வைக்கின்றேன். ஆனால், ரகஸியமாக

→

நன்றி - நூலகத்திட்டம்




இப்ராஹிமிற்காக அழுகின்றேன். நகர்ந்து கொண்டிருப்பனவே எனது உலகும் கனவும்.....''

✱

எப்படியோ மதுவிடுதியிலிருந்து சிமோன் வீட்டிற்கு வந்துவிட்டோம். அவனது மனைவி உண்மையிலேயே ஓர் பேரழகி. அவளது உபசரிப்பால் அதிர்ந்தே போய் விட்டேன். ''எனது கணவனின் சிநேகிதர்கள் எனது சிநேகிதர்களே'' என மிகவும் அடக்கமாகவே சொல்லிக்கொண்டாள். நாங்கள் அங்கே சென்றது நஹீப்பின் பிறந்த தினத்தைக் கொண்டாட எனும் விஷயம் சிமோன் சொல்லியபோதே அவளுக்குத் தெரியவந்தது. அது ஓர் திட்டமிடப்படாத கொண்டாட்டமே.

''குளிர்சாதனப் பெட்டிக்குள் எல்லாமே உள்ளது. விரைவில் சமையல் முடிந்துவிடும்'' என்றபடி ஓர் புதிய விஸ்கிப்போத்தலை மேசையில் வைத்தான் சிமோன்.

நாங்கள் மீண்டும் குடித்தோம். பிரான்ஸிஸ்கோவின் உடல் ஆடத்தொடங்கியதால் அவனுக்கு விஸ்கி விநியோகம் செய்வதைத் தவிர்த்து பியர் கொடுக்கப்பட்டது. ஜோன் தண்ணீர் குடித்தான். சிமோனினது மனைவி லெய்லாவின் இரண்டு சிநேகிதிகள் எங்களோடு.



மறுநாள் மாலை மது விடுதியிலே நான் தனியாக இருந்தேன். 10 நிமிடங்களிலே நத்தலி அங்கே வந்துவிடுவாள். அவளிற்கு முதல் சிமோன் லெய்லாவுடன் வந்துவிட்டான். முதல் தடவையாக அவளை அங்கு காண்கின்றேன்.

சிமோனின் விழிகளிலே கண்ணீர்த் துளிகள்.

''ஓர் துக்க சேதி!''

!!என்ன?''

''ஜோன் தற்கொலை செய்துவிட்டான்!''

இது உண்மையா என நான் அவனிடம் கேட்கவில்லை, ஏன் அவன் தற்கொலை செய்துகொண்டான் என்றும் கூட.

நத்தலி வந்தாள். அவர்களும் வந்து சேர்ந்தனர். செய்தி பரிமாறப்பட்டது. குடித்தோம். குடித்தோம். நாங்கள் எதுவுமே பேசவில்லை. மிகவும் அமைதியாக மதுசாலையை விட்டு வெளியேறினோம்.

***(பாரிஸ், ஜூலை 1996)***

# இரண்டாவது தொட்டில்

றஊப் மாமா
மரணித்தார் என்ற செய்தி கேட்டேன்.
முட்டை நொறுங்கிய சப்தமாய் உடையவில்லை
என்மனம் உடைந்ததற்கு
வேறொரு ஓசை உண்டு.

தாய்ப்பால்
தொட்டிலோசை
சுயம் இழந்து தவித்திடும் போது
மரணம் என்பது
உண்மைன்யெறாகிய பின்
வேறொன்றும் இல்லை
வெறுமித்துக் கிடந்தது மனவெளி.

வேறெங்குமில்லாத
அந்த ஓசையில் மனம் உடைந்ததென
தனிமரமும், பூச்செடியும்
கூச்சலிட்டு சொன்ன நேரத்தில்
குன்றின் மேல் ஏறியபடி கல்லின் துகளென்று விழ
என் துயர் தழும்பியது.

பாக்கிஸ்த்தான் மண்ணில்
பூச்செடி நட்டு மரணிக்கச் செய்.
உம்மா நான் மரணிக்வில்லை
அந்தப்பூச் செடிதான் மரணித்தது என்று கூற
ஒருநாள் ஊருக்கு வருவாயா?

சிப்பிக்குள் அவன் வரைந்த
ஓவியத்தின் தேடல்
கண்ணீர் - பின் மௌனம், பிரார்த்தனை என.

வீதி என்பது
வட்டங்களா, கோடுகளா
என்பதை அறியவும்
சன்னல்களைத் திறந்தேன்
கதவுகள் திறக்க பொழுதிருக்கவில்லை வாழ்வில்
அது
வேகமாய்ச் செல்லும் ஒன்றாகும்.


நிலாவை
தூரத்தில்
மிகத்தள்ளிப் போன தூரத்தில் எறிந்தேன்.
அங்கு அதிகமான மனிதர்கள்
பேசியபடி உட்கார்ந்திருந்தார்கள்
மரணமும் அங்கிருந்தது.
வானத்தின் மூலையில்
நிலா போய் விழுந்த பின்
அங்கிருக்கவில்லை அவர்கள்
இருட்டை விரும்பாதவர்கள்.

என்னவோ எனக்கு
இருளோடு கூடுதலான விருப்பமுண்டு
ஆதலால்
என்னைப் பொறுத்தவரை
மாமா இன்னமும் மரணிக்கவில்லை.

காட்டுக்குள் வீடுகட்டி
சேமித்துத் தரும்
மர இலைகளின் காற்றில் உள்ள
மூங்கில் பாடலின்
மிக இனிதான ஓசை எல்லாம்
வாழ்ந்து கொண்டிருக்குமென கூறமுடியாது.

நானுமொரு கவிதையோடு
ஒரு சிகரட் துண்டோடு
ஆரோக்கியமில்லாதவனாய் தோன்றுவதில்
ஒன்றுமில்லை.

இனிதான மாமா
மஞ்சள் சோறு சமைத்து உண்ணும்
சுகமான நாள் யாதும்
இல்லாது போன பின்
ம:ரிப்பாகிய பொழுது
என் ஆருயிர்ப் பொழுது மாத்திரம்
சொந்தம் சொந்தம்.



இத்துயரை எங்ஙனம்
ஒரு பாடலாக்கல் இயலும் ?
அவலம் மிகுந் தறுவாயில்
கண்ணீரிலிருந்து கவிதையைப் பிரித்தறிதல்
எத்துணைச் சாத்தியம்?

போருக்கு-
திருகி எறி நீயென்று
உயிரின் கழுத்தையும்,
துவம்சம் செய்யவென்று- வாழ்வையும்
காவு கொடுத்தோர் நாம்.

நமது கவிதைகளில்
மடுவத்து அசூசையும்,
நிணமும் இரத்தமும் இறுகிக்
கறுப்பாகிக் காய்ந்த நெடியும்
வீசாதா பின்னே ?

சப்பாத்துக் கால்களின் கீழ்
உயிர்நிலைகள் நசுங்கியும்,
யோனி சிவந்து குருதி கொப்பளித்தும்,
நேர்ச்சைகள் பொய்த்து
இஷ்ட தெய்வங்கள் எல்லோரும்
நிர்க்கதியில் விட்டுப் புதினம் பார்க்க
வதைத்தே மரிக்கச் செய்யப்பட்ட ஆத்மாக்களின்
கனத்தில் காவ ஒண்ணாது - காற்றையும்
முடத்தில் வீழ்த்திய அலறலை,
கடைசி ஈனஸ்வரத்தை நீங்கள்
உற்றுக் கேட்டதுண்டா?

பாழுங்கிணற்றுள்ளோ,
மலக் குழியொன்றுள்ளோ,
அன்றில்-
இன்னும் கண்டறியப்படா
புதை குழியொன்றுள்ளோ - எங்கோ
கொன்று வீசப்பட்டவர்களுக்காய்க் காத்திருக்கும்
இன பந்துக்களுக்குச் சொல்லியாற்ற
உங்கள் மொழிகள் வலிவு பெறுமா ?

கொலைக் களங்கள் தோறும்
போரிட்டு மாளும் எமது
புத்திர புத்திரிகளது ஓலமும்,
போரின் பெயரால் தெருக்களில்
குண்டுகளாய்ச் சிதறும் அப்பாவிகளின்
ஆசையும், தீராக்கனவுகளும்
ஆவியாய் எழுந்தெம்மைப் பீடியாது
மந்திரித்தே காவல் பண்ணத்
தக்கதோர் பரிகாரி யாரிங்கு ?

நமது கவிதைகளிலிருந்து
நாவைத் தொங்கவிட்டலையும் நாயையும்,
இலையான்களின் இரைச்சலையும்
எப்படி விரட்டித் தூரமாக்கப் போகிறீர்?

சொல்லுங்கள்---
சவம் புதைத்துத் திரும்பித்
தடத்தில்-
நம் சூடு ஆறிப் போம் முன்னம்
அனர்த்தங்களின் அடையாளம் அறவேயற்று
கருகிய புள்ளியில் புதிதாய்த் துளிர்க்கவும்,
மாய்வெலாம் மறந்து போகிக்கவும்,
வாழ்வின்கண் துய்த்துச் சிற்றின்பிக்கவும்,
உதறித் தட்டிச் சாம்பரையும், மீள
வான் நோக்கித் தாவியெழவும்-
நாமெல்லாம் எப்படிக் கற்றுக் கொண்டோம் ?

நீங்களே சொல்லுங்கள்...
வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன?

19980724
இரவு 11.30 மணி

நன்றி - நூலகத்திட்டம்

# பொதெம்கின் – டைட்டானிக்: வரலாற்றுக் கப்பலும், வரவுக் கப்பலும்...

இளநம்பி

நன்றி: புதிய கலாச்சாரம்.

வசூல் பந்தயத்தில் வெற்றி பெற்ற படங்களுக்கே ஆஸ்கார் விருது தரப்படுவது வழக்கம். உலகெங்கும் வசூலில் சாதனை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் 'டைட்டானிக்' திரைப் படம் 11 விருதுகளை அள்ளியது அதனைப் பற்றிய ஆர்வத்தை அதிகப் படுத்தியிருக்கிறது. சுமார் 1000 கோடிக்கும் மேல் செலவழித்துத் தயாரிக்கப்பட்டுள்ள இப்படம், ஹாலிவுட்டின் கலைப்பார்வையைப் 'பட்ஜெட்' என்றாக்கிவிட்டது என அமெரிக்கப் பத்திரிகைகளே வியக்கின்றன. ரசிகர்களும் அப்படித்தான். டைட்டானிக் கப்பலின் பிரம்மாண்டத்தைப் பார்க்காதவர்கள் 'வாழ்க்கையில் பிறந்தும் பயனில்லை' எனுமளவுக்குக் கவரப் பட்டிருக்கிறார்கள்.

14,000 தொழிலாளர்கள் கட்டியமைத்த 'டைட்டானிக் கப்பல்' 1912இல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்குப் புறப்படுகிறது. கப்பலின் மேல்த்தள முதல் வகுப்பில் செல்வந்தர்களும், கீழே மூன்றாவது வகுப்பில் ஏழை மக்களும் பயணிக்கின்றனர். நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு பெரும் பனிக்கட்டியில் மோதி உடைந்து கப்பல் மூழ்குகிறது. உயிர் காக்கும் படகுகளில் மேட்டுக்குடியினர் 700 பேர் தப்பிக்கச் சாதாரண மக்கள் 1500 பேர் நீரில் மூழ்கிச் சாகிறார்கள். இது வரலாறு.

இந்த நிகழ்ச்சியின் பின்புலத்தில் அதாவது மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ரோஸ், ஜக் என்ற காதலர்களின் கதை தான் இயக்குனர் கமரூனின் டைட்டானிக். இறந்து விட்ட தந்தையின் மேட்டுக்குடி அந்தஸ்தைத் தக்க வைக்கத் தன் தாயால் ஒரு செல்வச்சீமானுக்கு நிச்சயிக்கப்படும் ரோஸ், ஒரு தங்கக் கூண்டுக் கிளி. சூதாட்டத்தில் வென்றதற்காக மூன்றாம் வகுப்புப் பயணச்சீட்டைப் பரிசாகப் பெறும் ஜாக் ஒரு உதிரியான எளிமையான ஏழை இளைஞன். ஜக்குடனும், அவனது சமூகத்துடனும் பழகும் போது மன எழுச்சியும், விடுதலை உணர்வையும் பெறும் ரோஸ் அவன் மேல் காதல் வயப்படுகிறாள்.

பிறகு காதலுக்குத் தடை, காதலனுக்குச் சிறை, காதலியின் மீட்பு, இறுதியில் கப்பல் மூழ்குகிறது. உயிர்காக்கும் படகுகளில் பல முறை தப்பிக்க வாய்ப்பிருந்தும் ரோஸ் காதலனுடன் தான் கடலில் குதிக்கிறாள். தன்னைப் பலிகொடுத்து ரோஸைக் காப்பாற்றுகிறான் ஜக். இக் கதையை 102 வயதான ரோஸ், டைட்டானிக் கப்பலின் ஆபரண சொத்துக்களை கண்டுபிடிக்க முயலும் ஒரு குழுவினரிடம் பகிர்ந்து கொள்கிறாள்.

ரசிகர்களைச் சொக்க வைக்கும் பிரம்மாண்டமான இக்காதல் காவியம் குறித்த நமது விமர்சனங்களுக்கு முன்னால், அமெரிக்கர்கள் கவலைப் படும் ஒரு விசயத்தைப் பார்ப்போம். முதல் வகுப்பில் பயணம் செய்யும் செல்வந்தர்களின் அற்பத்தனங்களை அம்பலப்படுத்தி, மூன்றாம் வகுப்பு உழைக்கும் மக்கள் தான் உலகின் சாரம் என்ற மார்க்சியச் சாயலில் படமெடுக்கப்பட்டது குறித்து அமெரிக்க நியூஸ்வீக் பத்திரிகை வருந்துகிறது.

அமெரிக்கர்களே இப்படி அங்கலாய்க்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இருக்கிறது. அழுது வடியும் பியானோ இசையில். கூடார உடையுடன் சீமாட்டிகள். பல் தெரியாமல் சிரிக்கும் சீமான்கள். குண்டூசி விழுந்தால் சப்தம் கேட்கும் வகையில் 'நாகரீகமாக' நடக்கும் விருந்து. அடித்தளத்தில் நேரெதிராக உழைப்பின் கம்பீரத்தோடு நரம்புகளை முறுக்கேற்றும் வண்ணம் இசையுடன் ஆடிப்பாடி மகிழும் உழைக்கும் மக்கள்.

கப்பல் மூழ்கும் போது முதல் வகுப்புக்கென்று உயிர்காக்கும் படகுகளில் பிரிவினை உண்டா எனச் செருக்குடன் கேட்கும் ரோஸின் தாய்; மேட்டுக்குடியினர் தப்பிப்பதற்கு இடையூறு ஏற்படாதவாறு கீழே பூட்டப்பட்ட அறையில் அலறியவாறு போராடும் உழைக்கும் மக்கள். 50 பேர் ஏற வேண்டிய படகில் ஆடம்பரப் பொருள்களுடன் 12 சீமாட்டிகள் மட்டும் போகின்றனர். கப்பலில் மூழ்கிக்கொண்டிருக்கும் மக்களைச் சுட்டிக்காட்டி அந்தச் சீமாட்டிகளிடம் நியாயம் கேட்கும் காவலன். கைக்குழந்தையுடன் எங்கே போவது என்று கப்பல் கப்டனைக் கேட்கும் ஏழைத் தாய். கட்டுக் கடங்காத கூட்டத்தில் ஒருவனைச் சுட்டுக் கொன்று, குற்ற உணர்வினால் தன்னையே சுட்டுக்கொள்ளும் காவலன். காதலனின் அரவணைப்பில் இருக்கும் ரோஸ் தன்னருகே மரண பீதியுடன் உள்ள ஏழை முகங்களைச் சில விநாடிகள் பார்க்கும் காட்சி. கப்பல் மூழ்குவது தெரிந்தும், வேறு வழியின்றி இரு குழந்தைகளுக்குக் கதை சொல்லித் தூங்க வைக்கும் தாய்.

இக்காட்சிகள் நம்மூர் எம்.ஜி.ஆர், நம்பியாரின் மலினப்படுத்தப்பட்ட ஏழை X பணக்காரன் கதைபோல இல்லாமல் இயல்பாக எடுக்கப்பட்டிருப்பது உண்மை தான். ஆனால், மூன்றே கால் மணி நேரக் காதல் காவியத்தில் ஒரு சில மணித் துளிகள் மட்டுமே இடம்பெறும் இக்காட்சிகள் 'மகத்தான காதல்' உணர்வை அமுக்கி விட்டுப் பார்வையாளர்களின் மனத்திலே போதும் இடம்பெறப் போவதில்லை. ஆதாரத்திற்கு, ஆனந்த விகடனின் 4 வார விமர்சனத்தைக் காட்டலாம். இருந்தும் இதைக் கூடப் பொறுக்க முடியவில்லை என்றால் அது அமெரிக்காவின், மூலதனத்தின் மனசாட்சி.

கமரூன் உருவாக்கியிருக்கும் மேல்த்தள, கீழ்த்தள காதல் சித்திரத்தின் அடிப்படைச் சொத்துடமைச் சமூகத்தின் ஏற்றத் தாழ்வான உலக யதார்த்தம். ஆக, இந்தப் பிரச்சினை முடியும் வரை இந்தக் கதைகள் வெற்றியளிக்கும் ஃபார்முலாதான் என்பதில் ஐயமில்லை. அதனால் தான் ஏழ்மையின் அவலம் கூட சுலபத்தில் லாபம் தரும் விற்பனைச் சரக்காக இருக்கிறது.

ஆனால், டைட்டானிக்கின் வெற்றிகரமான விற்பனை அதன் நவீன தொழிநுட்பத்திலும், அதைச் சாத்தியமாக்கிய பெரும் பணத்திலும்தான் இருக்கிறது. உலகெங்கிலும் பத்திரிகைகள், ரசிகர்கள் பேசி, வியந்து வரும் பிரமிப்பின் அடிப்படையும் இதுவே.

படத்தின் இயக்குநர் கமரூன், நம்மூர் பாரதிராஜா, பாலச்சந்தர் போலக் கோபக்காரர்; பல்கலை வல்லவரான அவரிடம் வேலை செய்யப் படப்பிடிப்புக் குழுவினர் நடுங்குவர் என்றெல்லாம் பத்திரிகைகள் வியக்கின்றன. இன்னும் உண்மையான டைட்டானிக் கப்பல் எப்படி இருந்ததோ அத்தனை வசதிகளையும், அலங்காரங்களையும் மாதிரிக் கப்பலில் கொண்டு வருவதற்கு அவர் கண்ட சோதனைகளையெல்லாம் வாசகர்கள் படித்திருக்கக் கூடும்.

கப்பல் எந்தக்கோணத்தில் மூழ்கியதோ அதற்கேற்ப கடலில் உள்ள சிறு பொருட்கள் எங்கு விழ வேண்டும் என்பதைக்கூட எந்தப்பிழையுமின்றிப் படமெடுத்திருக்கிறார்கள் என்றால், அது ஒரு சான்று மட்டுமே. ''என் அறிவுக்கெட்டியவரை, இப்படத்தில் வரலாற்றுப் பிழை ஏதுமில்லை. வருங்காலத் தலைமுறையினர் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் இந்த உண்மைக்கதையினை எடுப்பதற்கு எங்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது'' என்கிறார் இயக்குநர்.

வரலாற்றைப் பார்ப்பதிலேயே இங்கு பொறுப்பில்லையே. 1500 பேர்கள் நீரில் மூழ்கிக் கொல்லப்பட்டது, ஒரு கொடூரமான விபத்து. இதைத்தவிர டைட்டானிக் கப்பலுக்கு வரலாற்றில் முக்கியத்துவம் ஏதுமில்லை. கப்பல் மூழ்கும் போது 'நாகரீக சமூகம்' அடித்தட்டு மக்களைப் பலிகொடுத்து விட்டுத் தான் மட்டும் தப்பித்துக் கொண்டது தான் அந்த விபத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரே பிரம்மாண்டமான சமூக விசயம். அந்த ஒரு விசயம் திரைப்படத்தில் காதலுக்குப் பக்கவாத்தியமாக வருகிறது. இறுதிக்காட்சியில் காதலர்கள் தப்பிப்பதற்குக் காதல் உணர்வுடன் போராடுகிறார்கள். தன்னுடன் கப்பல் ஏறிய நண்பனைக் கூட ஜக் அப்போது நினைக்கவில்லை. இது காதலில் மறதியென்றால், நமக்கும் அப்படித் தான். காதலர்கள் மட்டும் எப்படியாவது தப்பிக்கமாட்டார்களா என்று தான் நம் நெஞ்சங்கள் ஏங்குகிறதே தவிர பொம்மைகளைப் போல் விழுந்து, உறைந்து, இறந்து போன மக்களைப் பற்றியல்ல.

ஒருவேளை, மூழ்கும் கப்பலில் உயிர் வாழும் போராட்டத்தில் அடித்துக் கொண்டிருந்த உழைக்கும் மக்களின் அவலத்தையும், வேதனையையும் மையப்படுத்திக் காதலைப் பக்கவாத்தியமாக வைத்து இயக்குநர் படமெடுக்கத் துணிந்திருந்தால், செலவழிப்பதற்கு எந்த முதலாளியும் பணம் போடமாட்டான். குதிரைக்குத் தான் கொம்பு முளைப்பதில்லையே. அப்படியானால் இயக்குநரின் ஆர்வத்திற்கான தூண்டுதல் எது?


இதுதான். மிகப்பெரிய கப்பல், மிகக் கொடூரமான விபத்து இரண்டும் நவீன தொழிநுட்பத்தை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள ஏதுவான விசயம். இந்தப் பிரம்மாண்டத்தில் பிறக்கும் காதலின் போராட்டம், சர்வதேச உணர்வையும்- சந்தையையும் எளிதில் கைப்பற்றிக்கொள்ளும் இரண்டாவது விசயம். ஒரு மகா காப்பியத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை 'டைட்டானிக் விபத்து' அளிக்கிறது என்பதில் தான் கமரூன் கவரப்படுகிறாரே ஒழிய, கலை, வரலாறு, சாதனை என்பதெல்லாம் ரீல்.

ஆபிரிக்கக் கிராமம் ஒன்றில் பிளேக் நோயால் 10,000 பேர் இறந்து போகிறார்கள் என வைத்துக் கொள்வோம். இதை ஒரு பிரம்மாண்டமான திரைப்படமாக எடுப்பார்களா? அல்லது டைட்டானிக்கின் செலவில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இல்லாமல் எடுக்கப்படும் விதவிதமான தமிழ்க் காதல் படங்களைப் போல, காதலை மட்டும் பிரம்மாண்டமாக எடுக்க முடியாது என்பதுதான் டைட்டானிக் சொல்கின்ற சேதி.

தமிழ்ப்படங்களில் பிரிந்த காதலர்கள் இணைவதற்கான பொருளாக ஒரு அரச மரமோ, ஆட்டோவோ அதிக பட்சம் ஒரு ரயில் வண்டியாகவோ இருக்கும்போது, இங்கு ஒரு பெரும் கப்பலாக இருக்கிறது என்பது தான் உண்மை. என்றாலும் பெரும் செலவு பிடிக்கும் உண்மையாகவும் இருக்கிறது.

இதில் தான் கப்பலோடு சேர்ந்து ரசிகர்களும் அடித்துச் செல்லப்படுகிறார்கள். கடலைக் கிழித்துக் கொண்டு செல்லும் கப்பல், போட்டியுடன் நீந்தும் மீன் கப்பலின் முகப்பிலே காதல் வயப்படும் காதலர்கள், அடித்தளத்தில் பிரம்மாண்டமான நீராவி எந்திரங்களுடன் வேலை செய்யும் கடும் உழைப்பாளிகள், கும்மிருட்டுக் கடலில் ஒளிரும் விளக்குகளுடன் மூழ்கும் கப்பல், நாயகி ரோஸ் காப்பாற்றப்படும் இறுதிக் காட்சி. இவற்றையெல்லாம் கைதட்டி ரசித்த ரசிகர்கள் காதலின் சோகத்தோடும் கப்பலின் பிரமிப்போடும் அரங்கை விட்டு அகலுகிறார்கள்.

ஹாலிவுட்டின் முதல் தரக்கலைஞர்களும், நவீன தொழிநுட்பமும் பயன்பட்டிருக்கும் இப்படமும் மேற்கண்ட காட்சிகளும் பார்வையாளர்களைக் கவர்ாமல் போய் விடுமா என்ன!




என்றால் தொழிநுட்பமும் அதன் பிரம்மாண்டமும் தான் கலையா? இது தரும் மன எழுச்சிதான் என்ன?

வாழ்க்கையில் பிரம்மாண்டங்கள் பலவிதம். வட்டியினால் வாரிக்குவித்த பொருளில் பர்மாத் தேக்கும் - பளிங்குக் கல்லுமாய் காரைக்குடி வட்டாரத்தில் இறுகி நிற்கும் செட்டியார்களின் மாளிகைகள் - வட்டியின் பிரம்மாண்டம். தன்முகத்தை விதவிதமாகத் தானே ரசித்துக்களிக்கும் ஜெயலலிதாவின் 150 அடி கட்அவுட் - அற்பத்தனத்தின் பிரம்மாண்டம். உலக அதிசயங்கள் ஏழிலும் ஐஸ்வர்யா ராய் - பிரசாந்த் ஜோடியை ஆடவிட்டுப் பெருமை பேசும் சங்கரின் 'ஜீன்ஸ்' படம் - கோடம்பாக்கத்துக் கொழுப்பின் பிரம்மாண்டம், இந்துராட்டிரக் கனவும், ஹிட்லரின் ஆளப்பிறந்த ஆரிய இனமும்- பாசிசத்தின் பிரம்மாண்டம். கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுகோளை ஏற்று, மஞ்சள் நதியின் குறுக்கே தமது சொந்த உழைப்பில் சீன விவசாயிகள் எழுப்பிய மாபெரும் அணைக்கட்டு - சோசலிசப் போராட்டத்தின் பிரம்மாண்டம்.

ஆம். பிரம்மாண்டம் இயற்கையின் இயக்கத்தில் இருக்கிறது; அதைப் புரிந்து கொள்ள மனிதன் நடத்தும் போராட்டத்தில் இருக்கிறது; அதற்காகத் தன் இனத்தினுள்ளே நிலவும் சுரண்டல் உறவுகளை மாற்ற முயலும் அவனது வர்க்கப் போராட்டத்தில் இருக்கிறது. இத்தகைய பிரம்மாண்டத்தை, அதற்கே உரிய கம்பீரத்தோடும், கலை ஆற்றலோடும் உணர்த்திக் காட்டும் ஒரு கலை அதற்கே உரிய எழுச்சியைத் தோற்றுவிக்கும்.

அத்தகைய எழுச்சியைத் தோற்றுவித்தது ஒரு திரைப்படம்: இதுவும் ஒரு கப்பலின் கதை தான்.

### *போர்க்கப்பல் பொதெம்கின்*

டைட்டானிக்கின் பிரம்மாண்டமோ, ஆடம்பர வசதிகளோ இல்லாத ஒரு சிறு போர்க் கப்பல். கந்தலாடை மாலுமிகளையும், வீரர்களையும் கொண்ட பொதெம்கின், ரசிய ஜாரின் கப்பற் படையைச் சேர்ந்தது. 1905ல் ஜாருக்கு எதிராக வெடித்துக் கிளம்பிய புரட்சியின் புயல் இக்கப்பலையும் பற்றிக்கொண்டது. தளபதிகளையும், ஜாரையும் எதிர்த்துக் கலகம் செய்த வீரர்கள் கப்பலை விடுவிக்கப்

→ 17

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்களின் வாழ்வையும், உணர்வையும் சொல்லும் தீர்த்தக்கரை கதைகள்

லெனின் மதிவாணம்

'மலையக இலக்கியம்' எனும் தொகுதி ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் முக்கிய கூறாகப் போற்றப்பட்டு வருகின்றது. இலக்கியத்தில் மக்கள் பண்பு வளர வளர இதன் அவசியம் சிறப்பாகவே உணரப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பயிற்செய்கைக்குக் களமாக உள்ள மலைநாட்டைப் பகைப்புலமாகக் கொண்ட இலக்கியப் படைப்புக்களாக இவை திகழ்கின்றன. மலையக இலக்கியம் குறித்து ஆய்வு செய்ய முற்படுகின்ற போது அதற்குக் களமாகவும், தளமாகவும் அமைந்துள்ள மலையக மக்களின் வாழ்வியல் பற்றிய தெளிவு அவசியமான தொன்றாகின்றது.

இலங்கையில் அந்நிய முதலாளித்துவம் நிலைகொள்ளத் தொடங்கியதன் விளைவாக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகம் செய்யப்பட்டது. இப்பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையைச் செய்வதற்கு தேவையான தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டனர். இவ்வாறு ஒப்பந்தப் பிணைப்புச் செய்து கொண்டு இங்கு வந்த தொழிலாளர்களும், அவர்களுடன் இணைந்து வந்த வர்க்கமும் மலையகத் தமிழர் என்ற பதம் கொண்டு அழைக்கப்படுகின்றனர். இந்தியாவில் நிலவுடமை சமூகவமைப்பில் விவசாய வர்க்கத்தினராகக் காணப்பட்ட இம்மக்கள், இலங்கையில் முதலாளித்துவ சமூகமைப்பின் வாழ்க்கை அனுபவங்களைப் பெற்று பரந்து பட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர். மலையகத்தில் நிலவும் சமூகக் கூட்டு வாழ்க்கையையும், அவ்வாழ்க்கை உருவாக்கித் தந்துள்ள தனித்துவமான மனோபாவம் உழைப்புடன், அல்லது உற்பத்தியுடன் தம்மை சம்பந்தப் படுத்திக்கொள்ளும் போது விளைபொருளாய் உருவாகி பீறிடும் கலை இலக்கிய உணர்வுகள் இவ்வம்சத்தினையே பிரதிபலித்து நிற்கும்.

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் போன்ற இலக்கிய வடிவங்களில் சிறுகதையே மலையக மக்களின் வாழ்வியலையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியதில் முக்கிய இடம் வகிக்கின்றது. இவ் வளர்ச்சிப்போக்கில் 'தீர்த்தக்கரை கதைகள்' எத்தகைய இடத்தினை வகிக்கின்றது என்பதை தரநிர்ணயம் செய்ய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்காகும்.

கிட்டதட்ட 157 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 80களில் முகிழ்ந்த தீர்த்தக்கரை சஞ்சிகையிலும், 90களில் வெளிவந்த நந்தலாலாவிலும் பிரசுரிக்கப்பட்ட பதின்மூன்று சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பாக அமைந்துள்ளது. இதனை நந்தலாலா வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது. இலக்கிய நோக்கிலும், போக்கிலும் ஒற்றுமை கொண்ட எழுத்தாளர்கள் பலர் சேர்ந்திணைந்து இவ்வாறு நூல் வெளியிடுவது நமது சூழலுக்குப் பழக்கமானதும் பொருத்தமானதும் ஆகும்.

தொகுப்பில் அடங்கியுள்ள 13 சிறுகதைகளில் மொத்தம் மூன்று கதைகளைத் தவிர ஏனையவை யாவும் 1980 - 82 காலப்பகுதியை உள்ளடக்கியதாக அமைந்து காணப்படுகின்றன. தொகுப்பில் அடங்கியுள்ள எழுத்தாளர்களும் சிறுகதைகளினதும் விபரம் பின்வருமாறு:-

★ *ஆனந்த ராகவன்*

1. உதய காலத்து ஜனனங்கள், 2. நண்பனே என்றும் உன் நினைவாக, 3. வீணை மேவும் விரல்கள், 4. நாகசேனைத் தோட்டத்து நரசிம்மன் கங்காணி.

★ *பிரான்சிஸ்சேவியர்*

1. விடியாத இரவுகள், 2. தடம் மாறும் சுவடுகள்.

★ *ஏ.எஸ்.சந்திரபோஸ்*

1. என்று தணியும் இந்த....

★ *கேகாலை கையிலைநாதன்*

1. தண்ணீர் வற்றிடும் குளங்கள், 2. மீண்டும் வசந்தம் வரும், 3. காதலிலே இரு கண்கள், 4. வெண்ணிற தாமரைகள், 5. தூரிகை.

★ *ராமையா முருகவேல்*

1. சிறுவன்.

இந்த நூலினைக் கற்கையில் மலையக வாழ்வியலை புரிந்து கொண்டு அதன் உள்நின்று எழுதுகின்ற எழுத்தாளர்களின் உள்ளங்களையும், உணர்வுகளையும் காணக்கூடியதாக உள்ளது. இச்சமூகத்தைச் சாராத பிரான்சின் சேவியர் கூட இத்தகைய வாழ்வியலின் பின்னணியிலிருந்து எந்தளவில் தனது எழுத்தினை பட்டைதீட்ட முயன்றுள்ளார் என்பதையும் அவரது சிறுகதைகள் வெளிப்படுத்தியுள்ளன.

சிறுகதை மூலமாக உலகின் உண்மைகளையும், உணர்வுகளையும் விளக்கலாம். 70-80 காலப்பகுதியில் இனக்குரோதம் வகுப்புவாதவெறி என்பன கேவலமானதோர் இன அரசியலின் பின்னணியில் மோசமானதோர் நிலையை எட்டியது. இத்தகைய இனவாதத்தின் பின்னணியில் சிதைகின்ற மனிதத்துவத்தைப் பற்றிக்கூறுவதாக ''நண்பனே என்றும் உன் நினைவாக' என்ற கதை அமைகின்றது.

''அவனது கைகள் இரண்டும் வெட்டப்பட்டுப் பக்கத்தில் கிடக்கின்றன. ஒரு கண் பாதி வெளியில் வந்த நிலையில் வெறித்து நிற்கின்றது. உடல் முழுவதும் குத்திக் குதறிய நிலையில். மானுடத்தின் உயிர்ப்பும், உயர்ந்த உள்ளமும் கொண்ட ஓர் உன்னத நிர்மாணம் என்னமாய் கணப்பொழுதில் சிதைந்து சிதறுண்டு போனது''

இனவாத வெறிக்குப் பலியாகிய பாத்திரமான கோதாண்டியின் நிலை இவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது.

''நாகசேனைத் தோட்டத்து நரசிம்மன் கங்காணி'' என்ற கதை மலையக சமூக இருப்பினை, அதன் இனத்துவ அடையாளத்தை நிலைநிறுத்த முனைகின்ற மலையக வாழ்வியலை சித்திரிப்பதாக அமைகின்றது. சமூகத்திலிருந்து அந்நியப்பட்டுச் செல்லும் இளைய தலைமுறையினருக்கு எதிரான நரசிம்மன் கங்காணியின் உணர்வு இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும்.

கேகாலை கையிலைநாதனின் 'தண்ணீர் வற்றிடும் குளங்கள்', 'மீண்டும் வசந்தம் வரும்', 'காதலிலே இரு கண்கள்' ஆகிய சிறுகதைகள் 80களின் ஆரம்பப்பகுதியிலும், ஏனையவை யாவும் 90களிலும் எழுதப்பெற்றவையாகும். 1970, 80 களில் இடம் பெற்ற கோரமான வன்முறையைத் தொடர்ந்து வந்த காலகட்டத்தின் வாழ்வியலை சித்திரிப்பதாக அவை அமைகின்றன. இக்கதைகள் யாவும் கண்டிப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டவை என நூலில் குறிப்பிடப்பட்டுள்ளமை பொருத்தப்பாடுடையதாகும்.

'காதலிலே இரு கண்கள்' என்ற சிறுகதை புனிதமான காதல் கூட பொருளாதாரத்தை அடித்தளமாகக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது. கதையில் வருகின்ற திலிப் எனும் இளைஞனின் 'மானசீகமாக ஆசைப்படுதல்' என்ற உணர்வு கூட மறுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இது வர்க்க சமுதாயத்தில் காணப்படுகின்ற ஓர் அநீதியைச் சுட்டுவதாக அமைகின்றது. இவ்வம்சம் கோட்பாடாக விபரிக்கப்படாமல் மனித உறவுகளின் அடிப்படையில் சித்திரித்துள்ளமை இக்கதையின் சிறப்புக்கு வழிவகுத்தது எனலாம்.

'வெண்ணிறத் தாமரைகள்' என்ற கதை பிறிதொரு காலகட்டத்தில் எழுதப்பட்டதாகும். இது இலங்கையின் தேசிய இலக்கியத்தில் ஓர் முத்திரையாக விளங்குகின்றது. ஜே.வி.பியின் காலத்தையும், சிங்கள இளைஞர்கள் மீது அரசு மேற்கொண்ட கோரமான படுகொலைகளையும் சித்திரிப்பதாக அமைகின்றது.

மலையக மண்வாசனையை சிறப்பாக வெளிப்படுத்தி நிற்கும் கதையாக ''என்று தணியும் இந்த....'' அமைகின்றது. வீட்டு வேலைக்காகச் செல்லும் தோட்டத்துச் சிறுவர்களின் துன்பதுயரங்களை எடுத்துரைக்கின்றது. அது கதையில் வீட்டு வேலைக்கார. எஜமானின் மனோபாவம், செயல் ஆகியவற்றின் மூலம் வர்க்க முரண்பாடுகளும், அவற்றினடியாக எழும் கருத்தோட்டங்களும் பெறுமதிகளும், உணர்வுகளும் நன்நயத்துடன் தீட்டப்பட்டுள்ளன.

'சிறுவன்' என்ற சிறுகதை இன்றைய காலகட்டத்தையும், தலைமுறையினரையும் பிரதிபலித்து நிற்பதாக அமைகின்றது. ஒருவகையில் இத் தொகுப்பினை இது நிறைவு செய்கின்றது எனலாம். பலவிதமான சுரண்டல்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் அடிமைப்பட்டதாகவும் சோகமே நித்தியமாகவும், நிரந்தரமாகவும் உள்ள ஓர் சமூகவமைப்பிலிருந்து வளர்கின்ற சிறுவன் ஒருவனின் போர்க்குணம் துரைக்கு (மனேஜர்) எதிராக எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதையும், உழைக்கும் மக்களை நேசிக்கின்ற ஓர் ஆசிரியனின் பார்வையில் அவன் எவ்வாறு தரிசிக்கப் படுகின்றான் என்பதையும் சித்திரிப்பதாக அமைகின்றது. தத்துவத் தெளிவும் சிருஷ்டிகரத்திறனும் ஒருங்கிணைந்து காணப்படுவதே கதையின் சிறப்புக்கு வழிவகுத்தது எனலாம். தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட இக்கதை மலையக சிறுகதை இலக்கியத்திற்கு மேலும் நம்பிக்கை ஒளியூட்டுவதாக உள்ளது.

பிரான்சிஸ் சேவியரின் 'விடியாத இரவுகள்', 'தடம் மாறும் சுவடுகள்' ஆகிய சிறுகதைகள் வட - கிழக்கு மக்களின் உக்கிரமான தமிழ் தேசிய இயக்கத்தின் முதற்கட்டத்தை சித்திரிப்பதாக அமைந்துள்ளது. அறுபதுகளில் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டமானது தேசியத்தின் வடிவமாக இருந்தது போலவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும் முனைப்புப் பெற்று புதியதோர் பரிமாணத்தை எட்டியது. இத்தகைய ஓர் காலப்பின்னணியை இவரது கதைகள் மிக நேர்த்தியாகச் சித்திரிக்கின்றன. இவ்வம்சத்தினை அழகாய், விவேகத்துடன் படம் பிடித்த எழுத்துக்கள் சிலவாகத்தான் இருக்க முடியும் என உறுதியாகக் கூறலாம். மலையக வாழ்நிலை இருப்புக்களிலிருந்து பிரான்சிஸ் சேவியர் தனது எழுத்தினைப் பட்டைத்தீட்ட முனைந்தமையும் இதற்கு ஓர் காரணம் எனலாம்.

ஆனந்த ராகவனின் 'வீணை மேவும் விரல்கள்' கதை காட்டுமிராண்டித் தனமாக வாழ்கின்ற பொலிஸ் அதிகாரியின் மனைவிக்கும் மனிதாயம் உள்ள ஓர் இளைஞனுக்கும் இடையில் ஏற்படுகின்ற காதல் உணர்வைச் சித்திரிப்பதாக அமைகின்றது. கதையின் இறுதியில் தேவகியும் (பொலிஸ் அதிகாரியின் மனைவி) திலீபனும் (இளைஞன்) எதிர்பாராத விதத்தில் திடீரென ரயிலில் · சந்திப்பதாக கதையமைந்துள்ளமை யதார்த்தமாக இல்லை. இத்தொகுப்பில் காணப்படுகின்ற சிறுகதைகளில் யதார்த்தச் சிதைவினை கொண்டதாக இக்கதை அமைகின்றது.

நூலின் உள்ளடக்கம் என்றபகுதியில் ஆனந்த ராகவனின் 'நாகசேனை தோட்டத்து நரசிம்மன் கங்காணி' கதை பிரான்சிஸ் சேவியர் எழுதிய கதைகளில் சேர்க்கப்பட்(ு)ள்ளது. திருத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

மனித உறவுகள் எல்லோருக்கும் பொதுவானவை என எல்லோரும் தத்துவம் பேசினாலும் கூர்ந்து நோக்கினால் அவை வர்க்க நிலைப்பாடுகளுக்கேற்ப செயற்படுவது தெரியவரும். யதார்த்தமான பாத்திரப் படைப்புக்களை சிருஷ்டிக்க எழுத்தாளனுக்கு இத் தெளிவு அவசியமான ஒன்றாகும்.

தொகுப்பில் அடங்கியுள்ள சிறுகதைகள் யாவும் இவ்வம்சத்தினை ஏதோ ஒரு வகையிலும் அளவிலும் உள்வாங்கியுள்ளன எனலாம். இதில் அடங்கியுள்ள பெரும்பாலான கதைகள் மலையக உழைக்கும் மக்களின் வாழ்வியலிலிருந்து முகிழ்த்ததனால் அவர்களின் வாழ்க்கையில் காணப்படுகின்ற அடக்கு முறைகளும், அடிமைத்தனங்களும் சோகத்தை வெளிப்படுத்தினாலும், அதற்கு மத்தியிலும் வாழத்துடிக்கின்ற மனிதத்துவத்தைக் காணலாம். இதனை இவ்வெழுத்தாளர்கள் அழகாயும், விவேகத்துடனும் சித்திரித்துள்ளனர்.

தீர்த்தக்கரை சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகள் குறித்து தமிழ் எழுத்தாளர் வலலிக்கண்ணன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''மலையக மக்களின் வாழ்க்கையையும், உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் சிறுகதைகள் தீர்த்தக் கரையில்வெளிவந்துள்ளன. திறமை மிக்க பல எழுத்தாளர்களின் படைப்புகள் அவை''

(தமிழில் சிறுப்பத்திரிகைககள் பக். 301)

இக்கூற்று தீர்த்தக்கரைக் கதைகளுக்கு மட்டுமல்லாது நந்தலாலாவில் வெளிவந்த கதைகளுக்கும் பொருந்தும் இவ்வெழுத்தாளர்களின் படைப்புக்களில் காணப்படுகின்ற வாழ்க்கை மீதான காதல், நம்பிக்கை, நேர்மை என்பன திடுக்கிட வைக்கும் அளவுக்கு வளம் சேர்ப்பதாக அமைகின்றது. வாழ்வியலையும், கருத்தியலையும் இணைத்து சிறப்பாக வெளிவந்துள்ள கதைகள் என்ற வகையில் தமிழ் சிறுகதை பரிமாணத்தில் இத் தொகுப்பு முக்கியத்துவம் பெற்றதாக உள்ளது.

## நேர்கோட்டுப் பரப்பளவே எனக்குள்ளும் துயர்

அழுத விழிகள் தான் இரண்டும்
ஆழமான பள்ளத்தாக்கைப்போல்
உன்னெல்லாத் துயர்களையும் எதிரொலித்தது

ஒரு கைப்பிடிக்குள் இறுகிய காலங்களினை
வர்ணங்கள் அழிந்த ஒரு வண்ணத்துப் பூச்சியாய்
காணமறுக்கிறது மனம்
காலத்தின் சிறியதொரு கேள்விக்கு
எத்தனையோ பதில்களை சொல்லி முடித்தாயிற்று
பிழையாய்.
நேர்கோட்டுக்குள்ள பரப்பளவே எனக்குள்ளும் கவிதை
ஒவ்வொருத்தரும் கேட்க
நான் எதைச் சொல்ல
தூண்டில் புழுவாய்க் குத்தி வாழ்க்கைக்குள்
வீசிற்று காலம்
விரிந்து செல்லும் பாலைவன வெறும் வெளியில்
எத்தனை முறை மழையாய் விழுந்தேன்
என் குடிசைக்குள் ஒழுகும் மழையோடு
எத்தனைமுறை கரைந்தேன்.

எறும்பின் அழகிய தொடர் நடையாய்
இதயத்தின் மொழியை வார்த்தையில்
அடுக்கினேன் ஒரு நேர்கோடாய்
வர்ணமற்றுப் பிறந்தது கவிதை

இனி எப்போதுமே
''ஒரு கைப்பிடிக்குள் இறுகிய காலங்களினை
வர்ணங்கள் அழிந்த ஒரு வண்ணத்துப் பூச்சியாய்
காண மறுக்கிறது மனம்''

மஜீத்

நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர் 149வது இழில் ''விளங்கிக் கொள்ளப்பட்டவையும், புரிந்து கொள்ளப்படாதவைகளும்'' கட்டுரை தொடர்பான சில ஐயங்களை இப் பத்தியில் எழுப்பலாமென நினைக் கின்றேன்.

''சொல்வதைத் தவிர வேறு வழி யில்லை'' என்ற மகுடத்தில் மு.கா. வினதும், அதன் தலைவரினதும் தில்லு முல்லுகளை, துரோகங்களை விமர்சித்து வந்த அபூநிதால் அவர்கள் தென்கிழக்கு அலகையும், அதன் சிருஷ்டிகர்த்தா அஷ்ரஃப் அவர்க ளையும் கரிசனையுடன், ஆதரித்து எழுவது - வியப்பாக உள்ளது.

மேற்படி கட்டுரையில், 'ஆதியும் நானே, அந்தமும் நானே' என்பது கிறார். (அஷ்ரஃப் அவர்களுக்கு நல்லதொரு ''கோயபல்ஸ்'' கிடைத்து விட்டார்.)

அவ்வாறாயின், தென் கிழக்கு அலகை நியாயப்படுத்தி மு.காங்கிரஸ் எழுதி யும், பேசியும் வருகிறே! இந்தக் குழந்தை எனக்குப் பிறந்தது, என்ற மலடியின் வாதங்களைப் போலல் லவா இருக்கிறது அபூநிதாலின் கண்டுபிடிப்பு. அவர்கள் கேட்பது முஸ்லிம் மாகாண சபையெனில் தென் கிழக்குக்காக வக்காலத்து வாங்கு வதேன். அதற்கான மோதல்களும் - வாதப் பிரதிவாதங்களும் தேவை யில்லைத் தானே! இந்த உண்மை அபூநிதாலுக்குப் புரியவில்லையா?

அச்சப்படுகின்றனர் எனக் கேட்டு விட்டு அதற்கொரு புத்திசாலித்த னமான, பதிலையும் எழுதியிருக் கின்றார். அடிப்படையில் தென் கிழக் கானது மு.காவினால் முன்வைக்கப் படவில்லையெனில் - இந்தக்கேள் வியும், பதிலும் அபத்தமானது. தவிர, தென் கிழக்கு வெளியே உள்ள முஸ்லிம்களுக்கு அலகு பற்றித் தெளிவு படுத்தவில்லை. அவ்வாறு பிரச்சாரப்படுத்தாதது மு.காவின் தவறுதான் எனப் பிள்ளையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டி விடுகின்றார்.

அபூநிதால் என்ற முகமூடி மனிதர் மீதோ, அவர் பூஜிக்கும் மு.கா. மீதோ எமக்கொன்றும் தனிப்பட்ட காழ்ப் புணர்ச்சி கிடையாது. தன் சுயநல

# தென் கிழக்கு: என்னதான் உண்மையோ?

போல் அபூநிதால் அவர்களால் தயாரிக்கப்பட்ட கேள்விகளும் - அவராலேயே புரிந்துகொள்ளப்படாத பதில்களும், எம்மை அவர் மேல் கழிவிரக்கம்கொள்ளச்செய்கிறது. அவரின் அரசியல் தத்துவங்கள் தொடர்பாகப் பின்வரும் கேள்விகள் தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

1.தென் கிழக்குப் பிராந்திய அலகு 1995 ஒகஸ்டில் சந்திரிகா அரசாங் கத்தால் முன் வைக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களையும், நிலங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கென சிங்கள வர்களின், நலன்களிலிருந்து முன் வைக்கப்பட்ட ஒரு யோசனை எனக் கண்டுபிடித்திருக்கும் அபூநிதால், மு.காவின் அடிப்படைக் கோரிக்கை ஒரு முஸ்லிம் மாகாணம்தான் என ஒன்றுக்கொன்று முரண்பட்டு எழுதுகிறார்.

சிங்களவரின் நலன்களைப் பாதுகாப் பதற்கெனச் சந்திரிகாவினால் முன் வைக்கப்பட்ட தென் கிழக்கைப் பிற மாவட்ட முஸ்லிம்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்து, அஷ்ரஃப் ஏற்றுக் கொண்டாரா?

தென் கிழக்கு மாகாண சபையானது; தனது அடிப்படை விடுதலைப் போராட்டத்திற்கும், பிற மாவட் டத்தில் வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கும் எதிரானது, என்பதை அவர் ஏன் அன்று சுட்டிக் காட்டவில்லை. அவர் இன்று அதை அங்கீகரித்துப் பிரச்சாரப்படுத்தி வருவதன் நோக்கம் யாது?

திருமறை குர்ஆனையும், நபி வழியை யும் தனது அரசியல் யாப்பாகக் கொண்டியங்கும் ஒரு தனித்துவத் தலைவருக்கு இம்மா பெரிய வரலாற் றுத் துரோகம் துலங்காததன் மர்மம் தான் என்ன? அல்லது தான் வாழும் மாவட்ட ஆட்சி கிடைத்து விட்ட, திருப்தியில் சந்திரிகாவின் - யாசகத் தில் சோரம் போனாரா? இதுவும் அபூநிதால் அவர்களால் விளங்கிக் கொள்ளப்படாததா? அல்லது புரிந்து கொள்ளப்படாததா?

2. இக்கோரிக்கை முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அரசி யல் இயக்கத்தினால் முன்வைக் கப்பட்டதா என்ற கேள்விக்கு இது மு.காவினால் முன்வைக்கப்பட வில்லை எனவும், அவர்கள் முஸ்லிம் மாகாணத்தைத்தான் இன்றும் கூட முன்வைத்து வருகிறார்கள் என்றும் - மொட்டைத் தலைக்கும் முழங் காலுக்கும் முடிச்சுப் போட்டுப் பார்க்

3. தென்கிழக்கு, சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்டதென்றால்,அந்த அரசின் கொள்கைகளை அரசாங்க அமைச்சர்களும், ஏற்றுக் கொண்டு, ஆதரித்து, அதைச் செய்படுத்த முன் னின்று உழைக்கவும் வேண்டும். ஆனால், நிலைமையோ படுமோச மாக உள்ளது.

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த அமைச்சர் தென் கிழக்கு அலகைக் கடுமையாகச் சாடி வருவதுடன், பகிரங்கமாகுக் இதைக் கண்டித்தும் வருகிறாரே!

அவ்வாறாயின், அமைச்சர் பௌசி அவர்கள் பொ.ஐ.முவின் அரசியல் திட்டத்தை எதிர்க்கின்றார். சந்திரிகா வினால் முன்வைக்கப்பட்ட இது, அமைச்சரவையில் அங்கீகரிக்கப் படாத ஒரு ராஜ்யம். அபூநிதாலின் புதிய கண்டுபிடிப்பின்படி இப்படித் தான் அர்த்தம் கொள்ள வேண்டும்.

''முஸ்லிம் மாகாண சபைதான் எமது இலக்கு'' என்றால், அந்த இலட்சி யத்திற்கு முரணான தென் கிழக்காக முஸ்லிம் காங்கிரசால் ஏன் சண்டை போட்டுக் கொள்கிறது, அறிக்கை விடுகிறது என்பதை அபூநிதால் அவர்கள் தெளிவுபடுத்துவாரா?

4. அதிகாரங்களை உறுதி செய்ய வேண்டிய யதார்த்த நிலவரம் காரணமாக, தென் கிழக்கு யோசனை இன்றைய சூழலின் நிர்ப்பந்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம்.

இன்றைய சூழலின் நிர்ப்பந்தம் குறித்துக் கரிசனை கொள்ள மு.காவுக்கு அருகதை இருக்கிறதா? தான் உரிமை கோரும் குறு நிலத்தில் வாழும் பிரஜைகளின் அபிலாஷை களைக்கூட, நிறைவேற்றிக் கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை அவர்களுடையது. குறு நிலத்தை வைத்துக் கொண்டு பிறமாவட்ட முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடப் போகிறேன் என்பது, பூச் சுற்றல் தவிர வேறொன்றுமில்லை.

பொன்னன்வெளி பறிபோன போதும், ஹஜ் பெருநாளில் அரசு கைவைத்த போதும், இன்னும் பிற முஸ்லிம் சமூகத்திற்கெதிரான அச்சுறுத்தல் வந்தபோதெல்லாம், அரசின் முன் கைக்கட்டி, வாய்பொத்தி நின்ற மு.காங்கிரஸ், குறு நிலத்தில் இருந்து கொண்டு இழந்த உரிமைகளை மீட்டெடுக்கப் போகிறதாம். அபூ நிதால் யாருக்குச் சரடு விடுகிறார்.

5. தென் கிழக்குத் தொடர்பாகத் தென் கிழக்கு வெளியே உள்ள முஸ்லிம்கள்

அரசியல் விளையாட்டுக்களுக்கு, முழு முஸ்லிம் சமூகத்தையும் பகடை காய்களாக வைத்து விளையாடக் கூடாது என்பதுதான் எமது ஆதங்கம். முஸ்லிம்களின் உரிமைகளை வென் றெடுக்கப்போவதாக, எழுச்சி கொண் டெழுந்த மு. காங்கிரஸ், இன்று சந்தர்ப் பவாத அரசியல் நடத்துவதைத்தான் நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

அபூநிதாலின் இரு முகங்களையும் சரிநிகர் இனங்காட்டியது நல்ல விடயம்தான். சந்தர்ப்பவாதிகளின் கண்ணாடியாகவும், சமயத்தில் மாறச் சரிநிகர் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

மேலும், அபூநிதால் தூக்கிப் பிடிக்கும் தென் கிழக்கு அலகு தொடர்பாக மு.காங்கிரசோ ஒட்டு மொத்த உறுதி யுடன் காணப்படவில்லை. இறுதியாக நடந்த மு.காவின் பேராளர் மகா நாட்டில், அஷ்ரஃப் அவர்களே தடம் புரண்டு போகிறார். தென் கிழக்கு அலகானது, தென் கிழக்கு வெளியே வாழும் மக்களுக்குப் பாதமாக அமையப்போவது உறுதியானால், அதனைக் கைவிடத் தயார் என்று கூறியுள்ளார்.

ஆக, இது அமுலுக்கு வந்தால் - தென் கிழக்கு வெளியே வாழும் முஸ்லிம் களின் நிலை சிக்கல்களுக்கு உள்ளா கும் என்பது வெளிப்படை. குழப்பங் களும், தெளிவற்ற கொள்கையும் நிறைந்த இவ் அலகை, அபூநிதால் போன்றோர் ஏன் தூக்கிப் பிடிக்கிறார் கள் என்பதுதான் புரியவில்லை. அபூநிதாலிடம் - இன்னும் நாம் விளங்கிக் கொள்ளப்படாதவையும், புரிந்து கொள்ளவேண்டியதும் அதிகம் உண்டு.

**ஒட்டமாவடி அறபாத்**

இதழ் 150, பக்கம் 18ல்
*வனத்தின் அழைப்பு*
நூல் மதிப்பீட்டில் 3வது கலத்தின்
கடைசிப் பந்தியில் உள்ள
*புரியமான* என்பதை *பிரியமான*
எனவும்,
*காண்டவன* என்பதைக்
*காண்டாவன* எனவும்,
நான்காவது கலத்தின்
கடைசிப் பந்தியில்
*சோர்ந்ததும்* என்பதை *சோர்ந்தும்*
எனவும் திருத்தி வாசிக்கவும்.
இத்தவறுகளினால் வாசகர்களுக்கு
ஏற்பட்ட அசௌகரியத்திற்கு
வருந்துகிறோம்.

(ஆர்)

## - பெண்களுக்கெதிரான பாலியல் இம்சைகள் -



நீ என் எஜமானா ? மிருகமா ?



போக விடுங்கள் என்னை !
நான் படிக்கப் போக வேணும்



கேடு கெட்ட ஜென்மம்.
மானம். மரியாதை உனக்கில்லையா ?



பேய்களுக்கிடையில்
அகப்பட்ட அபலை




கீழ்த்தரம். கேவலம் !

பெண்களுக்கு எதிரான
பாலியல் இம்சைகள்குறித்து,
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
வெளியிட்டுள்ள சுவரொட்டிகள் இவை.

நன்றி - நூலகத்திட்டம்





# யார் இந்த சங்கமன் ?

சிறப்பான முதலாளித்துவ வியாபாரப் பத்திரிகை ஆகி வருகிறது சரிநிகர். இந்தக் கடுமையான சொல்லை நான் கவனமாகத் தான் பயன்படுத்துகிறேன். பக்கங்களைப் புரட்டுகிற போது, இன்னும் மோசமான செய்தி என்ன தந்திருக்கிறீர்கள் எனும் அச்சத்துடன் தான் புரட்டுகின்றேன். ''போராட்டம்; இடைவிடாத போராட்டம் சகல திரிபுவாதங்கட்கு எதிராகவும்'' இத்தகைய பாசறையில் இருந்து வந்தவர்கள், அத்தகைய நிலைப்பாடு தான் எடுக்க வேண்டும். அடிப்படை போராட்ட உணர்வை, அநியாயத்துக்கு எதிரான குரலையாவது எடுத்திருக்கலாம். இன்னமும் நம்பிக்கை போகவில்லை. அதனால் எழுதுகிறேன். தங்கத்துரை கொலையைக் கண்டிக்கிறீர்கள். சரோஜினி யோகேஸ்வரனின் கொலையைக் கண்டிக்கிறீர்கள். இதெல்லாம் என்ன? சரோஜினி தமிழ் மக்களுக்கு நன்மை செய்யப் புறப்பட்டவர் என்கிற மாதிரி எழுதுகிறீர்கள். முன்னரும் லலித் கொலையை, சிங்களக் குடியேற்றப் பிக்குவின் கொலையைக் கண்டித்த போது நான் எதிர்த்தேன். கொலை அரசியல் தீர்வல்ல என்று சும்மா சொல்லாதீர்கள். இந்தக்கொலைகள் முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல. ஆனால், அதற்காகக் கண்டிக்க வேண்டினவல்ல. விமர்சனபூர்வமாக அணுகலாம். நல்லதொரு சொல் உங்களுக்குக் கிடைத்திருகிறது. கண்டிக்கிறோம். உண்மையில் கண்டிக்க வேண்டிய விடயங்களுக்கும் இவ்வாறு நீங்கள் எழுதும் போது அது தன் முழு அர்த்தத்தையும் இழக்கப்போகிறது. கவனம். உலகில் எங்காவது ஒரு புரட்சி நடந்தால், அதுவரை அதே நாட்டின் அரசுத்தலைவராக இருந்தவர் கொல்லப்பட்டால், கண்டிக்கிறோம் என்று எழுதுவீர்கள். கவனம், பில்கிளின்டனிற்கும், உங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போகப்போகிறது.

மற்றைய விடயம், சங்கமன் பற்றியது. யார் இவர்? ஆரம்பத்திலும் படுபிற்போக்குத்தனமான கருத்துக்களைத் தந்தார். கருத்துச்சுதந்திரம் என்கிற அளவில் அதைப்பார்த்தோம். ஆனால், அடிமடியிலை கை வைக்கிற கதையாக மிகமோசமான கருத்துக்களைத் தருகிறார். ஆரம்பத்தில் கார்ல் மார்க்ஸைக் கொச்சைப்படுத்தி மிக அவதூறாக எழுதியிருந்தார். கார்ல் மார்க்ஸ் எங்களுக்குக் கடவுள் அல்ல. ஒரு தத்துவமேதை. அவ்வளவுதான். கார்ல் மார்க்ஸும் தவறு விடச் சந்தர்ப்பம் இருந்திருக்கலாம். முக்கியமான தத்துவத்தைத் தந்தார் என்பதற்காக அவர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவரல்லர். ஆனால், சங்கமன் தொடர்ந்து அலசிக்கொண்டு போவதைப்பார்க்கிறபோது சங்கமன் எந்த இடத்தில் நிற்கிறார், அவரது வர்க்க நோக்கு எது என்பதை எங்களால் புரிய முடிகிறது. இப்போது அவர் தன் 'உள்ளொளியால் 'மெய்யுள்' தேடப்புறப்பட்டு விட்டார். சரி, அது சங்கமனின் பிரச்சினை. அவரது கருத்துச் சுதந்திரம். ஆனால், சங்கமனின் படுபிற்போக்குத்தனமான நச்சுத்தனமான கருத்துக்களுக்கு சரிநிகரும் பாய் விரிக்க முற்படுவது எதனைக் காட்டுகிறது? ஒருபுறம் பெண்ணியத்தைக் கறாராக முன் வைக்கிற சரிநிகர் மறுபுறத்தில் சங்கமனின் வாயால் விபச்சாரத்தை வலியுறுத்துவது எங்ஙனம்?சரிநிகர் எப்போது இரட்டை வேடம் போடத் தொடங்கியிருக்கிறது? ஆன்மீகம் சம்பந்தமாகச் சரிநிகர் கதைத்திருந்தால் அதனைப் புரிந்து கொள்ள முடியும்? ஆனால், போலிகள் பற்றியெல்லாம் சரிநிகர் எப்போது எழுதத் தொடங்கியது?

போகிற போக்கில் சாய்பாபாவின் அவதார மகிமை பற்றி சங்கமன் அலசுவார். நீங்கள் பத்திரிகைச் சுதந்திரம் என்று கூறிவிட்டுப்பிரசுரிப்பீர்கள்... நீங்கள்.. எனக்கு கடும் வார்த்தைகள் வருகின்றன. உரிமையுடன் தான் இதனைக் கூறுகிறேன். இடம்கொடுத்தால் மடம்பிடிக்கிற இத்தகைய நிறுவனங்களை எங்களுக்குத் தெரியும். ''சும்மா இரு'' எப்பவோ முடிந்தகாரியம். இதுவெல்லாம் முன்னரும் பலர் சொல்லித் திரிந்தது தான். இப்போது சரிநிகரும் சொல்லப்புறப்பட்டிருக்கிறது. நச்சுத்தனமான கருத்துக்களை விதைக்கச் சரிநிகர் பயன்படுகிறது. அதுதான் என் வேதனை.

சிறுகதைகள் மிகச்சிறப்பாக உள்ளன. மூன்றாவது இனம் (ஆப்ரான்) வேட்டை (ஒட்டமாவடி அறபாத்) என்பன நல்ல கதைகள். நெஞ்சைத் தொட்ட , சுட்ட கதைகள். தேவ அபிராவின் வனத்தைத்தேடி சிறப்பு வாய்ந்த கவிதை. ந.செ.வின் எழுத்து செ.யோவுடன் மாத்திரம் நின்றிருக்கக் கூடாது. இன்னும் பொதுமைப்படுத்தியிருக்கலாம். செ.யோ. அம்பலப்பட்டால் மற்றைய அனைவரும் சரி என்கிற மாதிரி வந்து விடும்.

*அ. இரவி.*

# வன்னி மக்களுக்கு மத்தள அடி !

உரலுக்கு ஒரு பக்கம் இடி, ஆனால், மத்தளத்திற்கு இரு பக்கம் இடி. இந்த நிலையில்தான் இன்றைய இலங்கைத் தமிழரின் நிலை. புளொட் உறுப்பினர் அலவாங்கு தாசனின் மரணம் தொடர்பாக சுமார் 26 பொதுமக்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாத நிலையில் வவுனியாவில் சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் பொறுப்பானவர்கள் கையை விரிக்கின்றனர்.

புளொட் இயக்கத்தின் வவுனியாப் பொறுப்பாளர் நாகலிங்கம் மாணிக்க தாசன் ''தாங்கள் அலவாங்கு தாசனின் மரணம் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஆக மூன்றே மூன்று பேரை தங்கள் முகாமில் தடுத்து வைத்திருப்பதாக'' 1998.07.02. பி.பி.சி சிங்கள ஒலிபரப்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ளார்.

மேலும், வவுனியாவில் சிவில் நிர்வாகம் சரியாக இயங்குவதில்லை என்றும், பொலிசார் இப்படியான பிரச்சினைகளில் தலைபோட அஞ்சுகிறார்கள் என்றும் கூறி இருந்தார். அத்துடன் அவர்கள் ''தண்டனை இடமாற்றத்தில், அங்கு கடமை புரிவதாகவும், மேற்படி சம்பவம் நீதிமன்றத்திற்கு சென்றால் வீணாக அலையவேண்டுமென்பதற்காக இப்படியான விசயங்களில் பொலிசார் தலையிடுவதில்லை என்றும் கூறினார்.

அப்படிப் பார்க்குமிடத்து சட்டத்தையும், ஒழுங்கையும் பலவந்தமாக புளொட்இயக்கம் கையில் எடுத்துள்ளதாகத் தெரிகிறது. இலங்கையின் அரசியலமைப்பில் நீதித்துறையை வேண்டியவர்கள் கையாளலாம் என்று குறிப்பிடப்படவில்லை.

இதே விடயத்தை 1998.07.13 பி.பி.சி. சிங்களப்பிரிவில் அமைச்சர் ஜெயராஜ் பர்னாந்து பிள்ளையிடம் கேட்டபோது, ''வவுனியாவில் சிவில் நிர்வாகம் நடக்கின்றது; யார் அப்படிச் சொன்னது எனக்கு இந்த மூன்று பேரைத் தடுத்துவைத்த விடயம் தெரியாது. எதற்கும் விசாரித்துப் பார்க்கிறேன்'' என்று அவர் கூறி இருந்தார்.

''மேலும், இன்றைய பொது எதிரி புலிகள் என்றும், அவர்களைத் தோற்கடிப்பதற்காகவே அரசாங்கம், புளொட், ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக்களோடு சேர்ந்து செயல்படுகின்றதெனவும்'', அவர் கூறியிருந்தார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து ஒரு பொறுப்புவாய்ந்த அமைச்சருக்குக் கூட அலவாங்குதாசனின் மரணம் தொடர்பாக வவுனியாவில் நடந்த சம்பவங்கள் தெரியவில்லை. மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாண மாணவி கிருஷாந்தியின் விடயத்தைக் கிளறியதால் பல மர்மங்கள் இன்று வெளிக்கிளம்பி, தமிழர்களுக்கு ஏற்படும் இன்னல்களை உலகளாவிய வகையில் இன்று சகலருக்கும் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் சிங்கள அரசினால் மாத்திரமல்ல, தமது இனத்தினராலும் இம்சிக்கப்படுகிறார்கள் என்பதற்கு வவுனியா சம்பவம் ஓர் எடுத்துக் காட்டாகும். எல்லோரும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டால் நாட்டின் நீதிபரிபாலனம் என்னவாகிறது. குற்றவாளியைக் காட்டிக்கொடுக்கும் பொறுப்பு யாருக்கும் உண்டு. ஆனால், குற்றவாளியை கண்டிக்கும், அல்லது தண்டிக்கும் பொறுப்பு நீதித்துறைக்கு மாத்திரமே உண்டு.

*துட்டகைமுனு*

16→

# பொதெம்கின்...

போராடினார்கள். அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட ஜார் அரசனால், தோல்வியுற்ற முதல் ரசியப் புரட்சியைப் போலவே பொதெம்கினும் வீழ்ந்தது. வீரர்களும், மாலுமிகளும் கொல்லப்பட்டனர். இதைக் கருவாகக் கொண்டு ரசிய திரைப்பட இயக்குநர் ஐசன்ஸ்டின் 1926இல் 'போர்க்கப்பல் பொதெம்கின்' என்ற கருப்பு - வெள்ளை மௌனத்திரைப்படத்தை (பின்னணி இசையுடன்) வெளியிடுகிறார்.

திரைக்கதை; வறண்டு போன கப்பற்படை வாழ்க்கையில் ஒடுங்கிய முகங்களுடன் மாலுமிகள், வீரர்கள். பரிமாறப்படும் இறைச்சியில் புழுக்கள் நெளிவதைக்கண்டு குமுறுகின்றனர். செய்தி பரவுகிறது கப்டனுக்கு எதிராக போரட்டம் வெடிக்கிறது. கலகம் செய்தவர்களில் வாகுலின்சுக் என்ற வீரர் மட்டும் கொல்லப்படுகிறார். ஏனைய 'போர்க் குற்றவாளிகளை'ச் சுட மறுத்த வீரர்கள் புரட்சிக்காரர்களுடன் சேருகின்றனர். அதிகாரிகளுக்குத் தண்டனை தரப்பட்டு, கப்பல் கைப்பற்றப்படுகிறது. செங்கொடி உயர ஒடேசா என்ற நகரத்தை நோக்கிப் பயணிக்கிறது பொதெம்கின்.

நகரத்து மக்களிடம் புரட்சியைப் பரவ விடுகிறார்கள் கப்பலின் வீரர்கள். பொதெம்கினுக்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் மக்களை ஜாரின் இராணுவம் சுட்டுத்தள்ளுகிறது. பின்பு நகரத்திலிருந்து வெளியேறும் புரட்சிக் கப்பலை அழிக்குமாறு ஜார் உத்தரவிடுகிறான். பிரம்மாண்டமான போர்க் கப்பல்கள் பொதெம்கினைச் சுற்றி வளைத்துச் சுடுவதற்காகத் தங்கள் பீரங்கிகளை உயர்த்துகின்றன. ''சகோதரர்களே சுடாதீர்கள்'' என்று செய்தி அனுப்புகிறது புரட்சிக் கப்பல். சில வினாடிகள், சில தயக்கங்களுக்குப் பிறகு உயர்ந்த பீரங்கிகள் இறங்குகின்றன. முற்றுகையிட்ட போர்க் கப்பல்கள் வழிவிட ஒரு நடுநிலைமைத் துறைமுகத்தை நோக்கி பயணிக்கிறது பொதெம்கின். படம் முடிகிறது.

ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சிப் பெருக்கு முடியவில்லை. 'சுடாதீர்கள்' என்று பொதெம்கின் மட்டும் செய்தி அனுபவில்லை. பார்வையாளர்களும் உரக்கக்குரல் எழுப்புகிறார்கள். சிலர் பிரார்த்தனை செய்கிறார்கள். பலர் அழுகிறார்கள். புரட்சிக் கப்பல் தப்பிய காட்சியுடன் மகிழ்ச்சி கலந்த துயரப்பெருக்குடன் கலைகிறார்கள் ரசிகர்கள். அன்றைய ஐரோப்பிய நகரங்களில் பொதெம்கின் திரையிடப்பட்ட அரங்குகளிலெல்லாம் இதே காட்சிதான். ஏனைய படங்கள் ஈயடித்துக்கொண்டிருந்த போது மீண்டும் மீண்டும் ரசிகர்கள் பொதெம்கின் திரையரங்க வாசலில் குழுமினார்கள். ஆம். ''இந்த உலகம் முழுவதும் எதற்காகக் காத்திருந்ததோ அதைப் பார்க்கப் போவதைப் போன்ற உணர்ச்சிப் பெருக்குடன் மக்கள் இருந்தனர்.''

அத்தகைய ஆதரவைக்கண்டு அஞ்சிய அன்றைய பாசிச ஆட்சியாளர்கள் பல சதிகளில் ஈடுபட்டு மக்கள் பார்வையைத் திருப்ப நினைத்தனர். படத்தின் பின்னணி இசையை எடுத்தனர்; படத்தினைக் கண்டபடி வெட்டி ஒழுங்கற்ற முறையில் தொகுத்துக் காட்டினர்; ஒழுங்கற்ற முறையில் இன்னும் பல செய்து பார்த்தாலும் மக்கள் வெள்ளம் குறையவில்லை. ஹிட்லரின் மந்திரி கோயபெல்ஸ் இதே மாதிரி ஒரு படமெடுக்கத் தனது கலைஞர்களுக்கு ஆணையிட்டான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தின் பொ தெம்கின் தனது முத்திரையை ஆழமாகவே பதித்துச் சென்றது.

✱

டைட்டானிக்கின் வரலாறு இயற்கையினாலும் நாகரீக சமூகத்தினாலும் 1500 பேர் கொல்லப்பட்ட ஒரு விபத்து. பொதெம்கின், சுரண்டலமைப்பை மாற்றத்துடித்த ஒரு புரட்சியின் குறியீடு. விபத்து என்ற உண்மையில், ஆதி கால அம்பிகாபதி - அமராவதி காதல் கதையைக் கலந்தது இயக்குநர் காமரூனின் கற்பனை. தோல்வியுற்ற பொதெம்கின் கலகம் என்ற உண்மையில், எதிர்காலப் புரட்சியின் வெற்றியைக் கலந்தது இயக்குநர் ஐசன்ஸ்டினின் கற்பனை.ரோஸ், ஜக் என்ற அழகான காதலர்கள் தான் டைட்டானிக்கின் பாத்திரங்கள். உழைத்து ஒடுங்கிய முகங்களைக் கொண்ட வீரர்களும், கொடுமை கண்டு கோபம் கொண்ட மக்களும்தான் பொதெம்கினில் வந்தார்கள்.

நூற்றுக்கணக்கான தொழிநுட்பக் கலைஞர்களும், செலவழிப்பதற்கு பெரும் நிறுவனங்களும் கமரூனுக்கு இருந்தார்கள். கப்பலில் உயரும் செங்கொடி மட்டும் சிவப்பில் வர எல்லா மூல பிரதிகளிலும் தானே வண்ணம் சேர்த்தார் ஐஸன்ஸ்டின். டைட்டானிக்கின் விபத்தை அழகுபடுத்த சிறப்பு ஒலி, ஒளி கணிப்பொறி வரைகலை, திரையரங்க சிறப்பு உபகரணங்கள் இருந்தன. பொதெம்கினின் கரடு முரடான கலகத்தை கருப்பு - வெள்ளை உரையாடல் இல்லாத இசையும் கம்பீரமாகக கொண்டு வந்தது.

டைட்டானிக்கின் புகழ்பாட உலகெங்கும் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இருக்கின்றன. பொதெம்கினைத் தடைசெய்வதற்கு ஐரோப்பிய ஆட்சியாளர்களும், அவதூறு செய்ய பத்திரிகைகளும் முயன்றன . டைட்டானிக்கின் தொழிநுட்ப பிரமிப்பிலும் காதலின் மயக்கத்திலும் கட்டுண்டு மௌனமாக கனவு கண்டார்கள் ரசிகர்கள். படத்தின் தேவையான வசனங்களை தானே பேசி, புரட்சியின் எழுச்சியை அரங்கினுள் கொண்டு வந்தார்கள் பொதெம்கின் ரசிகர்கள். டைட்டானிக்கின் பிரம்மாண்டம் திரைக்குள் மட்டும் இருந்தது. பொதெம்கினின் பிரம்மாண்டம் திரைக்கு வெளியே வாழ்க்கையில் இருக்கிறது. டைட்டானிக்கின் சாதனை அதன் செலவு மதிப்பீட்டில். பொதெம்கினின் சாதனை நமது வாழ்க்கையை மதிப்பிட்டதில்.

டைட்டானிக்கினால் அடித்துச் செல்லப்பட்ட ரசிகர்கள் வாழ்க்கைக் கரையேறுவதற்கு 'போர்க் கப்பல் பொதெம்கினை'ப் பார்க்க வேண்டும், ஒரு முறையாவது.

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.

தொலை மடல் : 594229.


## பிழைப்பு அரசியல்!

சார்க் மாநாட்டு சலசலப்பு ஓய்ந்து விட்டது. மூடப்பட்ட வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டுவிட்டன. கொழும்பு மாநகரம் மீண்டும் வழமைக்குத் திரும்பி விட்டது.

ஆயினும் மாநாட்டை ஒட்டி நடந்த பல சம்பவங்களின் வடுக்கள் இன்னமும் தீரவில்லை. கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமிருந்தும் அள்ளிக் கொண்டு போய் அடைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் இன்னமும் பொலிஸ் நிலையங்களின் கூடுகளுக்குள்ளேயே இருக்கின்றனர். அவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பதை யாரும் எதிர்வு கூறி விட முடியாது.

வீதிகளை மூடி, பாடசாலைகட்கும் அலுவலகங்கட்கும் விடுமுறை வழங்கி அகப்பட்டவர்கள் அனைவரையும் பொலிஸ் நிலையக் கம்பிக் கூடுகளுக்குள் திணித்து கிட்டத்தட்ட ஒரு ஊரடங்குச் சட்ட நிலையை உருவாக்கிவிட்டு சார்க் நாடகம் நடந்து முடிந்திருக்கிறது.

சார்க் நாடுகளின் தலைவர்கள் முகத்தில் புன்னகை மலர இந்து சமுத்திரத்திற்கு முதுகைக் காட்டியபடி பெந்தோட்டைக் கடற்கரையில் நின்று எடுத்த படங்கள் பத்திரிகைகளில் வெளியாகின.

வந்தவர்கள் எல்லோருமாக சார்க் தலைவியாக நியமிக்கப்பட்ட நமது ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு வாழ்த்துப்பாடி விட்டு விடைபெற்றுச் சென்று விட்டனர்.

சார்க் நாடுகளின் ஒன்றியத்தின் கடந்தகால சாதனைகள் என்ன, அவை இனிச் செய்யப்போகும் சாதனைகள் என்ன என்ற கேள்விகளை யாரும் கேட்டதாகத் தெரியவில்லை. பரஸ்பரம் தலைவர்கள் ஒருவருக்கு ஒருவர் முதுகு சொறிந்ததைத் தவிர உருப்படியாக எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

இந்த நாடுகளின் பத்தாவது மாநாடு இது. இந்தப் பத்தாண்டுகளில் இவை சாதித்ததெல்லாம் என்ன என்பதை யாரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

குறைந்தபட்சம் திறந்த வியாபாரக் கொள்கை, நாடுகளுக்கிடையிலான பயணங்களுக்கு கடவுச் சீட்டு இல்லாமை போன்ற அற்ப விடயங்களைக் கூட இவ்வைகளால் சாதிக்க முடியவில்லை.

சாதிக்காவிட்டாலும் பரவாயில்லை. அதைப்பற்றி பேசக் கூட இல்லை. பதிலாக இங்கு மாநாடு நடந்து கொண்டிருக்கையில் பாகிஸ்தான் இந்திய காஸ்மீர் எல்லையில் தாக்குதல் நடந்து கொண்டிருக்கின்றன. நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் வீழ்ச்சி வீதம் சொல்லுந்தரமற்று அதிகரித்துள்ளது. பயங்கரவாதத்தை எதிர்ப்பதையும் சமாதானத்தை நிலைநாட்டுவதையும் பற்றி ஒவ்வொரு மாநாட்டிலும் உரத்துக் குரலெழுப்பிய தலைவர்களின் நடைமுறைகளோ அணுவாயுதந் தயாரிப்பதிலும், ஜனநாயகப் படுகொலை நிகழ்த்தலிலுமே குவிந்திருக்கின்றன.

பாகிஸ்தான் தனக்கு மாபெரும் அச்சுறுத்தலாக இருந்து வருவதே தனது அணுக்குண்டுத் தயாரிப்புக்கு ஒரு முக்கிய காரணம் என்று இந்தியா கூறியதும் அதே வார்த்தைகளை பாகிஸ்தான் திருப்பிச் சொன்னதும் புதிய விடயங்கள் அல்ல.

சார்க் நாட்டுத் தலைவர்களது அரசியல் உறுதியின்மையாலும் அரசியல் சூழ்நிலைகளாலும் நாடுகட்கிடையிலான ஒத்துழைப்பு என்பது பல தடவைகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுகின்றார்கள் அரசியல் விமர்சகர்கள்.

இந்த நாடுகளின் வறுமை, மனித உரிமை மறுப்பு, சுற்றுச் சூழல் அழிவு என்பன மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளன.

இவைகளை மீளமைப்பதற்கான கூட்டு ஒத்துழைப்பு என்பதெல்லாம் வெறும் பேச்சளவிலான ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

ஒவ்வொரு நாடுகளுக்குள்ளும் நடக்கும் விடயங்களில், குறிப்பாக அரசியல் விடயங்களில் மற்ற நாடு தலையிடுவதில்லை என்ற ஒரருவிடயத்தில் மட்டும் அவர்கள் ஒத்துப் போயிருக்கின்றார்கள். அதுவும் மனித உரிமை மீறல்கள், அப்பாவிக்குடி மக்கள் மீதான தாக்குதல்கள் , பட்டினியிடல், மருத்துவ வசதிகள் போன்ற விடயங்கள் வெறும் உள்நாட்டு விடயங்கள் என்று தட்டிக் கழித்துவிடக் கூடியவை அல்ல. இவை சர்வதேச சட்டப்படியும் ஐ.நா உறுப்புரைகளின்படியும் குற்றங்களாகக் கொள்ளப்படுபவை ஆகும். போர்க்காலத்தில் யுத்தத்தில் சம்பந்தப்படாத பொது மக்கள் குறிப்பாக சிறுவர்கள் பாதிக்கப்படும் விதத்தில் அரசியல் தாக்குதல்களை போசாக்கின்மை, பட்டினி-வறுமை போன்றவற்றை உருவாக்கும் தாக்குதல்களை-நடாத்துவது யுத்தகால கடுங்குற்றங்களாகும்.

ஆயினும் இவற்றைக் கண்டுகொள்ள இந்த நாடுகளின் தலைவர்கள் யாரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

காரணம் முக்கிய மூன்று நாடுகளான இலங்கை இந்தியா மற்றும் பாகிஸ்தான் தலைவர்கள் மூவர்களது கையிலும் இரத்தக் கறை இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இங்கு வருகை தந்த இந்தியப் பிரதம மந்திரியை இங்குள்ள தமிழ் கட்சிகளும் இந்து அமைப்புகளும் படாதபாடுபட்டு சந்தித்து தமது குறையை வெளியிட்டிருக்கின்றன.

இந்தியாவின் மேலாதிக்க நிலை, என்னதான் சார்க் நாடுகளிடையேயான சமத்துவம் பற்றிப் பேசப்பட்டாலும், தெட்டத் தெளிவாகவே வெளிப்பட்டது.

தமிழ்க்கட்சிகள் மட்டுமென்ன அனைவரது கவனமும் அடேல் பிகாரி வாஜ்பாயின் மீதே குவிக்கப்பட்டிருந்தது!

ஆனாலும் அவர் இந்த விடயங்களில் அவ்வளவு அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை!

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமது குறைகளைச் சொல்லி அழுது விட்டு வந்தது.

"ஆண்டவன் தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று செல்வா சொன்னதை 'இந்தியா தான்' என்று அர்த்தப்படுத்திக் கொண்டு கடந்த பதினைந்து ஆண்டுகளாக பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கிறது அது.

தமிழ் மக்களின் உரிமைகள் தான் கண் முன்னால் ஒவ்வொன்றாக போய்க் கொண்டிருக்கின்றன.

இப்போது அவர்கள் இந்த நாட்டில் ஒரு குற்றவாளியைப் போல நடமாடவேண்டிய நிலை!

ஆயினும் சார்க் மாநாடு நடக்கிறது! இந்தியத் தலைவர்களை சந்தர்ப்பம் கிடக்கும் போதெல்லாம் மக்கள் சார்பில் வேண்டுகிறார்கள் தமிழ்த் தலைவர்கள்.

எப்படியோ, பிழைப்பு நடக்கிறது. பிழைக்க வேண்டியவர்கள் பிழைத்துக் கொள்கிறார்கள்.

பிழைக்கட்டுமே அவர்களாவது!

## வவுனியாவில் கலகம் விளைவிக்கும் கழகம்!

'உரலுக்கு ஒரு பக்கம் இடி! மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி!" என்பார்கள். "தமிழ் மக்களுக்கு எல்லாப் பக்கமும் இடி" என்று ஒரு புது மொழியை சொல்ல வேண்டிய நிலை இப்போது.

வடக்கிலே யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வந்து வவுனியா இறம்பைக் குளம் கோவில்குளம் பகுதிகளில் குடியேறியிருந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு மிரட்டியிருக்கிறது புளொட். இவ்வாறு செய்ததன் மூலம் இப்படியொரு புதுமொழியை தமிழுக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள் கழகக் கண்மணிகள்.

வாழ்க அவர்களது மொழிப்பற்று!

இறம்பைக்குளம் கோவில் குளம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 662 தமிழ்க் குடும்பங்களே இவ்வாறு வெளியேறுமாறு மிரட்டப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகிறது. வவுனியா மாவட்ட புளொட் எம்.பி. சண்முகநாதன் அவர்கள் மரத்திலே கட்டப்பட்ட கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலால் கொல்லப்பட்டார். இந்தக் கொலை நடவடிக்கை அந்தப்பகுதி மக்களது, ஆதரவில்லாமல் செய்யப்பட்டிருக்க முடியாது என்ற அனுமானத்தின் பேரிலேயே புளொட் இவர்களை வெளியேறுமாறு பணித்துள்ளது. இறம்பைக் குளத்திலுள்ள அனைத்து வீடுகளிலும் நின்ற உயரமான மரங்கள் எல்லாவற்றையும் கண்மணிகள் வெட்டிச் சரித்து விட்டார்கள். மரங்களில் புலிகளின் கிளைமோர் கண்ணி வெடிகள் கட்டப்படுவதற்கு இனி வாய்ப்பேயில்லை. ஆனால் கோவில் குளம் பகுதியில் உள்ள மக்களை அப்படி வெட்டிச் சரிக்க முடியாமல் போய்விட்டதோ என்னவோ. அவர்களை வெளியேறுமாறு விரட்டியுள்ளார்கள். இந்த வகையில் அவர்களது மனிதாபிமானம் மெச்சத்தக்கது. வாழ்க அவர்களது மனிதாபிமானம்.

வெளியேறுமாறு மிரட்டப்பட்ட இந்த மக்களின் பெரும்பாலானோர் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள். உள்ளூர் வாசிகளது வீடுகளில் வாடகைக்கு குடியிருந்தவர்கள். இவர்கள் கொடுத்த வாடகை முற்பணத்தைக் கொண்டு கோவில் குளவாசிகள் தமது நிலங்களில் வாடகை வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தார்கள். இப்போது குடியேறியவர்கள் வெளியேறுவதானால் அவர்களது வாடகை முற்பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். விவசாயிகளான கோவில்குள வாசிகளுக்கு அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை. ஏனென்றால் அவர்கள் அப்பணத்தில் தான், தமது வீடுகளைக் கட்டியிருந்தார்கள்.

புளொட் அலுவலகத்திற்கருகில் உள்ளவர்களை வெளியேற்றினால் தான் தாம் பாதுகாக்கப்படலாம் என்பதாலேயே அவர்களை வெளியேறுமாறு கேட்டதாக அதன் கொழும்பு தலைமையகச் செய்தி கூறுகிறது.

இவ்வாறு வெளியேறுமாறு பணிக்கப்பட்டவர்கள் புளொட்டைச் சந்தித்து தமது பிரச்சினைகளைக் கூறி மன்றாடிய போதும் புளொட் மசிந்ததாகத் தெரியவில்லை. கோவில்குளத்தில் அண்ணாச்சி உமா மகேஸ்வரன் சிலையின் கீழ் நடந்த கூட்டம் ஒன்றின் போது அங்கு புளொட் சார்பில் பேசிய கழகக் கண்மணி ஒருவர் 'உங்களுக்கு ஆமி அல்லது புலி சொன்னால் உடனை போயிடுவியள். நாங்கள் சொன்னால் தான் ஏலாதோ?' என்று மிரட்டியுள்ளார்.

மக்கள் யார் வேண்டுமானாலும் தாம் விரும்புகிற போக்குக்கு மிரட்டிக் கலைக்கிற மந்தைகள் தான் என்ற அபிப்பிராயம் தான் தமக்கும் இருக்கிறது என்பதை இந்தக் கண்மணி மிகவும் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அங்கு மிரட்டப்பட்ட மக்கள் வவுனியா அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்திருந்தனர். ஆனால், அவராலும் புளொட்டுடன் பேசுவதைத் தவிர வேறெதையும் செய்ய முடியவில்லை.

புளொட்டுக்கு பாதுகாப்பான இடம் தேவையென்றால், ஒரு கிராம மக்களையே விரட்டுவதை விட தனது அலுவலகத்தை வேறு பாதுகாப்பு பிரதேசத்துக்கு மாற்றியிருக்க முடியும். அல்லது மேலதிக பாதுகாப்பு தரக்கூடிய ஒரு இராணுவ முகாமுக்குப் போய்க் குடியேறியிருக்கலாம். மக்களுக்குச் சேவை செய்யத் தான் கட்சிகள் அலுவலகம் வைப்பதுண்டு. ஆனால், மக்களை விரட்டுவதற்கும் கட்சிகள் அலுவலகம் வைப்பதுண்டு என்று புது வரலாறு படைத்திருக்கிறது புளொட். மக்களை விரட்டவும், மிரட்டவும் அலுவலகம் வைப்பது ஆக்கிரமிப்பு இராணுவம் மட்டுமே. அப்படியானால், புளொட்டும் தன்னையொரு ஆக்கிரமிப்பு இராணுவம் என்று கருதுகிறதா?

மக்களது விடுதலை என்று கூறி புறப்பட்ட கழகம், விடுதலை தான் வேண்டாம் மக்களை நிம்மதியாகவாவது இருக்கவிடக் கூடாதா? புலிகளை அழிப்பதற்காக புலிகள் வாழும் பிரதேசம் என்று கருதப்படும் பிரதேசங்கள் அனைத்தின் மீதும் குண்டு மாறி பொழிவதும் அகப்பட்ட அனைவரையும் கைது செய்வதும் என்ற அரசாங்கத்தின் ஆயுதப் படைகளுக்கும் இவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசமும் இல்லையா? இவர்கள் தமிழ் பேசும் இன்னொரு சிறி லங்கா இராணுவம் தானா? இவை வவுனியா மக்கள் அதிர்ச்சியுடன் மௌனமாக கேட்கிற கேள்விகள்.

இப்போது இம்மக்களுக்கு வெளியேற ஒரு மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. (பரவாயில்லையே புலிகள் முஸ்லிம் மக்களுக்கு 24 மணி நேர அவகாசமும் இலங்கைப் படை திருமலையில் இரண்டு மணி நேர அவகாசமும் அல்லவா கொடுத்திருந்தார்கள்.)

"இந்த ஒரு மாதத்துள் வெளியேறா விட்டால் அதன் பிறகு உங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல" என்று வேறு அவர்கள் மிரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆக இம்மக்கள் இப்போது உயிரைக் கையில் பிடித்தபடி வீடு தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க புளொட்டின் விடுதலைப் பணி!




மனித உரிமைகள் நடவடிக்கைக் குழு (Human Rights Action Committee) எனும் பெயரில் ஒர அமைப்பு 4ஆம் திகதி கொள்ளுப்பட்டி குரு கெதரவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆரம்பக் கூட்டம் ஒரு மாநாடாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் உள்ளூர் வெளியூர் மனித உரிமைகள் ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் என்போருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவை ஆரம்பித்திருப்பதன் நோக்கம் குறித்து அதைச் சேர்ந்தவர்களிடம் வினவிய போது "இன்று நாட்டில் உள்ள பெருமளவு மனித உரிமைகள் இயக்கங்கள் வெறும் பெயர்ப் பலகைகளுடன், அறிக்கை வெளியிடுவதும், கண்டனம் வெளியிடுவதுமாக இருக்கின்ற துரதிருஷ்டவசமான நிலையில் சுயாதீனமான அரசு சார்பற்ற நிறுவனமல்லாத (Non NGO) ஒரு செயலூக்கமிக்க ஒரு அமைப்பு அவசியமாக இருக்கிறது. நாங்கள் செயலில் அதிகம் நம்பிக்கை வைத்து இந்த அமைப்பை உருவாக்கியுள்ளோம்...." என்றார்.

இந்த அமைப்பு இடதுசாரிப் பின்னணியுள்ள இளைஞர்களாலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோரில் பெரும்பாலானவர்கள் இடது சாரி இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. "என்.ஜீ.ஓ மனித உரிமை இயக்கங்க"ளைச் சேர்ந்தவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தும் அவர்கள் எவரும் சமூகமளிக்கவில்லை என்றும், இவ்வியக்கம் நிச்சயம் அவர்களுக்கு சவாலாகத் தான் இருக்கப் போகிறது என்றும் தெரிவித்தார் குழுவைச் சேர்ந்த ஒருவர்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளாக ஜெர்மனியிலிருந்து கலாநிதி ஆரான்ட் ஹிந்ரிஸ்க்ஸன் (ஜெர்மன் பாராளுமன்ற உறுப்பினர் -கிறீன் பார்ட்டி), ஹென்னர் குனோர் (மனித உரிமையாளர்), கெரிட் புஷ் (பத்திரிகையாளர், மனித உரிமையாளர்), பார்பரா நேன்டர் (வழக்கறிஞர், அரசியல் தஞ்சம் குறித்த விடயங்களில் நிபுணர்)

சுவிட்ஸர்லாந்திலிருந்து ஹில்டிகார்ட் லென்ஸ் மெத்தீஸ் (மனித உரிமைகள் தகவல் நிலையத்தின் பணிப்பாளர்), பீட்ரிஸ் ஷ்வெகார் (மனித உரிமையாளர்), அன்ரி அம்மொன் (இவர்கள் இருவரும் அரசியல் தஞ்சம் குறித்த விடயங்களில் நிபுனத்துவமுடையவர்கள்)

இந்த மனித உரிமைகள் நடவடிக்கை குழு இந்த மாதத்திலிருந்து மூன்று மொழிகளிலும் இலங்கையில் மனித உரிமைகள் குறித்த செய்தி மடலை வெளியிட உள்ளது. ஆங்கிலத்தில் Huract.com.news, தமிழில் "மனிதம்", சிங்களத்தில் "சங்விஹித்த" என்கின்ற பெயரில் அவை வெளிவரவிருக்கின்றன.

இதில் உள்ள விசேடம் என்னவென்றால், இவ்வளவு காலம் இப்படிப்பட்ட அறிக்கைகள் சிங்களத்தில் எழுதப்பட்டது தான் தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. இங்கு அவ்வவ் மொழியினராலேயே அவ்வவ் அறிக்கைகள் தயாரிக்கப்படவுள்ளன. அவற்றில் தேவையானவற்றை மட்டும் மொழிபெயர்க்க முடிவு செய்துள்ளோம்.

நடத்தப்பட்ட மாநாட்டில் ஒரு கையெழுத்து வேட்டையையும் தொடக்கி வைத்துள்ளனர். அதில் "கிருஷாந்தி வழக்கின் முடிவானது பல படுகொலைகளின் உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டி பாரபட்சமற்ற விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கக் கோரி இந்த கையெழுத்துகள் வாங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. பத்தாயிரம் கையெழுத்துக்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த கடிதம் சிங்களத்தில் மட்டும் ஏன் உள்ளது என்ற கேள்விக்கு பதிலளித்த போது "இந்தக் கோரிக்கையை எழுப்ப வேண்டிய கடப்பாடு, பொறுப்பும் சிங்கள மக்களுக்குத் தான் உள்ளது. எனவே தமிழ் மக்கள் இந்த கோரிக்கையை முன் வைக்க வேண்டியதில்லை. "என்றனர்.

இதை விட செம்மணி புதைகுழிகளைத் தோண்டக் கோரி சூரியகந்த, மற்றும் திவுலபிட்டி ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட பெற்றோர்களிடமிருந்து "எங்களுக்கு நேர்ந்தது அவர்களுக்கு நேர வேண்டாம்." என்ற கோரிக்கை அடங்கிய கையெழுத்தும் சேகரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

இந்த அமைப்புக்கு முறைப்பாடுகள், தகவல்கள் அனுப்புவதற்கும் தொடர்புகட்கும்:

966/3, தலங்கம தெற்கு, தலங்கம, இலங்கை எனும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இதன் e-mail விலாசம் huract@slt.lk

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன். இல. 07. கெகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 04.08.1998.